

# திருநீலகண்டர் அருளமுதம்

ஆரையம்பதி செங்குந்தர் வீதி

அருள்மிகு ஸ்ரீ திருநீலகண்ட விநாயகர் ஆலய


## மகா கும்பாபிஷேக மலர்

## 2008

ஆரையம்பதி செங்குந்தர் வீதி அருள்மிகு ஸ்ரீ திருநீலகண்ட
விநாயகர் தேவஸ்தான ஜீர்ணோத் தாரண அஷ்ட பந்தன
பஞ்சகுண்ட நூதன பிரதிஷ்டா திருக்குட திருமஞ்சன
*மகாகும்பாபிஷேக மலர்*

# திருநீலகண்டர் அருளமுதம்

**சர்வசித்து வருடம் தைத்திங்கள் 28ம் நாள் திங்கட்கிழமை**
**11.02.2008**



*வெளியீடு*

ஸ்ரீ திருநீலகண்ட விநாயகர் ஸ்ரீ முத்துமாரியம்மன்
ஆலய பரிபாலன சபையினரும்
கும்பாபிஷேகக் குழுவினரும்
செங்குந்தர் வீதி, ஆரையம்பதி

## வெளியீடு
ஆரையம்பதி ஸ்ரீ திருநீலகண்ட விநாயகர் ஆலய ஸ்ரீ முத்து மாரியம்மன் ஆலய பரிபாலன சபையினரும் கும்பாபிஷேகக் குழுவினரும்

## அச்சகம்
சண் அச்சகம்
இல.05.இருதயபுரம் மேற்கு,
மட்டக்களப்பு.
தொ.பேசி : 065-2222597

## அச்சகத் தொடர்பு
திரு.இரா.பிரதிபன்

## மலர்த்தொகுப்பு
சக்திதிரு.வீ.பரிபூரணானந்த முதலியார்

பக்கங்கள் : 100

பிரதிகள் : 500

11.02.2008 இல் இடம்பெற்ற கும்பாபிஷேக, 14.03.2008ல் இடம்பெற்ற சங்காபிஷேக நினைவாகவும் 2008.04.06ம் திகதி வெளியிடப்பட்டது.

## ஸ்ரீ திருநீலகண்ட விநாயகர் ஆலய பரிபாலன சபை
திரு.கண.யோகராஜா (தலைவர்),
திரு.ச.மணிசேகரன் (செயலாளர்),
திரு.வீ.பரிபூரணானந்த முதலியார் (பொருளாளர்),
திரு.த.பாலச்சந்திரன் (உபதலைவர்),
திரு.மா.யசோதரன் (உபசெயலாளர்),
திரு.சி.ஜினோரஞ்சன் (உபபொருளாளர்)

## நிர்வாக உறுப்பினர்கள்
திரு.பொ.இந்திரலிங்கம்,
திரு.பா.பிரபாந்தன்,
திரு.வீ.அற்புதானந்த முதலியார்,
திரு.செ.சோதிநாதன், திரு.ப.லக்ஷ்மன்,
திரு.கீ.சூர்யகாந், திரு.சி.பாலகுமார்.

## கணக்குப் பரிசோதகர்
திரு. சபாரெட்ணம் - ரெட்ணராஜ்

## ஆலோசகர்கள்
ஆசிரிய சிரோன்மணி.திரு.த.செல்வநாயகம்,
பூசகர்.திரு.சீ.சிவஞானமுதலி,
திரு.த.இராஜேஸ்வரன் (Re.M.L.T),
சட்டத்தரணி. திரு.வ.வினோபா இந்திரன்,
வைத்திய கலாநிதி.திரு.வா.ஞானரெட்ணம்,

## கும்பாபிஷேகக் குழுவினர்
திரு.இரா.பிரதீபன், திரு.மா.யசோதரன்,
திரு.சி.ஜினோரஞ்சன், திரு.பொ.இந்திரலிங்கம்,
திரு.பா.பிரபாந்தன், திரு.ப.காண்டீபன்,
திரு.கீ.சூர்யகாந்,
திரு.வீ.அற்புதானந்த முதலியார்,
திரு.நா.புஸ்பநாதன், திரு.கு.யசோதரன்
திருமதி.சௌ.சிவானந்தம்,
திருமதி.கோ.பாலசுப்ரமணியமுதலி,

## மலர்க்குழுவினர்
திரு.கண.யோகராஜா, திரு.ச.மணிசேகரன்,
திரு.வீ.பரிபூரணானந்த முதலியார்,
திரு.இரா.பிரதீபன், திரு.மா.யசோதரன்,
திரு.பொ.நாகலிங்கம், திரு.இ.கலையரசன்

உ







காராயுமை யல்லால் கதி கணேனடி யேனே
யோராமல் கெல்லாந்தரு வெந்தாயுமை மைந்தா
பாரர் தொழும் பொருளேயிசை பண்ணேயிரு கண்ணே
சீராரையம் பதிமாமுக சிவமே பிரணவமே

# மட்டக்களப்பு, ஆரையம்பதி செங்குந்தர் வீதி, அருள்மிகு ஸ்ரீ திருநீலகண்ட விநாயகர் தேவஸ்தான, ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன பஞ்சகுண்டபட்ஷ நூதன பிரதிஸ்டா

# மகா கும்பாபிஷேகப் பெருவிழா விஞ்ஞாபனம் - 2008

| கிரியா ஆரம்பம் | எண்ணெய்க்காப்பு | மகா கும்பாபிஷேகம் |
|---|---|---|
| 07.02.2008 வியாழக்கிழமை | 09.02.2008 காலை 10 மணி முதல் 10.02.2008 பகல் 2 மணி வரை | 11.02.2008 சனிக்கிழமை |

இலங்கை மெய்யடியார்களே!

சுவர்ணபுரி, சிவபுரி எனப் பேற்றித் துதிக்கப்படுவதும் ஸ்ரீ தெட்சண கைலாயமெனவும் தேவாரப் பதிகங்கள் பாடப் பெற்றதுமாகிய சிவதலங்களை தன்னகத்தே கொண்டதும், இந்து மகா சமுத்திரத்தில் முத்தாக விளங்குவதுமான இலங்கைபுரியில் இயற்கை எழிலும் சைவமும் தமிழும் தழைத்தோங்குவதும், சிவசீலர்களும் தர்மவான்களும் வாழ்வதுமான மட்டக்களப்பின் தென்பால் ஆரையம்பதி செங்குந்தர் வீதிதனில் வீற்றிருந்து வேண்டுவோர்க்கு வேண்டும் வரங்களை வாரி வழங்கி அருளாசி புரியும் ஓங்கார பிரணவ சொரூபனாம் ஸ்ரீ திருநீலகண்ட விநாயகப் பெருமானுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் நிகழும் மங்களம் நிறைந்த சர்வசித்து வருடம் தைத்திங்கள் 28ம் நாள் (11.02.2008) பஞ்சமி திதியும் ரேவதி நட்சத்திரமும் சித்தயோகமும் சேர்ந்து வரும் காலை 9.40 மணி முதல் 10.15 மணி வரையுள்ள மீன லக்ன சுபவேளையில் வேதியர் வேதகீத ஸ்தோத்திர கீதத்த சங்க மங்கள வாத்தியம் முழங்கவும் தேவர்களும் முனிவர்களும் பூமாரி பொழியவும் மஹாகும்பாபிஷேகப் பெருவிழா நடைபெற திருநீலகண்ட விநாயகப் பெருமானின் திருவருள் கூடியுள்ளதால் அத்தருணம் இத் தேவ நிகழ்வில் கலந்து கொண்டு எம்பெருமானின் அருட்கடாட்சம் பெற்றுய்வீர்களாக!

## கிரியா நிகழ்வுகள்

**சர்வசித்து வருடம் தைத்திங்கள் 24ம் நாள் (07.02.2008) வியாழக்கிழமை**

காலை 10.30 மணிமுதல் : விநாயகர் வழிபாடு, எஜமான் சங்கற்பம், புண்ணியாக வாசனம், பிராம்மண அனுக்ஞை, திரவிய சுத்தி, திரவிய விபாகம், மகா கணபதி ஹோமம், மகா லட்சுமி ஹோமம், நவக்கிரக ஹோமம், பேரிதாடனம், கோபூஜை, விபூதி பிரசாதம் வழங்கல்.

மாலை 5.00 மணிக்கு : விநாயகர் வழிபாடு, புண்ணியாக வாசனம், ரக்ஷோக்ன ஹோமம், திக்ஹோமம், சாந்தி ஹோமம், மூர்த்தி ஹோமம், கிராமசாந்தி, பிரவேச பலி, வாஸ்துசாந்தி, விபூதி பிரசாதம் வழங்கல்.

**சர்வசித்து வருடம் தைத்திங்கள் 25ம் நாள் (08.02.2008) வெள்ளிக்கிழமை**

காலை 9.00 மணிக்கு : விநாயகர் வழிபாடு, புண்ணியாக வாசனம், மிருத்சங்கிரணம், கொடி யேற்றுதல், புதிய மூர்த்திகள் நயனோன்மீலனம், தான்யாதிவாசம், சயனாரோஹணம், சூர்யாக்னி சங்கிரணம், விபூதி பிரசாதம் வழங்கல்.

மாலை 4.00 மணிக்கு : விநாயகர் வழிபாடு, புண்ணியாக வாசனம், அங்குரார்ப்பணம், சிவாச்சார்ய ரட்சாபந்தனம், பிரசன்ன பிஷேகம், பிரசன்னபூஜை, கடஸ்தாபனம், கலாகர்ஷணம், கும்பம் யாகசாலை பிரவேசம், யாகபூஜை.

இரவு 7.00 மணிக்கு : ஸ்தூபிஸ்தாபனம், பிம்பஸ்தாபனம், யந்திரஸ்தாபனம், விம்பஸ்தாபனம், அஷ்டபந்தனம், விபூதி பிரசாதம் வழங்கல்.

**சர்வசித்து வருடம் தைத்திங்கள் 26ம் நாள் (09.02.2008) சனிக்கிழமை**

காலை 9.00 மணிக்கு : விநாயகர் வழிபாடு, புண்ணியாக வாசனம், விசேட சந்தி, யாகசாலை பிரவேசம், தைலாப்பியங்கம், யாகபூஜை, பஞ்சகுண்டபூஜை, அக்னிவிஜனம், தீபாராதனை, வேதஸ்தோத்திர தேவார பாராயணம் விபூதி பிரசாதம் வழங்கல்.

மாலை 4.00 மணிக்கு : ஆலய முன்றலில் விசேட மேளக் கச்சேரி நடைபெறும்.

மாலை 5.00 மணிக்கு : விநாயகர் வழிபாடு, புண்ணியாக வாசனம், பூதசுத்தி, யாகசாலை பிரவேசம், பாவனாபிஷேகம், அக்னிகார்யம், விசேட திரவிய ஹோமம், திரிசதி ஹோமம், தீபாராதனை, வேத ஸ்தோத்திர திருமுறை பாராயணம், கீதசமர்ப்பணம், விபூதி பிரசாதம் வழங்கல்.

**சர்வசித்து வருடம் தைத்திங்கள் 27ம் நாள் (10.02.2008) ஞாயிற்றுக்கிழமை**

காலை 9.00 மணிக்கு : விநாயகர் வழிபாடு, புண்ணியாக வாசனம், விசேடசந்தி, யாகசாலை பிரவேசம், யாகபூஜை, பாவனாபிஷேகம், அக்னிகார்யம், விசேட திரவிய ஹோமம், திரிசதி ஹோமம், தீபாராதனை, வேதஸ் தோத்திர திருமுறை பாராயணம், விபூதி பிரசாதம் வழங்கல்.

மாலை 5.00 மணிக்கு : விநாயகர் வழிபாடு, புண்ணியாக வாசனம், விம்பசுத்தி, சுவாமிபட்டிஷ பந்தனம், யாகபூஜை, பூர்ண சந்தானம், பச்சிமசந்தானம் )ஸ்பர்சாகுதி) வஸ்திர உபசாரம், தீபாராதனை, வேதஸ்தோத்திர திருமுறை பாராயணம், கீத சமர்ப்பணம், விபூதி பிரசாதம் வழங்கல்.

**சர்வசித்து வருடம் தைத்திங்கள் 28ம் நாள் (11.02.2008) திங்கட்கிழமை**

காலை 7.00 மணிக்கு : விநாயகர் வழிபாடு, புண்ணியாக வாசனம், மஹாபூர்ணாகுதி, தீபாராதனை, வேத ஸ்தோத்திர திருமுறை பாராயணம், ஆசீர்வாதம், நாதாஞ்சலி, அந்தர்பலி, பகிர்பலி, யாத்ராதானம், கும்ப உத்தாபனம்.

காலை 9.00 மணிக்கு : ஸ்தூபலிங்க ஸ்தூபி அபிசேகமும் அதனைத் தொடர்ந்து 9.40 மணி முதல் 10.10 மணிவரையுள்ள மீனலக்னமும் .............. கூடிய சுபவேளையில், சங்க மங்கள மூர்த்தி வேதகோச நாதவாத்தியங்கள் முழங்க மஹா கும்பாபிஷேகம், பரிவார மூர்த்திகள் அபிஷேகம், மஹா ஹவிர் நிவேதனம், தசமங்கள தரிசனம், எஜமான் அபிஷேகம், மஹா அபிஷேகம், ஆசார்ய சம்பாவனை, விசேட பூஜை, ஆசீர்வாதம், விபூதி பிரசாதம் வழங்கல், மகேஸ்வர பூஜை இடம்பெறும்.

மாலை 6.00 மணிக்கு : விசேட பூஜையுடன், சுவாமி பூந்தண்டிகையில் விநாயகப் பெருமான் திரு வீதி உலா வலம்வருதல் இடம்பெறும்.

**09.02.2008 சனிக்கிழமை காலை 10 மணிமுதல் 10.02.2008 ஞாயிற்றுக்கிழமை மாலை 2 மணிவரை எண்ணெய்க்காப்பு சாத்துதல் நடைபெறும்.**

## பிரதிஷ்டா சிவாச்சாரியர்கள்

பிரதிஷ்டா சிரோமணி நயினை

**பிரம்மஸ்ரீ சுவாமிநாத பரமேஸ்வர சிவாச்சாரியார் அவர்களின் அருள் ஆசியுடன்**

**பிரதிஷ்டா பிரதம குரு**
வைதிக சிரோமணி வேதாகம வித்யாபதி சிவாகம குருமணி
குமார விக்னேஸ்வர சிவாச்சாரியார்
(மஹரிஷி இந்துக் கருமாதிபதி - மட்டக்களப்பு)

**சர்வசாதகம்**
வேதாகம உதயசூரியன்
பிரம்மஸ்ரீ சௌந்தரராஜன் குருக்கள்
(ஸ்ரீ காளி கோயில் - இந்தியா)

**ஆலய பிரதம குரு**
சிவஸ்ரீ வே.கருணாகரன் குருக்கள்
(ஸ்ரீ திருநீலகண்ட விநாயகர் ஆலயம்
செங்குந்தர் வீதி, ஆரையம்பதி)

**உபசாதகர்கள் (தொடர்ச்சி)**
பிரம்மஸ்ரீ சிவசங்கர சர்மா
(திருகோணமலை)

**ஸர்வ போதகம்**
சிவாகமமணி பிரம்மஸ்ரீ
இரத்தினக் குருக்கள் (வவுனியா)
வித்தியாசாகரம் சுந்தர
திவாகரக் குருக்கள் (மட்டக்களப்பு)

**உப சிவாச்சாரியார்கள்**
பிரம்மஸ்ரீ சண்முகநாதக் குருக்கள் (திருகோணமலை)
சிவாகம சிரோமணி நடேஸ்வரக் குருக்கள் (மன்னார்)
வித்தியாபூஷணம் பிரம்மஸ்ரீ லக்ஸ்மி காந்த ஜெகதீஸ்வரக் குருக்கள் (MCOM, BCA, DIT - கொழும்பு)

**சாதக சர்மாக்கள்**
பிரம்மஸ்ரீ பத்மநாப சர்மா (கண்டி).
பிரம்மஸ்ரீ கருணாகர சர்மா (கண்டி).
பிரம்மஸ்ரீ மகேந்திர சர்மா,
சிவஸ்ரீ சண்முகக் குருக்கள்
சிவஸ்ரீ ஜெகதீஸ் குருக்கள்

**கீர்த்தனம்**
மட்டக்களப்பு தெய்வீகக் கலைமாமணி
துரைசிங்கம் ஜெகதீஸ்வரன்
குழுவினர் (ஆரையம்பதி)

**நாதஸ்வர நிகழ்வு**
திரு.க.சிறிதரன் (ஆரையம்பதி)
திரு.சிவேஸ் குழுவினர் (அக்கரைப்பற்று)

**சித்திர அமைப்பு**
திரு. ...... காசர்வசன் (மட்டக்களப்பு)
திரு. ...... ராஜேந்திரம் (வவுனிக்கன் - இந்தியா)

**மங்கள வாத்தியம்**
சுரேஷ் குமார் குழுவினர்
(கல்முனை)

பிரசுர அன்பளிப்பு
காலஞ்சென்ற கலாநிதி இரா.பத்மராஜசன் அவர்களின்
நினைவாக அன்னாரது குடும்பத்தினர்.

இவ்வண்ணம்
கும்பாபிஷேக ஏற்பாட்டுக் குழுவினரும், ஆலய பரிபாலன சபையினரும்.
ஸ்ரீ திருநீலகண்ட விநாயகர் ஆலயம், செங்குந்தர் வீதி, ஆரையம்பதி.

# பொருளடக்கம்


**(1) ஆசியுரைகள்**

(i) சிவஸ்ரீ வே.கருணாகரன் குருக்கள் 06

(ii) சிவஸ்ரீ குமார விக்னேஸ்வரக் குருக்கள் 07

(iii) சிவஸ்ரீ சந்திரசேகரக் குருக்கள் 08

(iv) திரு.எஸ்.தெய்வநாயகம் (உதவிப் பணிப்பாளர்) 09

(v) விஸ்வப் பிரம்மஸ்ரீ வை.இ.எஸ்.காந்தன் குருக்கள் 10

**(2) வாழ்த்துச் செய்தி**

(i) திரு.க.யோகராஜா (ஆலயத் தலைவர்) 12

(ii) திரு.த.கனகசபை (பா.உறுப்பினர்) 13

(iii) செல்வி.க.தங்கேஸ்வரி (பா.உறுப்பினர்) 14

(iv) திரு.சி.அமலநாதன் (பிர.செயலாளர் - ம.பற்று) 15

(v) திரு.சீ.யோகேஸ்வரன் (மட்.மாவட்ட.இந்து.இ.ம.த.) 16

(vi) திரு.சி.க.பொன்னம்பலம் (சமாதான நீதவான்) 17

(vii) திரு.இரா.நாகலிங்கம் (அன்புமணி) 19

(viii) திரு.சீ.சிவஞானமுதலி (பூசகர்) 20

(ix) திரு.வ.வினோபா இந்திரன் 21
(பதில் நீதவானும், சட்டத்தரணியும்)

(x) வைத்திய கலாநிதி வா.ஞானரெட்ணம் 22

(xi) திருமதி.நேசசவுந்தரி தங்கவடிவேல் (அதிபர்) 23

**(3) ஆக்கங்கள்**

(i) ஆலய வரலாறு 24
(வி.பரிபூரணானந்த முதலியார்)

(ii) திருநீலகண்ட விநாயகர் அகவல் (இலக்கியமணி 32
ஆரையூர் அமரர்.நல்.அழகேச முதலியார்)

(iii) திருநீலகண்ட விநாயகர் திருப்புகழ் 33
(செல்வி.சிவ.திருமலர்ப்பாக்கியம்)

(iv) சிறப்புப் பாயிரம் (தென்னிந்திய தருமபுரியைச் 34
சேர்ந்த திரு.ம.ற.ற.தனிகாசல முதலியார்)

(v) திருநீலகண்ட விநாயகர் பதிகம் (தெ.இந்திய 36
தருமபுரி ஆதின குருமுதல்வர் சதோதய முனிவர்)

(vi) திருநீலகண்ட விநாயகர் பாமாலை (தெ.இந்திய 40
தருமபுரி ஆதின குருமுதல்வர் சதோதய முனிவர்)

(vii) திருநீலகண்ட விநாயகர் பொன்னூஞ்சல் 46
(அமரர்.டாக்டர்.சிவ.சோமசுந்தரம்)

(viii) செங்குந்தர் பெருமை கூறும் இலக்கியச் செய்யுள்கள் 48

(ix) செங்குந்தர்குல வரலாற்றுத் தொன்மையும்,
ஸ்ரீ திருநீலகண்ட விநாயகர் ஆலயமும் 51
(ஆசிரிய சிரோன்மணி.த.செல்வநாயகம்)

(x) ஆலய வழிபாடும் ஆத்மீக வழிபாடும் 53
(செல்வி.ப.யுகேதகாந்தா)

(xi) விநாயகர் தத்துவமும் பெருமையும் 61
(திரு.பொ.நாகலிங்கம்)

(xii) மட்டக்களப்பு தமிழகத்தில் செங்குந்தர்
வருகையும் இருப்பும் (திரு.ச.மணிசேகரம்) 64

(xiii) கும்பாபிசேக முறைகளும் விளக்கங்களும் 66
(திரு.மா.யசோதரன்)

(xiv) விநாயகர் சதுர்த்தி விரதம் 72
(திரு.சி.ஜெயபிரசாந்)

(xv) மாரியம்மன் தொடக்கமும் வரலாறும் 75
(திரு.ப.காண்டீபன்)

**(4) பொது**

(i) ஆரையூரில் செங்குந்தர்குல ஒளிவிளக்குகள் 77

(ii) ஆலயத்தில் தொண்டாற்றிய நிர்வாக சபைகள் 85

(iii) 1974ல் இடம்பெற்ற கும்பாபிஷேக விஞ்ஞாபனம் 90

(vi) 1996ல் இடம்பெற்ற பாலஸ்தாபன விஞ்ஞாபனம் 92

(v) ஆலயத்தில் இடம்பெற்ற முக்கிய
நிகழ்வுகளின் புகைப்படங்கள் 93

(vi) மண்டலாபிஷேக பூசை உபயகாரர்கள் 98

(vii) ஆலயத் திருப்பணிகளில் உதவியவர்கள் 99

(viii) நன்றியுரை 100

# முன்னுரை

## "மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்"

சைவமும் தமிழும் ஆங்கிலம் முப்புரி நூல் போன்று விளங்கும் ஆரையம்பதியின் கண்ணே செங்குந்தர் வீதியில் 16 ம் நூற்றாண்டு காலப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்டதும் இந்தியாவின் தர்மபுரி ஆதின முதல்வர் சசோதய முனிவரினால் பாடப்பட்ட தலமுகமாகிய ஸ்ரீ திருநீலகண்ட விநாயக தேவஸ்தான ஜீர்னோத்தாரண அஷ்டபந்தன பஞ்சகுண்ட நூதன பிரதிஸ்ட மகாகும்பாபிஷேகப் பெருவிழா 2008.02.11 ம் திகதி அன்று இடம் பெற்று மண்டலாபிஷேக நிகழ்வு நன்னாளினை முன்னிட்டு இந்நூல் வெளியிடப்படுகின்றது. இந்நூலினை வெளியிடுவதற்கு நூல் குழுவினர் எடுத்த முயற்சியின் பயனாக இது வெளியிடப்படுகின்றது. குறுகிய காலத்தினுள் வெளியிடப்பட இருந்ததனால் பல சிக்கல்களினை எதிர் நோக்க வேண்டியிருந்தது.

அதனால் குறைகளும் நேர்ந்திருக்கலாம். பல ஆக்கங்கள் உரிய வேளையில் வந்து சேரவில்லை.சில தாமதமாகியும் கிடைத்தது உண்டு. இம்மலரின் மணம் சேர்ப்பதற்காக ஆசிச் செய்திகள், வாழ்த்துச் செய்திகள், வாழ்த்துப்பா, திருப்பொன்னூஞ்சல், அகவல், பதிகம், பிரணவட்டகம், பாமாலை, ஆலய வரலாற்றுக்கட்டுரைகள், சமய நன்னெறிக் கட்டுரைகளும் மற்றும் பல ஆக்கங்களும் இடம்பெற்றிருப்பது சிறப்பைத் தரும் என எதிர்பார்க்கின்றோம். சைவ மக்களின் பேராதரவு இம்மலருக்கு நிச்சயம் உண்டு. என்ற நம்பிக்கையோடு எல்லாம் வல்ல எம் பெருமான் விநாயகர் ஆலய ஸ்தாபகர், தர்மகர்த்தாக்கள், ஆலயத் தொண்டர்கள், பெருமானுக்கு பூசை செய்த குருமார்கள் போன்றோர் தங்களை அர்ப்பணித்து தொண்டு செய்து எம்மிடம் அவர்களின் தொடர்பணியினை விட்டு இறைவனடி சேர்ந்த அந்தப் பெருமக்களின் பாத கமலங்களுக்கு இம்மலரை காணிக்கையாக சமர்ப்பணம் செய்கின்றோம்.

"திருநீலகண்ட விநாயகப் பெருமானின் அருள் அனைவருக்கும் கிடைப்பதாக"

சுபம்.

இவ்வண்ணம்
மலர் வெளியீட்டுக்குழு
செங்குந்தர் வீதி
ஆரையம்பதி - 02.

## ஆசியுரை

"ஞாலம் நின்புகழே மிகவேண்டும் ஆரை
எல்லைவாயில் உறையும் எம் ஆதியே"

தமிழ் நாகரிகமும் கலாச்சாரமும் பண்பாடும் பரவி விளங்கும் மட்டக்களப்பு ஆரையம்பதி வாழ் தமிழ்மக்கள் தமிழ்மொழிப்பற்றும் சமயஉணர்வும் உடையவர்கள். அதனால்தான் ஆரையம்பதி எங்கும் கோவில்கள் நிறைந்திருக்கின்றன என்று சொன்னால் அது மிகையாகாது. அவற்றிலே மிகப்பழமை வாய்ந்த 16ம் நூற்றாண்டில் உருவான ஆலயம் ஸ்ரீ திருநிலண்ட விநாயகர் ஆலயமாகும். கடந்த 12 ஆண்டுகளுக்கு முன் பாலஸ்தாபனம் செய்யப்பட்டிருந்து இன்று கும்பாபிஷேக விழா காணுகிறது.

இவ்வாலயத்தில் அடியேன். கடந்த 13 ஆண்டுகளாக எம்பெருமானுக்கு இறைபணி செய்கின்ற பாக்கியத்தைப் பெற்றிருக்கின்றேன். இக்காலத்தில் திடீர் வசமாக எனக்கு ஏற்பட்ட உயிராபத்துக்கள் கூட எம் பெருமான் திருவருட்கடாட்சத்தில் பனிபோல நீங்கியிருக்கிறது என்பது வெளிப்படையான உண்மை.

இத்தகைய அருள்சுரக்கும் இத்திருக்கோவில் அன்பர்கள் பலரின் ஆக்கத்தினையும் ஊக்கத்தினையும் துணையாகக் கொண்டு பெரும் பொருள் சேர்த்து சிறந்த முறையில் திருப்பணிகள் செய்வித்து புனராவர்த்தன மகாகும்பாபிஷேக விழாவை சிறப்பாக நடாத்தும் முயற்சியை மேற்கொண்ட ஆலயபரிபாலன சபையினரையும், கும்பாபிஷேக ஏற்பாட்டுக் குழுவினரையும் எம்பெருமான் திருவருள் துணைகொண்டு ஆசிக்கின்றேன்.

கும்பாபிஷேக விழா யாதொரு விக்கினமுமின்றிச் சிறப்பாக நடந்தேறவும் அதில் பங்குகொள்கின்ற ஏற்பாட்டுக்குழு அன்பர்களும் மற்றும் பக்தர்களும் எல்லா நலன்களும் பெற்றுத் திகழவும் திருவருள்பாலிக்குமாறு எல்லாம் வல்ல திருநீலகண்ட விநாயகப் பெருமானை பிரார்த்தித்து இறைஞ்சுகின்றேன்.

*சிவம்*

ஸ்ரீ திருநீலகண்ட விநாயகர் ஆலய பிரதம குரு
சிவஸ்ரீ வே. கருணாகரன் குருக்கள்

## ஆசிச் செய்தி

"பிரணவப் பொருளாம் பெருந்தகை ஐங்கரன்
சரண அற்புதமலர் தலைக் கணிவோமே"

விநாயகப் பெருமான் பிரணவ சொருபியாக விளங்குகிறார். பிரணவம் ஓம் என்னும் மூலமந்திரத்தை ஆதாரமாகக் கொண்டு விளங்குகிறது. ஆதியும் அந்தமும் இல்லாத பரம்பொருளிலிருந்து உண்டாகிய படைப்பு "ஓம்" என்னும் பிரணவ நாமமே ஆகும். ஓம்கார ஒளிகளுக்கெல்லாம் மூலமாக விளங்குவது விநாயகப்பெருமானின் யானைமுகம். இவ்விநாயகர் திருநீலகண்ட பெருமானின் நாமத்தை தன்னகத்தே கொண்டு திருநீலகண்ட விநாயகப் பெருமானாக ஆரையம்பதியில் அமர்ந்து அருள்வழங்குகின்றார்.

ஆகமக்கிரிகைகளை நான்கு பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை கர்ஷணம், பிரதிஷ்டை, உற்சவம், பிராயச்சித்தம் என்பனவாகும். அவற்றுள் பிரதிஷ்டை என்பது நான்கு வகைப்படும். அவை அநாவர்த்தனம், ஆவர்த்தனம், புனராவர்த்தனம், அந்தரிதம் என்பனவாகும். இதனடிப்படையில் ஆரையம்பதியில் மஹா கும்பாபிஷேகம் கண்டிருக்கின்ற ஸ்ரீ திருநீலகண்ட விநாயகப் பெருமானது பெரும்கருணையினால் இத்திருப்பூமியில் நிலையான சந்தான வாழ்வும், அமைதியும் நிலைக்க வாழ்த்துவதுடன், இக்குட முழுக்கு விழா சேவைதனில் தங்களை அர்ப்பணித்து செயலாற்றி வரும் அடியார்களுக்கும் பரிபாலகர்களுக்கும், கும்பாபிஷே குழுவினர்களுக்கும் இலங்கைத் திருநாட்டிலே வாழ்ந்து கொண்டிருக்கும் அனைவருக்கும் திருநீலகண்ட விநாயகப் பெருமானது அருள் கிடைக்கவும் அவர்களது பணி தொடரவும் வேண்டி பிரார்த்திப்போமாக.

"ஷர்வே ஜனாஹா சுகினோ பவந்து."

என்றும்
இறைபணியில் வேதாகம வித்யாபதி
**சிவஸ்ரீ குமார விக்கினேஸ்வர குருக்கள்.**

## ஆசிச் செய்தி

உ

விநாயகர் துணை

"பாரி லுயிர்கள் பழவினைகள் தானீக்கிச்
சேரவே தந்தருளுஞ் சிவலோகம் ஆரற்பதிக்
காள கண்டன் கருணையினாற் பெற்ற
நீலகண்டக் கணபதியை நினை."

ஓம் ஆம். முதல் வழிபாடு விநாயகரென்று விதந்து கூறுகின்றது இந்து மதம். காரணம் ஏன் பொதுவாக ஜீவராசிகள் சிறப்பாக மனிதன் மூலாதாரத்தில் மூண்டெழுங் கனல் இது சந்தி. இதிலிருந்து சுவாசத்தில் "ம்" ஓசை இசைக்க ஆதார சுருதியிருப்பது போல் நாம் பேசுவதற்கு மொழிபிறப்பதற்கு ஆதார நாதம் இது தான் ஓங்காரம். இதுதான் விநாயக வடிவம். ஓம் தான் விநாயக வடிவம் வழிபாடு செய்யுங்கள் என்றார்கள். சித்தர்கள் ஞானிகள் ஆன்மிக துறவிகள் வழிபடுவார்கள். மற்றும் மனித சமுகம் திருப்திப்படாது அவர்களையும் ஆன்ம பக்குவம் செய்ய வேண்டும் என்பதற்காக இப்படி மனித, மிருக அம்சம் அமைய நமது இந்து மத ஆன்மீக அறிஞர்களால் வகுக்கப்பட்டது. இதனால் எம்மதத்தவரும் வழிபடும் தெய்வமாக விநாயகப் பெருமான் அமைகின்றார். விநாயகப் பெருமானை எந்த நேரம் தியானிக்கலாம். விநாயகப் பெருமானை தியானிப்பது நாத ஆராதனை வட இந்தியாவில் ஆச்சிரம் ஒன்றுள்ளது. பிரத்தியட்சம் ஆக சிவலிங்கம் வைக்கப்பட்டுள்ளது. வெளிநாட்டவரும் அதிகமாக வந்து மாதக் கணக்கில் நாதாராதனை செய்வார்கள். வேறு மந்திரங்கள், பஜனையோ செய்வதில்லை. போகும் போது மிக மகிழ்ச்சியாக இருக்கின்றது என்று சொல்லி செல்வார்கள். ஆம் அப்படியென்ன விசேடம் இருக்கின்றது. பால் அபிஷேகம் நிவேதன பூசை இவைகள் பிரத்தியட்ச பூசை மலர்த் தொடை சாத்துவது ஆலயம் வருபவர்களை மனப் பக்குவமாக செயற்பட வைப்பது. விபுலாநந்த அடிகளின் வேதவாக்கு என்ன? (வெள்ளை நிற பூவல்ல உள்ளக்கமலமடி உத்தமனார் வேண்டுவது) விதந்து உரைக்கின்றார். எல்லாரையும் ஆன்ம வசம் செய்யும் தரும் காரியங்களைச் செய்கின்ற நாம் எம்மையும் திருத்திக் கொள்ள வேண்டும் அல்லவா? ஆலயங்களில் பஜனை வைக்கும் பொது முன் ஐந்து நிமிடங்கள் நாத ஆராதனை செய்யுங்கள்.

எப்படி ஓ என்ற சொல் மூலாதாரத்தில் தோன்றி 3 செக்கன் இசை ஒலித்து சிரசில் ம் உடன் முடிவடையும். 5-10 நிமிடம் வரை செய்து விரும்பிய வேதநாமங்களை சொல்லிக்கொள்ளலாம். இதுதான் விநாயக வணக்கம். நாத ஆராதனை இப்படி 3 மாதம் ஆலயங்களில் பஜனை செய்து வாருங்கள் உங்கள் உணர்வலைகளில் தோன்றும் எண்ணங்கள் மனசௌக்கியம் எப்படி அமைகின்றது என்பதை நீங்களே அறிந்து கொள்வீர்கள். ஏன் நீங்கள் தனியாக உங்கள் வீடுகளிலே வழிபாடு செய்யும் அறையிலும் காலை மாலை ஐந்து நிமிடங்கள் நாத ஆராதனை செய்து வாருங்கள். உள்ளத்தினுள்ளே ஒளிரும் ஒளியறிவு உங்கள் மனதில் தென்படும் இதை மன உறுதியுடன் வாழ்நாளில் செய்து வர அன்னமயகோசமாகிய இந்த உடம்பு பிராணமய கோசமாக மாறும் சுவாசநாதம் இயங்கும் 4 நாள் உணவருந்தி 40 நாள் உணவருந்தாவிட்டாலும் எவ்விதபயமுமில்லை. தேகத்தில் சத்திரசிகிச்சை செய்தாலும் நோவலி தெரியாது. நீலகண்ட விநாயகர் பெருமை செயற்பாடு வழிபாட்டு மகிமை ஆயிரந்தலை ஆதிசேடனால் ஒருவாறு கூற முடியும்.

பல்வகை வளங்களும் பற்பல கவிஞரும் செல்வரும் அறிஞரும் ஆசிரிய குழாமும் அறப்பணி தொடர்பவர் யாவரும் வாழ்கிராமம் தற்கால கால பேதத்தால் நலிவடைந்திருந்தும் இப்படி மகா கும்பாபிஷேகமும் ஆலய திருப்பணியும் நடந்ததைக் கேட்டு மகிழ்ச்சி அடைகிறேன். 75,78 காலப்பகுதியில் எனக்கு நீலகண்ட விநாயகப் பெருமானுக்கு பூசை செய்யும் பாக்கியம் கிடைத்தது பெரும்பேறு.

சுபம்.

இவ்வண்ணம்
பிரம்மஸ்ரீ சந்திரசேகர குருக்கள்
கொழும்பு - 13.

හින්දු ආගමික හා සංස්කෘතික කටයුතු දෙපාර්තමේන්තුව
இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்
**Department of Hindu Religious and Cultural Affairs**


| | | | | | |
|---|---|---|---|---|---|
| අධ්‍යක්ෂ<br>பணிப்பாளர்<br>Director | 2552643 | ෆැක්ස්<br>தொலைநகல்<br>Fax | 2552825 | ඊමේල්<br>மின் அஞ்சல்<br>E-Mail | hindudir@yahoo.com |
| පොදු<br>பொது<br>General | 2552641 | | | වෙබ් අඩවිය<br>இணையதளம்<br>Website | www.hindudept.gov.lk |
| මගේ අංකය<br>எனது இல<br>My No | | ඔබේ අංකය<br>உமது இல<br>Your No | | දිනය<br>திகதி<br>Date | 2008.02.08 |


## இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் உதவிப்பணிப்பாளர் சீ.தெய்வநாயகம் அவர்களின் ஆசிச்செய்தி

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆரையம்பதி பிரதேச செயலாளர் பிரிவில் தமிழும், சைவமும் தளைத்து நின்று பெருமை பெறும் கிராமம் ஆரையம்பதியாகும்.

இக்கிராமத்தில் நிலைகொண்டு அருளாட்சி புரியும் ஸ்ரீ திருநீலகண்ட விநாயகப்பெருமான் ஆலயம் மிகவும் பழமை மிக்கது. இவ்வாலயத்தின் திருப்பணிகள் முடிவுற்று மகாகும்பாபிஷேகம் காண்பதையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம்.

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களமும் இவ்வாலயத்தின் புனரமைப்புக்காக, சிறிய உதவியினை வழங்க முடிந்ததையிட்டு மகிழ்ச்சியடைவதுடன் மகாகும்பாபிஷேகமும் நடைபெறுவதையிட்டு பெருமையடைகின்றது.

இறையருளின் தன்மையும், நம்பிக்கையும் இருந்தால், எதையும் வெற்றி கொள்ளலாம். அந்த வெற்றிக்கு விநாயகப்பெருமான் என்றும் துணை புரிவார். ஆரையம்பதி மக்களின் இன்னல்களைத் தீர்த்து, வழிகாட்டி நிற்கும் திருநீலகண்ட விநாயகப்பெருமானின் மகாகும்பாபிஷேகம் சிறப்புற நடந்து சங்காபிஷேகம் நிறைவேறி நாள்தோறும் பூசை வழிபாடுகள் இடம்பெறவேண்டும். அதுவே ஊருக்கும், உள்ளத்திற்கும் உயர்வழிப்பதாக அமையும்.

இவ்வாலயத்தின் திருப்பணிகளில், அயராது உழைத்திட்ட, அறங்காவலர்கள், ஊர் பொதுமக்கள், அனைவருக்கும் விநாயகரின் அருள் என்றும் நிலைத்து அவர்கள் வாழ்வில் சுபீட்சமும், சந்தோஷமும் கிடைத்திட விநாயகரின் அருள்வேண்டி எனது நல்லாசிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

எஸ்.தெய்வநாயகம்
உதவிப்பணிப்பாளர்

அகில இலங்கை இந்து தர்மோதய ஸ்தாபகர், பிரம்மாதீன குருகுலபீடாதிபதி, சித்தாந்த வித்தகர், செஞ்சொற் கொண்டல், செந்தமிழ் வாரிதி, சைவசமய கலாஜோதி, கிரியா கலாநிதி.ஆச்சாரியதீபம், பல்கலைப்புலவர், அருட்கவியரசு, விஸ்வப்பிரம்மம்.வை.இ.எஸ்.காந்தன் குருக்கள் ஐயா அவர்கள் வழங்கிய

# வாழ்த்துப்பா

ஓம்சக்தி ஓம்பராசக்தி
குடமுழுக்குப் பெரும் சாந்தி
நிறைவுகண்டு அருள்மழை
தேசமெலாம் பொழிக பல்லாண்டு.

மட்டுநகர் திக்கெட்டும் புகழ் கொண்ட தெய்வபூமி
கட்டித் தயிர் முட்டித் தேன் கலந்து தித்திக்கும்
செந்நெற்கனி திளைத்து ஓடும் பெரும்வாவி
பொன் நெற்குவியல் பொலிவுகின்ற போர் மலைகள்
ஆழிக்கடலலை ஆர்ப்பரிக்கும் பெருமுழக்கம்
காதல் கனிய கனிந்தமிழில் மொழி குழைய
சாதல்தனை துச்சமென எண்ணும் தகைமணத்தார்
சோலைப் பசுங்கிளிகள் தூய குரல் இசைபாட
காலை இளங்கதிரோன் கடல்பரவி முகம் காட்ட
மட்டுநகர் அன்னை மீனிசையால் துயில் எழுவாள்
தட்ட விழி நெய்தலிலே நானிலமோ வாழ்வோங்கும்
தேனாடாள் என்ற சீர்மிகு நித பெண்மகளால்
நானார்ந்த திறமையெல்லாம் நானென்றே மார் தட்டும்
பல்துறையில் வித்தகத்தார் பயன்கொள்ளும் நற்பதியாம்
வல்லபுகழ் செங்குந்தர் வரவேற்கும் தலைவாசல்
காத்தநகர் கடந்தால் கவினார்ந்த ஆரை நகர்
பூத்திகழும் தெய்வ பூரணத்துள் பொலிவோங்கும்
சீராராம் ஆரையூரில் திகழ் எல்லை நல்லிடத்தில்
பேரருளை சொரிவதற்கு பெருங்கோயில் கொண்டுறையும்
அன்னையுடன் வீற்றிருக்கும் அரன் அவனின் பெயர் புனைந்தோன்
"திருநீலகண்டர்" எனும் செல்வக் கணபதியாம்
அன்னவனின் திருக்கோயில் அருள் பூத்த பெரும் சாந்தி
நன்னலமாய் நிறைவோங்க நடந்தவொரு குடமுழுக்கு
உலகமெலாம் சாந்தி பெற்று கலகமெலாம் நீங்கிடவே
பலமிழந்த தமிழினத்தார் பயனோங்கி வாழ்வதற்கு
வேழமுகப் பன்னவனே வெற்றி பெரு கொம்புடையாய்
தாழநின் தாழ்ப்பணிந்து சாந்தி பெற வேண்டுகின்றேன்.
பழம் பெருமை வரலாற்றில் நின்பகுதிக்கும் சிறப்புண்டு.
உளம் கனிய உன் அன்னை மகமாரி உன்னருகில்
இடமுறைந்து உன்னை ஏற்றமுற அரவணைத்தாள்
நடம்பயில்வீர் இருவீரும் மக்களெலாம் நலம் பெறவே
முப்பது ஆண்டுகளாய் இம்மண்ணில் தொடர்புண்டு.
எப்போதும் என்மனத்தே வீற்றிருக்கும் உறவார்ந்தோர்

கவிதைத்துறை வல்லோன் கற்றபெரு மேதையினோர்
புவிபூத்த ஆசான்கள் புனிதமிகு நல்மனிதர்
ஆற்றலினைக் கைக்கொண்ட கைக்கோளர் வாழ்பதியில்
போற்றுதற்கரிய புனிதர்களைக் கண்டவன்யான்
உருவுடைய அன்னைக்கும் உளம் கனிய சேவை செய்தோன்
ஆதலினால் இந்த மண்ணில் அகம் நிறைந்த உறவுண்டு.
காதலினால் இவ்வாழ்த்தை கனிவோடு கூறுகின்றேன்.
அந்தணப் பெருமக்கள் அறம் காக்கும் காவலர்கள்
சிந்தைநிறை இளையோர்கள் சீர்தொண்டின் பெரியோர்கள்
ஊர் நிறைந்த பெருமக்கள் உள்ளார்ந்த சிந்தனையோர்
பார்வாழ வளம் கொழிக்கும் பல்லுயிரும் தாவரமும்
எல்லோரும் இம்மகிழ்வில் மகிமை பெற வாழ்த்துகின்றேன்.
சொல்லரிய முன்னோரின் தூயபதம் பணிகின்றேன்.
குடமுழுக்குப் பெரும் சாந்தி குளிரட்டும் இம்மண்ணில்
இடர் பலவும் தீர்ந்து இனிமை சிரிக்கட்டும்
வானத்து பெருமழை போல் அருள்மழை பொழியட்டும்.
தானம் தவம் மானம் குலம் கல்வி
மக்கள் மனமெல்லாம் மாண்புறவே நிறையட்டும்
மிக்க தமிழ் கலந்து சிவமயம் வாழட்டும்
ஆரையூர் மண் பூத்த சீரும் சிறப்பும் என்றும்
ஏரையூர்க் காந்தன் இதயமதில் போற்றினேனே.

ஸ்ரீகாளிபுரம் — இவ்வண்ணம்
பெரிய போரதீவு — என்றும் விஸ்வப்பிரம்மம் வை.இ.எஸ்.காந்தன் குருக்கள்
05.03.2008. — (ஏருரான். கண்மணிதாசன்)

## வாழ்த்துச் செய்தி

மகிழாதக நெகிழா தொரு மதியாகிய கதியே
சகமீதொரும் பொருணீயருள் தனியே கயமுனியே
நிகராறிய பரமேபெரு நிதியே சிவகதியே
திகழாரையம் பதிமாமுக சிவமே பிரணவமே.

என்று இந்தியாவைச் சேர்ந்த சதோதைய முனிவரால் பாடப்பெற்ற எம் பெருமான் திரு நீல கண்டப் பெருமான் ஆரையம்பதியின் வடபால் அனைவரினதும் வினையறுக்கின்ற பெருமானாக எழுந்தருளி செங்குந்த குல மக்களால் பரிபாலிக்கப்பட்டு வருகின்ற இவ்வாலயத்தில் 1989ம் ஆண்டு முதன்முதலாக பரிபால சபையின் தலைவராக பொறுப்பெடுத்து தொண்டாற்றும் பாக்கியம் எனக்கு கிடைத்தது நான் செய்த முற்பயனாகக் கருதுகின்றேன்.

கடந்த 03.06.1996 இல் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு ஆலயத்தை முற்றாக இடித்து மீண்டும் ஆகமவிதிப்படி புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ளது. பல இன்னல்கள் வந்த போதும் ஊரவர்கள் நிலைகுலைந்த போதும் எம் பெருமான் எம்மைக் கைவிடவில்லை.யாரும் கற்பனை கூடச் செய்ய முடியாதளவு பாரிய திருப்பணிகள் அனைத்து மக்களின் ஒத்துழைப்புடனும் நடந்தேறியுள்ளன. என்றுமில்லாத புதுப்பொலிவுடன் இன்று இவ்வாலயம் விளங்குகின்றது.

எனது வாழ்வில் அரை நூற்றாண்டு கடந்த வேளையில் பார்த்த முதலாவது கும்பாபிஷேகம் எம் பெருமான் திருநீலகண்ட விநாயகருடையது என்பதை நினைக்கும் போது என் மனம் புளகாங்கிதம் அடைவதோடு இக்குடமுழுக்கு வைபவத்தின் மூலம் நான் பெற்ற பேறுகள் கோடி கொடுத்தும் பெற முடியாத ஆத்ம திருப்தியை ஏற்படுத்துகின்றது.

நூற்றுக்கணக்கான குடமுழுக்கு வைபவங்களை நடாத்தியுள்ள சிவாச்சாரியார்களின் உள்ளங்களைக் கூட நெகிழ வைத்த எம்பெருமானின் அருளை யாம் எப்படிச் சொல்வது? அதிலிருந்து எம்பெருமானின் சக்தியை நாம் எல்லோரும் புரிந்து கொள்ளக்கூடிய வாய்ப்பை வெளிக்காட்டியிருக்கிறார்.

செங்குந்தர் வீதியிலே அமர்ந்திருந்தாலும் அனைத்து மக்களையும் இரட்சித்து அருட்கடாட்சம் வழங்கியுள்ளார் என்பதற்கு சான்றாக அனைத்து மக்களினதும் பங்களிப்பும் இவ்வாலய கும்பாபிஷேகம் நிகழ்வில் இருந்ததை குறிப்பிட விரும்புகின்றேன்.

மேலும் என் உயிர் பிரிகின்ற தறுவாயிலே என்னுயிரை மீட்டுத்தந்த எம்பெருமானுக்கு என்னுயிர் உள்ளவரை அடிமையாகவிருந்து தொண்டாற்றுவதோடு என்னைப் போல் இருக்கின்ற அனைத்து மக்களையும் எம் பெருமான் காப்பாற்றி அருள வேண்டும் என்றும், மேலும் எமது நாட்டிலே நிரந்தர சமாதானம் கிடைக்க வேண்டும் என்றும் பிரார்த்திக்கின்றேன்.

*"திருநீலகண்டரின் அருள் அனைவருக்கும் கிடைப்பதாக"*

**திரு.கண.யோகராசா**
ஸ்ரீதிருநீலகண்ட விநாயகர் ஆலய, ஸ்ரீமுத்துமாரியம்மன
ஆலய பரிபாலன சபையின் கௌரவத் தலைவர்.

## சாந்தி நிலவத் திருவருள் பெறுவோம்

*••••••••••••••••••••••••••*

"ஆரைநகர் தனிலுறையும் நிலகண்டர்
அத்திமுகப் பிள்ளையாரின் அடியைப் போற்றி"

நிகழும் அப்பெருமானான ஆரையம்பதி திருநிலகண்டப் பிள்ளையாரின் திருக்குட முழுக்கு நிகழ்வினூடாக,

"நாரை இரை தேடி நிதம் தவமே செய்யும்
நற்கமல வாவிமலி மட்டு நாட்டின் ......................"

அனைத்து மக்களுக்கும் தேசத்து மக்களுக்கும் சாந்தியும் சமாதானமும் நிலவத் திருவருள் வேண்டி பிரார்த்திக்கின்றேன்.

சைவப் பெருமக்கள் நிறைந்து வாழும் ஆரையம்பதியின் வட எல்லையுள் அமைந்துள்ளது. இவ்வாலயம் மாரி அம்மனையும் அருகிருத்திக் கொண்டுள்ளது. பாடல்கள் பெற்ற பெருமையும் இவைகளுக்குள்ளது. ஆரையம்பதி தமிழ்மணி சிவ. விவேகானந்த முதலியாரின் காவடிச் சிந்து பாடல் வரிகள் சிலவே மேலுள்ளவையுங் கூட.

நீண்ட வரலாற்றுச் சிறப்பும் அற்புதங்களும் நிறைந்ததாகக் கூறப்படும் திரு நில கண்ட பிள்ளையாரின் ஆலயத்தின் இந்நிகழ்வீற்கு அடியேனின் பன்முகப்படுத்தப்பட்ட ஒதுக்கீட்டு நிதியில் ஒரு சிறு பங்கைச் செலுத்தி புண்ணியம் பெறும் பாக்கியம் எனக்கும் அதனூடாக மாவட்ட மக்களுக்கும் கிடைத்ததையிட்டு மன நிறைவடைகின் றேன். அத்திருப்பணியைச் செய்ய எனக்கு வழிகாட்டிய ஆலய அறங்காவலர்களுக்கும் எனது நன்றியைச் செலுத்துகின்றேன்.

இந்நிகழ்வு சிறப்புறப்பாடுபட்டு உழைத்து வரும் அனைத்து அடியார்களையும் பாராட்டுவதுடன் இக் குட முழுக்கு வைபவமுடாக இப் பிரதேச மக்களின் நீண்ட காலக் குறைபாடு நீங்குவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

மீண்டும் இம்மலர்க் குழுவினரையும் பாராட்டி இந்நிகழ்வுகள் அனைத்தும் இனிதே நிறைவேறவும் நாடு செழித்து சமாதானம் நிலவவும் திருநிலகண்ட பிள்ளையாரின் தாழ் பணிந்து பிரார்த்தித்து நிறைவு செய்கின்றேன்.

நன்றி.

அன்பரன
த.கனகசபை,
பாராளுமன்ற உறுப்பினர்,
மட்டக்களப்பு மாவட்டம்.

மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்

செல்வி.க.தங்கேஸ்வரி B.A. (தொல் சிறப்பு) அவர்கள் வழங்கிய

## வாழ்த்துச்செய்தி

"ஒரு நாமம் ஓருவம் இல்லாதார்க்கு, ஆயிரம்
திரு நாமம் பாடித் தெள்ளேணம் கொட்டோமா"

எனப் பாடினார் மாணிக்கவாசக சுவாமிகள். ஆனாலும் அவனைப் பல்வேறு நாம ருபங்களில் வழிபடுவது பக்தியின் பாற்பட்டது.

இந்து சமயத்தில், இறைவனை உருவமாகவும் அருவமாகவும், அருவுருவாகவும் வழிபடும் பாக்கியம் பக்தர்களுக்குள்ளது. அதுமட்டுமல்ல பக்தி மேலீட்டினால் "பித்தா, பேயா, என்று பாடும் சுதந்திரமும் உள்ளது. அந்த வகையில் உலகின் முழுமுதற் கடவுளினை வீநாயகரை பல்வேறு நாமங்களில் வழிபடுகின்றார்கள். "மத்தளவயிறன்", என்று கூடப் பாடுவார்கள். ஸ்ரீபாலகணபதி, ஸ்ரீதருணகணபதி, ஸ்ரீபக்திகணபதி, ஸ்ரீஹரகணபதி, ஸ்ரீசக்திகணபதி, ஸ்ரீசித்திகணபதி, ஸ்ரீநிருத்தகணபதி, என 32 வகையாக வடிவங்களில் விநாயகரை உருவகித்து வழிபடுகின்றனர்.

மட்டக்களப்பை பொறுத்தவரை இன்னும்பல பெயர்களில் விநாயகர் அழைக்கப்படுகின்றார். சிந்தாமணிப் பிள்ளையார், மாமாங்கப் பிள்ளையார், வீரகத்திப் பிள்ளையார், முதலிய பெயர்களில் பிள்ளையார் வணங்கப்படுகின்றார். ஆனாலும் "திருநீலகண்டப் பிள்ளையார் என்ற பெயரில் ஆரையம்பதியில் மட்டுமே விநாயகர் ஆலயம் உள்ளது. இப்பெயர் மிகவும் விசேடமானது. அர்த்தப் புஷ்டியானது. "திருநீலகண்டர்" என்பது சிவபெருமானுக்கு உரிய பெயர் அப்பெயரோடு இணைத்து "திருநீலகண்டப் பிள்ளையார்" என அழைப்பது அர்த்த புஷ்டியானது.

ஆரையம்பதியில், சிவன், முருகன், அம்மன் முதலிய தெய்வ மூர்த்தங்களுக்கு தனித்தனியான கோயில்கள் உள்ளன. ஆலயடிப்பிள்ளையார், அரசடிப்பிள்ளையார் எனச் சிறிய ஆலயங்கள் இருப்பினும் விநாயகருக்கு எனத் தனியான ஆலயம் (பெரிய அளவில்) திருநீலகண்டப் பிள்ளையார் ஆலயம் ஒன்றே. பழம்பெரும் கோயிலான இவ்வாலயம் ஒரு காலத்தில் மிகவும் பிரசித்தி பெற்றிருந்தது. இலக்கியமணி ஆரையூர் நல்.அழகேச முதலியார், தமிழ்மணி சிவ.விவேகாநந்த முதலியார், தமிழ்ச் செல்வி திருமலர்ப் பாக்கியம் முதலியோர் இவ்விநாயகர் தொடர்பான பல பாடல்களைப் பாடியுள்ளனர். டாக்டர். சிவ.சோமசுந்தரம் அவர்களும் பாடல்களைப் பாடியுள்ளார். இத்தகையோரது பங்களிப்பினால் இவ்வாலயம், மிகச்சிறப்பாக இயங்கிவந்தது.

அண்மையில் ஏற்பட்ட பல்வேறு அனர்த்தத்தினாலும் பிறதாக்கங்களினாலும் ஆலயம் பெரும் பாதிப்படைந்தது. இதைக்கண்ணுற்ற இளைஞர் பலர் ஆலயத்தைப் புனரமைத்து கும்பாபிஷேகம் நடாத்த வேண்டுமென இரவு பகலாகப் பாடுபட்டனர். அதன் பயனாக ஆலயம் புதுப்பொலிவுடன் இன்று தோற்றமளிக்கின்றது. அண்மையில் இவ்வாலயத்தில் கும்பாபிஷேகம் மிகக் கோலாகலமாக நடைபெற்றது. அதைத் தொடர்ந்து 36நாட்கள் விசேட பூசைகளும் நடைபெற்றன. இப்போது கும்பாபிஷேக மலர் வெளிவருகிறது. இதுவே இவ்வாலயத்தின் செயற்பாடுகளுக்கான ஆவணப் பதிவாகும். இந்த முயற்சியில் முன்னின்று உழைத்த அனைவருக்கும் திருநீலகண்ட பிள்ளையார் அருள் சித்திப்பதாக.

பிரதேச செயலகம், மண்முனைப்பற்று
Divisional Secretariat, Manmunaipattu
ප්‍රාදේශීය ලේකම් කාර්යාලය,මන්මුනේපත්තු

මගේ අංකය / எனது இல / My No. DS/MP/CUL

ඔබේ අංකය / உமது இல / Your No.

## பிரதேச செயலாளரின் வாழ்த்துச் செய்தி

முழு முதல் தெய்வம் விநாயகப் பெருமானின் பேரருளாலும், ஆலய பரிபாலன சபையின் மேலான அரும்பணியாலும் ஸ்ரீ திருநீலகண்ட வினாயகப் பெருமானின் மகா கும்பாவிஷேகம் இனிதே நிறைவுற்றுள்ளமை மனநிறைவைத்தரும் நிகழ்வாக அமைந்துள்ளளது. இவ்வாலயத்தின் வரலாற்றுப் பதிவுகளை தாங்கி வெளிவரும் கும்பாபிஷேக சிறப்பு மலர் நீண்டநாள் நிலைத்து நிக்கத் தக்கதான வரலாற்று ஆவணப்பதிவாக இடம்பிடிக்கவுள்ளமை அதிலும் தனிச் சிறப்பாக அமைகிறது. அவை மட்டுமன்றி இன்றைய காலத்தின் கட்டாய தேவையாகவும் அமைந்துள்ளமை குறிப்பிடத் தக்க விடயமாகும்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனைப்பற்று பிரதேசம் சமூக, கலாச்சாரப்பண்பாட்டுப் பாரம்பரியங்களின் பரிணாமங்களை தக்கவைத்துள்ள பிராந்தியமாக இடம்பிடித்துள்ளமை பெருமைக்குரிய விடயமாகும். இங்கு உலகநாச்சியாரின் வருகையும் அதனைத் தொடர்ந்த பரிணாமங்களும் ஆதாரப்படுத்தப்பட்ட உண்மையாகும். உலகநாச்சியாரின் ஆட்சிக் காலத்தில் தாபிக்கப்பட்டு பிரசித்தி பெற்ற திருத்தலமே காசிலிங்கேஸ்வரர் தேவஸ்தானமாகும். கால வரலாற்றழிவுகளுக்குப் பின்னர் மீண்டும் இவ்வரலாறு கூறும் தேவஸ்தானம் புதுப் பொலிவு பெறுவது அனைவரும் பெருமைப்பட வேண்டிய விடயமாகும்.

ஆரைப்பற்றை எனும் கிராமத்தின் நாமம் ஆரையம்பதி என வெகுமதிக்கப்பட்டமைக்கு இவ்வாலயத்தின் பெருமை கூறும் பதிகமே என இராசதுரை, அழகேச முதலி போன்றோரால் எழுதப்பட்ட வரலாற்றுநூல்கள் சான்று பகருகின்றன. இவ்வாறு வரலாற்றுப் புகழ் மிக்க இத் திருத்தலம் மானிட அனர்த்தங்களால் அழிவுற்று நீண்ட காலம் பாழடைந்து காணப்பட்டமை வேதனைக்குரிய விடயமாகும்.

இவ்வேளையில் எம் பெருமானின் திருவருள் துணைகொண்டு பாரம்பரிய இப்புனித வரலாற்றுத் திருத்தலத்தை புனருத்தாரணம் செய்து குடமுழுக்குச் செய்த ஆலய பரிபாலன சபையினரையும், ஒத்தாசை வழங்கிய அன்பர்களையும் இச் சந்தற்பத்தில் அன்புடன் நினைவு கூருகின்றேன். இந்நற்பணிக்கு அற்பணிப்போடு செயற்பட்ட உங்கள் ஒவவொருவருக்கும் திருநீலகண்ட வினாயகப் பெருமானின் அருளும் எனது ஆசியும் கிடைக்கப் பிராத்திக்கின்றேன்.

06.03.2008

சி. அமலநாதன்
பிரதேச செயலாளர்

S. Amalanathan
Divisional Secretary
Manmunai Pattu
Ariyampathy

# வாழ்த்துச்செய்தி

மட்டக்களப்பு ஆரையம்பதி ஸ்ரீ திருநீலகண்ட பிள்ளையார் ஆலய மகா கும்பாபிஷேகம் நடைபெற்று அதன் நிமிர்த்தம் ஒரு மலர் வெளியிடப்படுவதை இட்டு மிகவும் மகிழ்ச்சி அடைகின்றோம்.

எமது மாவட்டத்தில் இயற்கை அனர்த்தத்தாலும் கடந்த கால் நூற்றாண்டுக்கு மேலாக நடைபெறும் கொடிய யுத்தத்தாலும் இந்து ஆலயங்கள் பல சிதைக்கப்பட்டும் பாதிக்கப்பட்டும் உள்ளமை யாவரும் அறிந்த விடயமாகும்.

இவ்வேளையில் மிக விரைவான திட்டமிடலில் அழகான ஆலயம் (புனரமைக்கப்பட்டு) ஆரையம்பதி மண்ணில் திரு நீலகண்டப் பிள்ளையார் என்னும் பெயருடன் கும்பாபிஷேகம் கண்டமை இந்து சமயத்திற்கு ஏற்பட்ட ஒரு ஆன்மிக எழுச்சியாகும்.

இந்தவகையில் "அவனருளாளே அவன்தாள் வணங்கி" என்ற சிவபுராண வாக்கின் படி இறைவன் அருளால் எம் பெருமான் திரு நீலகண்ட பிள்ளையபருக்கு கும்பாபிஷேகம் செய்து சிறப்பு மலர் வெளியிடும் பாக்கியத்தை தற்போதைய தர்மஹர்த்தா சபை பெற்றுள்ளது.

ஆகவே இத் தர்மஹர்த்தா சபையினருக்கு வழிகாட்டியதாக இருக்கும் வகையில் இவ்வாலயத்தில் பல சமூக சேவைகள், மற்றும் கூட்டு வழிபாடு ஆன்மீக சொற்பொழிவுகள், அறநெறிப் பாடசாலைகள் உட்பட பல சமயத்துடனும் மக்களின் நல்வாழ்வுடன் சேர்ந்த செயற்பாடுகள் நிகழ வழிவகுக்க வேண்டும் எனவும் அன்பாக வேண்டுவதுடன்.

இப்பணி தொடரவும் இன்னும் இது போன்ற ஆன்மீகப் பணிவளரவும் இறைவன் திருவருள் தங்களுக்கு கிடைக்க பிரார்த்தித்து மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவை சார்பாக நல்வாழ்த்து கூறுகின்றேன்.

*"இந்துவாக வாழ்வோம்*
*இந்து தர்மம் காப்போம்"*

மாவட்ட காரியாலயம்
மாமாங்கம் ~ மட்டக்களப்பு

சீ.யோகேஸ்வரன் (J.P)
தலைவர்
(மட்டக்களப்பு மாவட்ட இந்து
இளைஞர் பேரவை)

சரீர நிறுவன நிர்வாக உத்தியோகத்தரும் கவிஞரும்
சமாதான நீதவானுமாகிய சி.க.பொன்னம்பலம் ஐயா அவர்கள் வழங்கிய

## வாழ்த்துச் செய்தி

திகழும் பத்துக் கரமுடையான் திருநீல கண்டப் பெயருடையான்
புகலும் அருளும் நிறைவுடையான் பொருளும் அறிவும் தருமுதல்வன்
அகமும் புறமும் சூழ்ந்தென்றும் அடியார்க்கருளும் குணமுடையான்
இகமும் பரமும் எமைக்காக்கும் இறைவன் திருத்தாள் ஏத்துவோமே.

முன்னொரு காலத்திலே முருகப் பெருமான் ஔவையாரைப் பார்த்து ஔவையே, இந்த உலகிலே அரியது எது? என்று வினவினார். அப்பொழுது ஔவியார் சொன்னார்.

"அரியது கேட்கின் வரிவடி வேலோய்
அரிது அரிது மாநிடராதல் அரிது"

எதையும் பகுத்து அறியும் சிறப்பு மனிதனுக்கு மட்டுமே உண்டு. ஆதலால், மானிடராதல் பெறுவதற்கு அரிய பேறு என முருகனைச் சாட்சியாக வைத்துக் கூறியஔவையார், பிறிதொரு சந்தர்ப்பத்தில் அதே மனிதனை ஒரே ஒருஅறிவை மாத்திரம் கொண்டுள்ள "மரம்" போன்றவன் என்றும் மொழிந்தார்.

"கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும்
அவையல்ல நல்ல மரங்கள் ~சபை நடுவே
நீட்டோலை வாசியா நின்றான் குறிப்பறிய
மாட்டாதவன் நன் மரம்"

என்பது அவரின் பாடல், இதன் பொருள், கல்வியறிவு இல்லாத ஒருவன் மனிதனாக இருந்தாலும் அவன் மரத்திற்கே ஒப்பாவான் என்பதாகும். இதே கருத்தைத்தான் மகாகவி பாரதியாரும் "தேடுகல்வி இலாதோர் ஊரைத் தீயினுக்கிரையாக மடுத்தல்" என்னும் பாடல் மூலமாக வலியுறுத்தி நிற்கின்றார்.

உலகப் பொதுமறையாகிய திருக்குறளை உலகத்தவர்களுக்கு உகந்தளித்த வள்ளுவரும் ஓர் இடத்தில் மனிதனை "மரம்" போன்றவன் என்று பாடியிருக்கிறார்.

"அரம் போலும் கூர்மைய ரேனும்
மரம் போல்வர் மக்கட்பண் பில்லாதவர்"

என்பது திருக்குறள். இதன் உட்பொருள், ஒருவர் எவ்வளவு கல்வியறிவு உள்ளவராக இருந்தாலும் அவரிடத்திலே மனிதப் பண்பு காணப்படவில்லையானால் அவர் மரத்திற்குச் சமமானவரே என்பதாகும்.

மனிதப் பண்போடு கூடிய கல்வியறிவுதான் ஒருவனை முழு மனிதனாக்கும் என்ற உண்மை இவற்றின் வாயிலாகத் தெளிவுபடுத்தப்படுகின்றது.

கல்வியறிவை விருத்தி செய்வதிலும், மனிதப் பண்பை நிறைவாக்குவதிலும் செங்குந்தர் குலத்தைச் சேர்ந்த பல பெரியார்கள் தியாக சீலம், அர்ப்பணிப்பு, அன்புள்ளம், ஒழுக்கநெறி, இரக்கசிந்தனை, மனித நேயம் முதலான தலை சிறந்த குணாதிசயங்களுடன் வாழையடி வாழையாகத் தொடர்ந்து பெரும் பணியாற்றி வந்திருப்பதைக் கேள்வி வாயிலாகவும் அனுபவ மூலமாகவும் நன்கு அறிவேன்.

அவர்கள், மனமாற்றம், ஒருமைப்பாடு, சமாதானம் முதலான வாழ்வின் இலட்சியங்களை அடையும் சிறந்த மார்க்கமாகப் பக்திபூர்வமான இறை வழிபாட்டிலும் ஈடுபட்டுவந்தனர். அதற்கு அத்தாட்சியாக அருள்மிகு ஸ்ரீ திருநீலகண்ட விநாயகர் ஆலயமும், ஸ்ரீ முத்து மாரியம்மன் ஆலயமும் மிளிர்வதைக் காணுகின்றோம்.

சுமார் 12 ஆண்டுகளாகப் பாலஸ்தாபன நிலையிலிருந்த திருநீலகண்ட விநாயகப் பெருமானுக்கு மிகச் சிறப்பான முறையிலே இறை பக்தியும், சமய அறிவும், சேவை உணர்வும் கொண்ட சிவாச்சாரியார்களைக் கொண்டு திருக்குடமுழுக்கு நடைபெற்று அதனைத் தொடர்ந்து மண்டலாபிஷேகமும் நடைபெற்றதை நாம் கண்டும் அனுபவித்தும் பெரும் பேறு பெற்றோம். இக்கைங்காரியத்தை நினைவு கூரும் வகையில் வெளியிடப்படும் சிறப்புமலர் நன்கு அமையவும், இப்பகுதி அடியார்கள், குறிப்பாக இளம் வயதினர், இன்றுபோல் என்றும் ஆன்மீக, சமூகப்பணிகளில் ஈடுபாடு கொண்டு சர்வசித்திப் பிரபுவாகிய திருநீலகண்டவிநாயகப் பெருமானின் திருவருளைப் பெறவும் வாழ்த்துவதிலும் மகிழ்ச்சியடைகின்றேன்.

சி.க. பொன்னம்பலம் ~ ச.நீ<br>ஆரையம்பதி ~ 01

# ஆரையம்பதி மக்களுக்கு அருள் நெறிகாட்டும் திருநீலகண்ட விநாயகர்

“ஓம் என்னும் நாதத்தின் உருவாயமைந்தவன்
ஒலி எனும் பேதத்தின் வடிவாயமைந்தவன்
ஆம் என்னும் பாவத்தில் அன்பாயமர்ந்தவன்
அன்பாக இரங்கிடும் ஐயன் விநாயகன்“

பல்வேறு நாமங்களில் வழிபாடு செய்யப்படும் விநாயகர் “ஓம்“ என்ற பிரணவ மந்திரத்தின் உருவில் அமைந்தவர் “ஓம்“ என்னும் நாதம் இப்பிரபஞ்ச இயக்கத்தின் அடி நாதமான சப்தம். அதற்கு ஒரு உருவம் கொடுத்து விநாயகர் (தனக்கு மேல் ஒரு தலைவன் இல்லாதவர் முழுமுதற் கடவுள்) என்றும், விக்கினேஸ்வரன் (விக்கினங்களைத் தீர்ப்பவன்) என்றும், கணபதி ( கணங்களின் அதிபதி) என்றும் மக்கள் வழிபாடு செய்கின்றனர்.

ஆனாலும் திருநீலகண்ட பிள்ளையார் என்ற பெயரில் ஆரையம்பதியில் மட்டுமே விநாயகருக்கான ஆலயம் உள்ளது. பழம் பெருமை வாய்ந்ததும், தெய்வ சாந் நித்தியம் நிறைந்ததுமான இவ்வாலயம் ஒரு காலத்தில் மிகவும் பிரசித்தி பெற்றிருந்தது.

1950 களில் நான் காத்தான்குடி மத்திய கல்லூரியில் விடுதியில், தங்கிப் படித்துக்கொண்டிருந்த போது ஒவ்வொரு வெள்ளிக் கிழமையும், விடுதியில் உள்ள இந்து மாணவர்கள் இவ்வாலயத்துக்கு வருவார்கள். பிரார்த்தனைப் பாடல்களைப் பாடுவார்கள். மாலை நேரப் பூசை முடிந்ததும் விபூதி, பிரசாதம் பெற்றுச் செல்வார்கள். இவர்கள் வேஷ்டி அணிந்து, சிவப்பழமாக , முஸ்லிம் கிராமமாகிய காத்தான்குடி ஊடாகச் செல்வதே ஒரு கண்கொள்ளாக் காட்சியாகும்.

இடையில் சிறிது காலம், போதிய பராமரிப்பின்றி இவ்வாலயம், மந்தநிலை அடைந்திருந்தது. ஆனால் இறைவன் திருக்குறிப்பினால் மீண்டும் இவ்வாலயம் புத்துயிர் பெற்று கும்பாபிஷேகத்தைக் கண்டுள்ளது. இதன் ஆவணப்பதிவாக ஒரு சிறப்பு மலர் வெளிவருவது ஒரு கட்டாயத் தேவையாகும். இத்தகைய சிறப்பு மலர்களை பிற்காலத்தில் ஆரையம்பதியின் வரலாற்றுச் சான்றுகளாகப் போகின்றன.

திருநீலகண்ட விநாயகர் ஆலயத்தில் , ஸ்ரீகிருஷ்ண ஜயந்தியில் பாடப்படும் தாலாட்டுப் பாடல்களை இயற்றிய அமரர். தமிழ்மணி சிவ.விவேகானந்த முதலியார் இவ்விநாயகனைப் பற்றி பின்வருமாறு பாடியுள்ளார்.

ஞாலமு முயிர்கள் மேலும்
நற்பெருங் கருணை மல்கி
சீலமாய்க் காக்கும் தெய்வச்
சீதரன் தொட்டிலாட்டும்
கோலமாய்க் கவிதை பாடக்
குந்தர்கள் வழிபட்டுய்யும்
மூலகாரணராம், வள்ளல்
மும்மதக் களிறே காப்பு

(குந்தர்கள் -செங்குந்த மரபினர்)

செங்குந்த மரபினருக்குரியதான இத்திருநீலகண்டப் பிள்ளையார் ஆலயம், அவர்களது போஷிப்பினாலும், போற்றுதலினாலும் புகழ் பெற்றது. இன்று அது புதுப் பொலிவுடன் கண்கொள்ளா காட்சியளிக்கின்றது. இத்திரு நீலகண்டப் பிள்ளையார் என்றும் நம்மை இனிதே வழிநடத்திச் செல்வதாக.

இரா.நாகலிங்கம்(அன்புமணி) (S.L.A.S)

## வாழ்த்துச் செய்தி

செங்குந்த குல மக்களின் பெருமுயற்சியினாலும் அனைத்துக் குல மக்களின் ஆதரவினாலும் நிர்மாணிக்கப்பட்ட ஸ்ரீதிருநீலகண்ட விநாயகர் ஆலயம், நான் ஆலய தலைவராக இருந்த காலத்திலே பாலஸ்தாபனம் செய்யப்பட்டு புதியஆலயம் அமைக்கும் பணி தொடரப்பட்டது. இவ்வாறு தொடரப்பட்ட பணியானது நான் இவ்வாலயத்திலே போசகராக இருக்கும் காலத்தில் நிறைவேற்றப்பட்டதை இட்டு பெரும் மகிழ்ச்சிஅடைவதோடு அப்பணியிலே ஈடுபட்ட அனைவருக்கும் எம் பெருமானின் அருளும் ஸ்ரீ முத்துமாரி அம்பாளின் அருளும் கிடைக்கும் என பிரார்த்தித்து வாழ்த்துகின்றேன்.

திரு. சீ. சிவஞான முதலியார்
(ஆலய போசகர், ஸ்ரீ முத்துமாரியம்பாள்
ஆலய பிரதம பூசகர்)

## வாழ்த்துச் செய்தி

ஓம் எனும் பிரணவத்தின் வடிவெடுத்து ஆரையம்பதி செங்குந்தர் வீதிதனில் ஸ்ரீ திருநீலகண்ட விநாயகராக ஓங்காரமாக வீற்றிருந்து அனைவருக்கும் அருள்பாலித்துக் கொண்டிருக்கும் எம் பெருமானின் திருக்குடமுழுக்கு பன்னிரண்டு வருட காலங்களுக்குப் பின்னர் இவ்வாண்டு அனைத்து மக்களினதும் ஆதரவுடன் இடம்பெற்றிருப்பது குறித்து நான் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

இவ்வாலயமானது ஆரையம்பதி வடக்கு எல்லையிலமைந்து இக்கிராமத்தை பாதுகாப்பது மட்டுமல்ல எல்லைத் தெய்வமாகவும் இருக்கிறது.

மேலும், இவ்வாலயமானது 17ம் நூற்றாண்டிற்கு முற்பட்டதெனவும் ஆரையம்பதியிலேயே முதலாவது பிள்ளையாராலயமாகவும் இருந்து, அனைத்து இனமத மக்களாலும் வழிபட்டுவந்த ஆலயமாக திகழ்கின்ற ஒரு வரலாற்றுச் சின்னமாகும்.

எமது பகுதியிலேயே இடம்பெற்ற இனமுரண்பாடுகள் எழுந்த காலகட்டங்களிலெல்லாம் எல்லைக் காவலாக இருந்து இக்கிராமத்தை பாதுகாத்தது எவராலும் மறுக்கமுடியாததும், மறக்கமுடியாததுமான நிகழ்வுகளாகும். கடந்த காலங்களில் எனது தந்தையாரும் இவ்வாலயத்தின் தலைவராக இருந்து பணியாற்றி பேறுபெற்றவர். அதேபோன்று எனக்கும் இவ்வாலயத்தின் போஷகராக இருந்து கும்பாபிஷேகத்தை நிறைவேற்றி வைக்கின்ற பாக்கியம் கிடைத்தமை பற்றி பெருமையடைகின்றேன். இவ்வாலயம் மேலும் மேலும் வளர்ச்சியடைய எனது நல்லாசிகள் உரித்தாகட்டும்.

வடிவேலன் .வினோபா இந்திரன்
(பதில் நீதவான், சட்டத்தரணி,
ஆலய போஷகர்)

# வாழ்த்துச் செய்தி

கிழக்கிலங்கையின், மட்டக்களப்பில் வளமிகு ஆரையம்பதியில் செங்குந்தர் குலமேவி எழுந்தருளி அருள்பாலிக்கின்ற திருநீலகண்ட விநாயகர் ஆலயத்தின் கும்பாபிஷேக நிகழ்வினையொட்டி மிகவும் உளப் பூரிப்படைகின்றேன். ஆரையம்பதியிலுள்ள ஆலயங்களில் நூற்றாண்டுகால தொன்மை வாய்ந்ததும், செங்குந்தகுல மக்களால் போற்றப்பட்டு, பேணிப்பாதுகாக்கப்பட்டு வந்ததுமான ஓர் ஆலயமாகும்.

கும்பாபிஷேக புனருத்தாரண அபிவிருத்தியின் நிமித்தம் பல வருடங்களாக சிதைவடைந்த நிலையிலிருந்த இவ்வாலயத்தின் நிலைகண்டு மனம் நெகிழ்ந்த காலஞ் சென்ற கலாநிதி இரா.பத்மரஞ்சன் அவர்கள் ஆலயத்தினை புதுப்பொலிவடையச் செய்வதற்காக தன்னுடைய முழுநேர அயராத முயற்சியையும், உழைப்பையும் எம்பெருமானின் விழாக்கோலம் காண்பதற்காக அர்ப்பணித்திருந்தார். இத்தருணத்தில் அன்னாரை நினைவு கூருவது செங்குந்தர் குலமக்களாகிய ஒவ்வொருவரதும் கடமையாகும்.

தேடிவரும் பக்தர்களுக்கு நாடிவினை தீர்க்கும் விநாயகப்பெருமானின் இவ்வாலயமானது கிழக்குத் திசைநோக்கி. ஆகம விதிமுறைப்படி அமையப் பெற்று இன்று நம்முன்னே கண்கொள்ளா காட்சியாக எம்பெருமான் எழுந்தருளியிருப்பதைப் பார்க்கும் போது மிகவும் மனப்பூரிப்படைகின்றேன்.

"ஆலயம் தொழுவது சாலவும் நன்று"

ஆலயவழிபாடு என்பது ஒரு மனிதன்சமுதாயத்தில் தொன்று தொட்டு பேணப்பட்டு வருகின்ற ஒரு வழக்க நெறியாகும் இந்த வகையான ஒழுக்க நெறியின்பால் ஒரு இந்து மகன் ஆன்ம ஈடேற்றம் பெற்று சரியை, கிரியை, யோகம் எனும் படிகளைக் கடந்து ஞான நிலையடையும்போது இறைவன்பால் ஈர்க்கப்பட்டு, இரண்டறக் கலந்து தெய்வத்தன்மையடைகின்றான்.

எனவே ஆலய வழிபாடு என்பது சமுதாயத்தில் ஒவ்வொரு மனிதனும் தன்னை நெறிப்படுத்துவதற்காக மேற்கொள்ளும் இன்றியமையாத் கடமையாகும். எனவே இவ்வாலய வழிபாட்டினை நிறைவேற்றுவதற்காக இன்று எம்முன்னே இவ்வாலயம் சிறப்புற அமையப்பெற்றிருப்பதையிட்டு மனமகிழ்கின்றேன்.

எம்பெருமானின் ஆலய புனருத்தாரன வேலைகளிலும், கும்பாபிஷேக நிகழ்விலும் முன்னின்றுழைத்த அனைத்து செங்குந்தகுல மக்களுக்கும், ஆலயபரிபாலன சபையினருக்கும் நிதி உதவி புரிந்த அனைவருக்கும் எம்பெருமானின் நல்லாசி கிடைக்க வேண்டுமென்று உளமார வாழ்த்துகின்றேன்.

"மேன்மைகொள் சைவநீதி
விளங்குக உலகமெல்லாம்"

வாரித்தம்பி. ஞானரெத்தினம்
வைத்திய கலாநிதி,
ஆதார வைத்தியசாலை, கல்முனை.

## வாழ்த்துச் செய்தி

இந்துக்கள் வழிபடுமிடமெல்லாம் விசேடமாகப் பிள்ளையாருக்கு ஆலயங்கள் உண்டு. ஆகம முறைப்படி அமைந்த ஆலயங்கள் மட்டுமல்ல மரத்தடிகளிலும் ஆற்றங்கரை குளக்கரைகளிலும் ஏன் காட்டின் மத்தியிலும் கூட சிறிய ஆலயங்கள் அமைந்து அருள் புரிவதைக் காணலாம்.

இந்த வரிசையில் மட்டக்களப்பு மாவட்டத்தின் பழம் பெரும் கோயில்களில் ஒன்றான திருநீலகண்ட விநாயகர் ஆலயம் சகல வளமும் தன்னகத்தே கொண்ட ஆரையம்பதி என்னும் அழகிய இக்கிராமத்தின் எல்லையில் அமைந்திருக்கின்றது. கடந்த சில வருடங்களாகப் பாரிய திருப்பணிகளை எவ்வளவோ இடையூறுகளுக்கும் மத்தியில் ஆலய அறங்காவல் குழுவின் இடைவிடா முயற்சியின் பலனாக எம் இறைவனால் எமக்கு அளிக்கப்பட்ட இந்து சமயத்தின் தத்துவங்களை வெறிப்படுத்தும் அழகான தோற்றத்தோடு கம்பீரமாக அன்னை மாரியம்மன் ஆலயத்தின் அருகே காட்சியளித்துக் கொண்டு இருக்கின்றது.

இவ்வாலயத்தில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் திருநீலகண்ட விநாயகப் பெருமானின் அஷ்ட பந்தன மகாகும்பாபிஷேகம் 11.02.2008 அன்று எமது சக்தியாகிய அன்னை மாரியம்மனின் கடாட்சத்தின் மூலமும் திருநீலகண்ட பெருமானின் திருவருள் துணையுடன் அவனருளாலே அவன்தாள் வணங்கி என்ற மாணிக்கவாசகர் திருவாக்கின்படி சிறப்புற நடைபெற்றது.

பக்திமயமான இக்கும்பாபிஷேகத்தையும் இதற்கு முன் அதற்குத் தேவையான திருப்பணிகளையும் முன்னின்று சற்றும் தளராமல் நடாத்தி முடித்த இவ்வாலயபரிபாலன சபையினருக்கும் இவ்வூர் பொது மக்களுக்கும் எமது பாடசாலை ஆசிரிய மாணவ மாணவிகளுக்கும் திருநீலகண்டப் பெருமானின் பேரருள் வேண்டி அன்னை மாரியை மனதில் வைத்து என் நல்லாசிகளைக் குவித்து வாழ்த்துவதுடன் நன்றிகளையும் தெரிவித்து அகமகிழ்கின்றேன்.

திருமதி. நேசசவுந்தரி தங்கவடிவேல்
அதிபர்,
மட்/ஆரைப்பற்றை நொத்தாரிஸ் மூ.த.வி.

# ஆலய வரலாறு

## செங்குந்தர் உற்பத்தி:

பூர்வத்தில் பிரம்மா, விஷ்னு, உருத்திரன் முதலிய தேவர்கள் எல்லாம் சூரபத்மன், சிங்க முகன், தாரகன் முதலிய அசுரர்களால் துன்புற்று பரமகருனா நிதியாகிய சிவபெருமானிடம் சென்று முறையிட்ட போது சிவ பெருமானின் நெற்றிக் கண்ணிலிருந்து ஆறு தீப்பொறிகள் வெளிப்பட்டு சரவண பொய்கையில் அசுரர்களை அழிப்பதற்காக ஆறுமுக பெருமான் திரு அவதாரம் பெற்றார். இத் தீப்பொறிகளின் வெப்பம் தாங்கமாட்டாமல் எல்லா தேவர்களும் உமாதேவியாரை அடைந்த போது அவரின் திருவடி சிலம்புகளில் இருந்து சிதறிய நவரெத்தினங்கள் எல்லாம்- சிவபெருமான் திருமுன் விளங்கின. சிவ பெருமானின் ஆணையினால் சிதறிய நவரெத்தினங்களில் இருந்து ஒன்பது சக்திகள் தோன்றின. அந்த நவசக்திகளிடமிருந்து தேவ தேவரின் திருவருளினாலே அவர்களின் வயிற்றிலே யோகம் செய்து கொண்டிருந்த நவவீரர்கள் உருவாகினர். உமாதேவியாரின் வியர்வையில் இருந்து ஒரு இலட்சம் வீரர்கள் உதித்தார்கள். அவர்கள் இடியொத்த சொல்லை உடையவர்களும் வாளையும் பரிசையும் கையேந்தியவர்களுமாக இருந்தனர். இவ்வாறு உதித்த நவவீரர்கள் எமது மைந்தர்கள், அறிவுடையவர்கள், ஆற்றலுடையவர்கள், மானமுடையவர்கள், ஒழுக்கமுடையுவர்கள், இவர்கள் புதியவர்கள் அல்ல. நந்தி முதலான கணங்களுக்கெல்லாம் தலைவர்கள் என்று கூறி சிவபெருமானும் உமாதேவியாரும் தனித்தனி ஈட்டியும், வாளும் கொடுத்து மேற்குறித்த ஒரு இலட்சம் வீரர்களோடு நீங்களும் கூடி உங்களுக்கு நாயகனும் சகோதரனுமாகிய ஆறுமுக கடவுளை நீங்காது அவன் பணித்த தொண்டுகளை செய்து கொண்டு இருக்க கடவீர்கள் என்று திருவாய் மலர்ந்தருள அவர்களும் அதற்கிணங்கி வணங்கி முருக பெருமானிடம் அகலாது அசைவற்ற அன்புடன் இருந்தனர்.

முருக பெருமானிடம் இவர்களை உனது சகோதர்களாக ஏற்று தேவர்களின் துன்பங்களை நீக்குமாறு பணிக்கப்பட நவவீரர்களான வீரபாகு, வீரகேசரி, வீரமகேந்திரர், வீரபுரந்திரர், வீரராக்கதர், வீரமகேஸ்வரர், வீரமாத்தாண்டர், வீராந்தகர், வீரதீரர் அனைவருக்கும் படைத்தொழிலுக்குரிய குந்தம் எனப்படும். கைவேல், ஈட்டி, சவளம் எனப்படும் ஆயுதங்கள் வழங்கப்பட்டு சூரபத்மன் முதலிய அசுரர்களுடன் போரிட ஆசி கூறி அனுப்பி வைத்தார்கள். அசுரப் படைகளை குந்தப் படையினால் அழித்தமையால் குந்தப்படை செங்குருதிமயமாகியது. இதனால் இவர்களே செங்குந்தர் எனவும் கைக்கோளர் எனவும் அழைக்கப்பட்டார்கள். இதனை உறுதிப்படுத்தும் வகையில் தாரகா சூரன்வதைச் சிறப்பிலே பின்வரும் பாடல் உணர்த்துகின்றது.

"வனமுறு வாசமா வைகல் விட்டியா
சனமுற விண்ணிடந் தனிவைகுந்தமும்
இன்னுறு பங்கய மூவர்க் கெய்தவே
சினமுறு தாரக செறி செங்குந்தமே"

இவ்வாறு சிறப்பு பெற்ற முருகனுடைய சகோதரர் பரம்பரையில் இருந்து தோன்றிய செங்குந்த குலமக்களால் பரிபாலிக்கப்பட்டு வருவதே செங்குந்த வீதியில் அமைந்துள்ள ஸ்ரீதிருநீலகண்ட விநாயகர் ஆலயமாகும்.

மேற்படி இவ்வாலயத்தின் வரலாற்று சான்றுகளை சற்று நோக்குவோமாயின் கிழக்கு மாகாணத்தில் "சேருவிலை" க்கு தெற்கே மேன்காமம், மல்லிகைத்தீவு, ஈச்சிலம்பற்று, ஆனைத்தீவு, மாவடிச்சேனை, வெருகல், கதிரவெளி, பாற்சேனை, பனிச்சங்கேனி, மாங்கேனி, கல்குடா, கின்னையடி, சித்தாண்டி, களுவன்கேனி போன்ற இடங்களிலும் மட்டக்களப்பு பகுதியில் மஞ்சந்தொடுவாய், காத்தான்குடி, கோவில்குளம், காயங்கேயனோடை (காங்கயனோடை),பாலமுனை போன்ற இடங்களிலும் ஆதிகாலம் தொடக்கம் வேடர்கள் வாழ்ந்தார்கள் என்பது மறுக்கவோ, மறைக்கவோ, முடியாத உண்மைகள். அதே போல் திமிலதீவில் "திமிலர்" எனும் இனத்தவர்களும் வசித்தனர். என

## ஆதிக் குடிகள் வரலாற்றுச் சான்றுகள்:

நாவற்குடாவிற்கு தெற்கே மஞ்சந்தொடுவாயில் "மஞ்சன்" எனும் வேடத் தலைவனும் அவன் இனத்வரும் வசித்தனர். இவர்கள் சேனை செய்த இடம் சேனைத் தெரு என பெயர் பெற்றது. இப்பகுதி இன்று காத்தான்குடி 1ம் குறிச்சியில் சுள்ளிமுனை சந்தையும் அதனைச் சார்ந்த இடமுமாகும். காத்தானும் அவனது இன சனங்களும் வசித்த இடம் காத்தான்குடி 5ம் குறிச்சி மெத்தைப் பள்ளி வாசலையும் சந்தையையும் சார்ந்த இடமாகும். "கங்கன்" எனும் வேடனும் அவனது இனத்தவர்களும் வசித்த பகுதியே காங்கேயனோடை எனவும் வழங்கப்படுகின்றது. இலங்கையின் சைவ கோயில் எனும் புத்தகத்தில் முருகப் பெருமானின் சிலை கொண்டு வரப்பட்டதால் காங்கேயனோடை என பெயர் வழங்குவதாகவும் குறிப்பிடப்படுகின்றது. இதனை நாம் ஆராய்கின்ற போது இரண்டு விடயங்களும் உண்மை என தெரிகிறது. பாலமுனைப் பகுதியில் ஐயன், நாகன் எனும் வேடத்தலைவர்களும் அவனது இனத்தவர்களும் வாழ்ந்தனர் என வரலாறுகள் கூறுகின்றது.

## ஆலய உற்பத்தி:

இது இவ்வாறிருக்க கி.பி. 312 ல் உலக நாச்சி எனும் கலிங்க இளவரசி ஸ்ரீ மேகவண்ணன் எனும் சிங்கள மன்னனின் அனுசரனையுடன் சிவன் கோயிலைக் கட்டி மண்முனையை மட்டக்களப்பு எனும் பெயரோடு ஆட்சி செய்தாளென்றும் "மட்டக்களப்பு மான்மியம்" எனும் நூல் கூறுகின்றது.

தற்போது மட்டக்களப்பு எனும் வழங்குமிடம் பிற்காலத்தில் போர்த்துக்கீசர் கோட்டை கட்டி மட்டக்களப்பு கோட்டை என பெயர் சூட்டியதால் ஏற்பட்டதே. உலக நாச்சியுடன் கலிங்கர் (காலிங்காகுடி), பாண்டியர் (சம்மானோட்டிகள்), கேரளர் (சேரர்) வங்கர் (வங்காளக்குடி) போன்றோர் வந்து மண்முனை பகுதியிலும் வியாபாரத்திற்காக வந்த பட்டாணிகள் (தற்போதைய முஸ்லிம்கள்) காத்தான்குடி பகுதியில் குடியேறிய படியால் வேடரினம் இடம் பெயர்ந்து கடைசியாக பாலமுனை பகுதிக்கு ஒதுங்கினர். இங்கு தற்போது முஸ்லிம்கள் குடியேறியதால் இவர்கள் தெற்கே நகர தொடங்கினர். ஆனால் இவ்விடம் தற்போதம் வேடர் குடியிருப்பு என வழங்கப்படுவதை அறியமுடிகிறது. கடந்த நூறு (100) ஆண்டுகள் வரையும் இங்கு வேடரினம் வாழ்ந்து வந்துள்ளது. இவர்கள் பிற்காலத்தில் தாளங்குடா, கோயில்குளம், புதுக்குடியிருப்பு, மாவிலங்கமுனை பகுதிக்கு சென்று குடியேறினர். மேற்படி பகுதிகள் யாவும் புதைபொருள் ஆராய்ச்சிக்கு உட்பட்டால் பல உண்மைகளை மேலும் உணரக் கூடியதாக இருக்கும்.

உலக நாச்சியின் காலத்திற்கு பின் சிகர கோபுரத்தை உடைய கோயிலை கிராமமக்கள் பரிபாலித்து வாழ்ந்து வந்தனர். இவ்வாலயத்தில் இருந்து கொக்கட்டிச்சோலை தான் தோன்றீஸ்வரருக்கு வேல் கொண்டு செல்லும் வழக்கமும் இருந்து வந்துள்ளது. இப்படியாக வாழ்ந்த மக்களுக்கு கேடு காலம் கிட்டியது.

16ம் நூற்றாண்டின் "ஜெராணி மோடி அசலேடோ" எனும் போர்த்துக்ச தளபதி படை எடுத்து வந்து கோயிலை இடித்து அழித்து கொள்ளையிட்டான். இதனால் இங்கு வாழ்ந்த மக்கள் ஆரைப்பற்றைக்கு (ஆரையம்பதி) குடிபெயர்ந்தனர். அக்காலத்தில் ஆரைப்பற்றை பகுதி காடாக இருந்ததோடு கோயில் குள பகுதி நாடாக இருந்தமையும் நோக்கத் தக்கது. ஆரைப்பற்றையில் குடியேறிய மக்கள் மேற்படி கோயிலின் இடிபாடுகளுக்கிடையில் ஒரு வேலொன்றை கண்டெடுத்து அதனை ஒரு மரத்தடியில் வைத்து வழிபட்டு வந்தனர். இந்த இடமே தற்போது முருகன் ஆலயம் அமைந்த இடமாகும். இவ்வாறு இவர்கள் அன்போடு வழிபட்டு வரும் போது (கைக்கோளாளர்) செங்குந்தர் எனும் பெரியாருக்கு முருகன் கனவில் தோன்றி தனக்கு ஒரு ஆலயம் அமைத்து தரும்படி கேட்டதாகவும் அதனால் அவர் கற்களால் ஒரு கோயிலைக் கட்டி அதில் அந்த வேலாயுதத்தை தாபித்து அபிஷேகம் செய்ததாகவும் வரலாற்று நிகழ்வுகள் கூறுகின்றன. இதனை சான்று படுத்தும் வகையில்,

வண்டாய நான் மறை பாடும்
மலர் சேர் காத்தான்குடிதனில்
பண்டு உள்ள ஊர் சனங்கள்
பரிவாய் சேர்ந்தோராலயத்தை
கண்டு களித்து வணங்கி வரக்
கதிர் செங்குந்த சாதியினில்
உண்டு எனவே நாகப்பர்
உயராலயத்தை பதிப்பித்தார்.

எனும் பாடல் 1975 - 1980ம் ஆண்டு கந்தசாமி கோயில் வரவு செலவு அறிக்கையிலும் 1999ம் ஆண்டு கும்பாபிஷேக மலரிலும் பிரசுரிக்கப்பட்டுள்ளது. இந்த நாகப்பர் பிள்ளை இல்லாமல் இருந்து முருகன் கோயிலில் விநாயக விரதம் அனுஷ்டித்தார் என்றும் விநாயகர் கனவில் தோன்றி இவருக்கு புத்திர பாக்கியம் கிடைக்கும் என்றும் பிள்ளை பிறந்தவுடன் தனக்கு ஒரு ஆலயம் அமைக்க வேண்டும் என்றும் கூறினார். அதன்படி சில வருடம் சென்ற பின் அவருக்கு ஒரு ஆண்குழந்தை பிறந்தது. இதனால் மனம் மகிழ்ந்த நாகப்பர் ஆரைப்பற்றை வடக்கு பகுதியில் ஒரு வில்வ மரத்தின் கீழ் வெள்ளை சலவைக் கல்லால் ஆன ஒரு விநாயகர் உருவத்தை ஸ்தாபித்தார். கனவில் அவருக்கு காட்சி கொடுத்த விநாயகர் நீல நிற மேனி உடையவராகவும் சிறப்பாக கண்டம் (கழுத்து) நீல நிறமுடையவராகவும் காணப்பட்டதால் அவர் ஸ்தாபித்த விநாயகருக்கு "நீலகண்ட விநாயகர்" என பெயர் பெறலாயிற்று. இங்கு ஆரைப்பற்றை எனும் இடம் தற்போது ஆரையம்பதி என சிறப்பிக்கப்படுகின்றது. இங்கு இக்கிராமத்தின் வளர்ச்சி பற்றி குறிப்பிடுதல் எதிர்கால சந்ததியினருக்கு சான்றாக அமையுமென நினைக்கின்றேன். மேற்படி ஆலயத்திற்கு 1907ம் ஆண்டு தென் இந்திய குமாரசுவாமி பேட்டையைச் சேர்ந்த தர்மபுரி ஆதினகுரு சதோதய முனிவரால் பாடப்பட்டு நொத்தாரிஸ் மு.த்ததம்பி முதலியாரால் அச்சிட்டு வெளியிடப்பட்ட பிரணவ அட்டகம். விநாயகர் பாமாலை, விநாயகர் பதிகம் என்பவற்றின் இறுதியிலே ஆரையம்பதி எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே அன்றிலிருந்து இவ்வூர்ஆரையம்பதிஎன அழைக்கப்பட்டிருக்கலாம் என அறியக்கிடைக்கிறது.

இதன் வடக்கு எல்லையாக காத்தான்குடி கிராமத்தையும் கிழக்கு எல்லையாக வங்கக்கடலையும் தெற்கு எல்லையாக பாலமுனை, சிகரம், கோயில் குளம் கிராமங்களையும், மேற்கே மட்டக்களப்பு வாவியையும் கொண்டுள்ளது. பல பாடசாலைகளையும், ஆலயங்களையும், பிரதேச செயலகம், பிரதேச சபை, தபால் நிலையம், விவசாயக் கந்தோர், கைத்தொழில் திணைக்களத்தினால் நடத்தப்படும் பயிற்சி நிலையம், பல நோக்கு கூட்டுறவுச் சங்கம், பொது நூல் நிலையம், பொதுச்சந்தை, மாவட்ட வைத்தியசாலை, பொது விளையாட்டு மைதானம், பொது மயானம், மாதா கோயில், பள்ளிவாசல் போன்றவற்றை தன்னகத்தே அடக்கியுள்ளதால், கல்வியிலும் சமய அனுட்டானங்களிலும். விளையாட்டுத் துறையிலும், அரசியலிலும் முன்னேற்றமடைந்து உயர்பதவி நிலை உத்தியோகத்தர்களையும், கல்வி மான்களையும், பல தொழில்களைச் செய்கின்றவர்களையும், அனைத்து இனமத மக்களையும் தன்னகத்தே கொண்டு செந்தமிழும், ஆங்கிலமும், சிவநெறியும் "முப்புரி நூல்" போல் மிளிர்கின்றது.

இவ்வாறு சிறப்புப் பெற்றிருக்கும் கிராமத்தின் வடபால் காத்தான்குடி எல்லையில் செங்குந்தர் வீதியில் ஸ்ரீ திருநீலகண்ட விநாயகர் ஆலயம் அமையப் பெற்றிருக்கின்றது. இவ்வாலயம் 16ம் நூற்றாண்டின் கடைசி பகுதியில் களிமண்ணால் கட்டப்பட்டது. இப்பகுதிகளில் செங்குந்த குல மக்கள் செறிந்து வாழ்ந்ததால் அவர்கள் வாழும் மத்திய பகுதியில் இது அமைக்கப்பட்டது. வட பகுதி வசித்த செங்குந்த குல மக்கள் நெசவு தொழில் வீழ்ச்சியடைந்ததால் இஸ்லாமிய மக்களுக்கு தங்கள் காணிகளை விற்று தெற்கு பக்கம்

குடியேறியதால் இவ்விடங்களில் இஸ்லாமிய மக்கள் குடியேறி தமிழ் மக்கள் வாழ்ந்த இடம் காத்தான்குடியுடன் சேர்க்கப்பட்டுவிட்டது. எனினும் இவ்வாலயத்திற்கு சொந்தமான நன்கொடை செய்யப்பட்ட தென்னங்காணிகள் இன்றும் காத்தான்குடி எல்லைக்குள் கோயில் வளவு எனும் பெயரோடு அமைந்திருக்கின்றது.

இக்கோயில் அமைந்துள்ள இடத்தில் இருந்து ஊற்றெடுத்துப் பாயும் நீரோடையின் சங்கம ஸ்தானமே காங்கேயனோடை என வழங்குவதும் ஈண்டு குறிப்பிட வேண்டிய ஒன்று. இக்கோயில் அமைக்கப்பட்ட நிலம் ஆரம்பத்தில் அரசினருக்கு சொந்தமாயிருந்தது. அதனை அரசிடமிருந்து ஏலத்தில் காசி நாதப்பட்டங்கட்டியார் வாங்கினார். இதற்குரிய பணத்தை ஆரையம்பதி செங்குந்த குல மக்கள் கொடுத்தனர் என்று கோயில் வளவு உறுதி கூறுகின்றது.

18ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் உலக நாதப்பட்டங்கட்டியார் வண்ணக்கராக இருந்து செங்குந்த குல மக்களும் ஏனைய சைவ நன் மக்களும் உதவிய நன்கொடைகளை கொண்டு இக்கோயிலைச் செங்கற்களால் கட்டி சுற்றிவர மதிலும் அமைத்தனர். சொறிக்கற்களே பாவிக்கப்பட்டன. இதனமைப்பு கொக்கட்டிச் சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலய தோற்றத்தையே முற்றிலும் கொண்டதாய் அமைந்திருந்தது.

19ம் நூற்றாண்டின் கடைசிப் பகுதியில் நொத்தாரிஸ் முத்ததம்பி முதலியாரும், சிவஞானமுத்து விதானையாரும் பரிகாரி குஞ்சித்தம்பியும் வண்ணக்கமாராக அமைந்த காலத்தில் கோயிலுக்கு முன் பக்கம் இருப்பது போன்றது கட்டுவிக்கப்பட்டது. இவர்களே இவ்வாலயத்தின் பக்கத்தில் உள்ள விநாயக பெருமானின் தாயாகிய மாரியம்மன் ஆலயத்தையும் கல்லால் கட்டுவித்தனர்.

இக்கோயில் மூலஸ்தானத்தில் ஸ்தூபி அமைந்துள்ளது. முன்புறம் மண்டபங்கள் உண்டு. இக்கோயிலுக்குள் பரிவார மூர்த்திகளாக வைரவர், நாகதம்பிரான், மகாவிஷ்னு, முருகன் ஆகியோர் அமைந்துள்ளனர். உட்பிரகாரத்தின் வடபுறம் ஒரு தீர்த்த கிணறும், தென்புறமாக மடப்பள்ளி அறைகளும் அமைந்திருக்கின்றன. அனைத்துக் கோயில்களுக்கும் அசையாமணிக் கோபுரம் முன்புறம் அமைந்திருக்க இக்கோயிலில் மட்டும் தென்திசையில் மணிக்கூட்டு கோபுரம் அமைந்திருப்பதை கண்ட அவர் எமது கோயிலிலும் இதே போன்று அமைக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு அதற்குரிய காண்டாமணியை அங்கிருந்தே பெற்று வந்து இதனை தனது செலவிலே அமைத்தார். இதே போன்று இலங்கையிலே எந்தவொரு கோயிலும் அமைந்திருக்கவில்லை. இது இக்கோயிலின் சிறப்பம்சமாக கருதப்படுகின்றது. இதே போன்று தான் இந்திய முனிவரால் பாடப் பெற்ற தல முகமாக விளங்குவதும் மேலும் சிறப்பை தருகிறது.

ஆரம்பகாலத்தில் இவ்வாலயம் கர்ப்பக்கிரகம், அர்த்தமண்டபம், மகாமண்டபம், எனும் மண்டபங்களை உடையதாக இருந்தது. இவற்றில் மகா மண்டபம் கட்டப்பட்டு நாட்டோடு வேயப்பட்டிருந்தது. தம்ப மண்டபம் 19ம் நூற்றாண்டில் கட்டப்பட்டு நாட்டோடு வேயப்பட்டது. ஏனைய மண்டபங்கள் 20ம் நூற்றாண்டில் கட்டப்பட்டு கொழுக்கி ஓடுவேயப்பட்டது தற்போது அனைத்து மண்டபங்களும் கொங்கிறீட் தளம் (PLATE) போடப்பட்டுள்ளது.

இவ்வாலயத்தில் மூன்றுகால பூசைகள் நடைபெறுகின்றது. வெள்ளிக் கிழமைகளில் மாலைப் பூசையை இக்கிராமத்திலுள்ள செங்குந்த குல மக்கள் குடும்பத்தினர் முறை வைத்து செய்து வருகின்றனர். சித்திரை வருடப்பிறப்பு, சித்திரைக்கதை, தீபாவளி, கந்தஷஷ்டி, விநாயகர் நோன்பு, விநாயகர் சதுர்த்தி, திருவெம்பாவை, தைப்பொங்கல், தைப்பூசம், மாசிமகம், சிவராத்திரி போன்ற விஷேட பூசைகளும் நடைபெறுகின்றன. இக்காலங்களில் காசிகாண்டம், கந்தபுராணம், திருவாதவூரடிகள் புராணம், சிவராத்திரி புராணம், விநாயகர் காப்புக் கதை, சித்திரபுத்திரனார் கதை, கம்சன் கதை முதலியன பண்டைக்காலம் தொடக்கம் படிக்கப்பட்டு வந்தன. தற்போது காசிகாண்டம், கம்சன் கதை என்பன பாடுவதில்லை.

விஷேட பூசைகள் காலத்தில் காப்பு விரதத் தீர்த்தம், மட்டக்களப்பு வாவியிலும் ஏனைய தீர்த்தம் யாவும் இந்து சமுத்திரத்தில் ஆடுவது வழக்கம். இக்கோயிலில் கொடியேற்ற திருவிழா செய்யும் முறை இன்று வரை உண்டாகவில்லை. (கோயில் அதிகார குழு) எனும் இக்குழு ஆலய பரிபாலன சபை காலத்திற்கு காலம் தெரிவுசெய்யப்படும். இவர்களை வண்ணக்கமார் குழு, பரிபாலசபையினர் என அழைக்கப்பட்டார்கள். இக்கோயிலுக்கு ஆரம்ப காலத்தில் நாகப்பரும் வைரவநாதரும், வண்ணக்குமார்களாக இருந்தனர். இவர்கள் கோயில் வளவுகளில் பெறப்படும் பிரயோசனங்களையும் ஊர் பொது மக்களிடம் பெறப்படும் மாதாந்த நன்கொடைப் பணத்தையும் கோயில் காணிக்கை வரும்படி பணத்தையும் கொண்டே பூசைகளையும், கோயில் குருக்களின் சகாய பணத்தையும் கொடுத்து வந்தனர். திருவிழா போன்ற விசேட பூசைகளுக்கு விசேட நன்கொடைகளை கிராம மக்களிடமிருந்து பெற்று நடத்தினர். அவ்வாறே தற்போதும் நடைபெற்று வருகிறது. 19ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் நொத்தாரிஸ் மூத்ததம்பி முதலியார், சி.ஞானமுத்து விதானையும், குஞ்சித்தம்பி வைத்தியர், இரத்தினேசர் என்போரும் வண்ணக்குமார்களாக இருந்து பல கட்டடங்களை கட்டுவித்தனர். 20ம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து 1976ம் ஆண்டுவரை ஐந்து முறை வண்ணக்கர் தெரிவு இடம் பெற்று இருக்கிறது. இத் தேர்வுகளின் போது இடம் பெற்றோர் யாவரும் தமது கடமையை கவர்ந்து நின்றார்கள் எனலாம்.

1917ம் ஆண்டுக்குப் பின் நெசவுத் தொழில் வீழ்ச்சியடைந்ததால் பொது மக்களிடமிருந்து நிதி திரட்டி கோயில் குருக்களுக்கு சம்பளம் கொடுக்க இயலாது போனமையால் நிர்வாகம் சரியாக இயங்கவில்லை. எனவே மூ.சிவசிதம்பரம் பிள்ளை விதானையாராகவும் நிலக்கிழாராகவும் இருந்த படியால் தம் சொந்த பணத்தை கோயில் குருக்களுக்கு சம்பளமாக கொடுத்து தமது மரண பரியந்தம் அதாவது 1935ம் ஆண்டுவரை அவரது மூத்தமகன் டாக்டர் சிவ.சோமசுந்தரம் அவர்களும் தமது சொந்த செலவில் ஐயரின் சம்பளத்தைக் கொடுத்து கோயிலை நிர்வகித்தனர்.

1936ம் ஆண்டு சித்திரை மாதம் தொடக்கம் 1942ம் ஆண்டு வரை திரு.க. சபாபதிப்பிள்ளை விதானையாரும், வ. சின்னையா முதலியாரும், கா. சோம நாத முதலியாரும், ந. அழகேசமுதலியாரும் வண்ணக்கமார்களாக இருந்து கோயிலின் பெரும் பகுதியை முற்றாக இடித்து, புதிய திருத்தங்களைச் செய்து 21.11.1941 இல் கும்பாபிஷேகம் செய்வித்தனர்.

1942ற்கு பின் க.சபாபதிப்பிள்ளை விதானையாரின் மரணத்தை அடுத்து திரு. முருகேசு செல்லத்துரை, பூபாலபிள்ளை சுப்பிரமணியம், நல்லதம்பி அழகேச முதலியார் என்பவர்கள் வண்ணக்குமார்களாக இருந்து கோயிலை பராமரித்து வந்தனர். அதன்பின் 1949ம் வருடம் ஐப்பசி மாதம் 8ம் திகதி (08-10-1949) பின்வருவோர் ஆலய திருப்பணிச்சங்கம் எனும் பெயரில் தெரிவு செய்யப்பட்டனர். தலைவராக ஞானமுத்து செல்வநாயகம் ஆசிரியர் அவர்களும் இணைக்காரியதரிசிகளாக நல்லதம்பி அழகேச முதலியார் (J.p) அவர்களும் சிவசிதம்பரப்பிள்ளை விவேகானந்த முதலியார் ஆசிரியர் அவர்களும், தனாதிகாரியாக முருகேசு தருமலிங்கம் ஆசிரியர் அவர்களும் ஏனையோர் நிர்வாகசபை உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டனர். இவர்கள் காலத்தில் ஆலய வளவான மெயின் வீதியில் அமைந்துள்ள இடத்தில் கடைகள் கட்டி வாடகைக்கு விடப்பட்டன. மேலும் கோயில் திருத்த வேலை, ஸ்தூபி வேலை, மடப்பள்ளி, மதில் செப்பனிடல், முன்மண்டபம் ஓலையால் அமைத்தது போன்ற வேலைகள் செய்யப்பட்டு 27-11-1957 ம் வருடம் மகா கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. பிரதம சிவாச்சாரியாராக சிவஸ்ரீ. பொ. கந்தையா குருக்கள் (ஞான வைரவர் ஆலயம் உரும்பிராய்) அவர்களும் அக்காலத்தில் ஆலய பிரதம குருவாக இருந்த சிவஸ்ரீ. இ.கந்தசாமி குருக்களும் இணைந்து இதனை நடாத்தி வைத்துள்ளனர்.

01-09-1959 ம் ஆண்டு எரிபொருள் நிரப்பு நிலையம் ஆரம்பிப்பதற்காக காசிம் முகம்மது என்பவருக்கு குத்தகையாக ஆலய காணி வழங்கப்பட்டது. 1950ம் ஆண்டு கார்த்திகை மாதத்திலிருந்து 1953ம் ஆண்டு தை மாதம் வரை திரு.ஞா. செல்வநாயகம் ஆசிரியர் (தலைமை வண்ணக்கர்) அவர்களின் சொந்த பணத்தில் குருக்களுக்கு சகாய பணம் கொடுத்து ஆலயத்தைப் பராமரித்து வந்துள்ளார். மேலும் 1957 ம் ஆண்டு இடம் பெற்ற ஆலய திருத்த வேலைகளிலும் பெரும்பாலான பணத்தை தன் சொந்த பணத்தில் செலவு செய்துள்ளார்.

19.01.1960ம் ஆண்டு "ஆலய திருப்பணிச்சங்கம்" என இயங்கி வந்த இச்சங்கமானது "செங்குந்தர் தேவஸ்தான பரிபாலன சங்கம் ஆரையம்பதி" என பெயர் மாற்றம் செய்யப்பட்டது. தலைவராக ஞா. செல்வநாயகம் அவர்களும். செயலாளராக சு. தேவராச முதலி அவர்களும், பொருளாளராக மு. நாகமணி அவர்களும் ஏனையோர் நிர்வாக சபை உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டனர். இவர்கள் 11-01-1962ம் வருடம் நியமன சாதனம் (ரஸ்த்தி) எழுதப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டார்கள். உறுதி இலக்கம் 1947, இவர்கள் ஆலய கருமங்களை சிறப்பாக கவனித்து வந்தார்கள்.

16-05-1973ம் வருடம் இ. வடிவேலன் அவர்கள் தலைவராகவும், சீ.விவேகானந்த முதலியார் செயளாலராகவும், மு.தர்மலிங்கம் அவர்கள் பொருளாளராகவும் அழகேச முதலியார் அவர்களும் சீ. சிவஞான முதலி அவர்களும் உதவியாளராக இருந்து ஆலயத்தை திருத்தி 1974ம் ஆண்டு கும்பாபிஷேகம் செய்த வைத்தனர். அதன் பின்னரும் முன்னரும் எமது நிர்வாக சபையில் இருந்து தொண்டு செய்தவர்களின் பெயர்ப்பட்டியல் பின்னால் இணைக்கப்பட்டுள்ளது.

09.04.1989ம் வருடம் கண.யோகராஜா தலைவராகவும் இரா.யோகேந்திரன் செயலாளராகவும், சீ.சிவஞானமுதலி பொருளாளராகவும் ஏனையோர் உறுப்பினர்களாகவும் இருந்து ஆலய வேலைத் திட்டங்களை மேற்கொண்டு வருகின்ற வேளையில் ஸ்ரீ முத்து மாரியம்மன் ஆலயம், விநாயகர் ஆலய மதிலுடன் ஒன்று சேர்ந்து இருப்பது உகந்தது அல்ல என பல அறிஞர்களாலும் கூறப்பட்டது. அதனால் அதனை உடைத்து மாரி அம்மன் கோயிலை புதிதாக அமைத்து விஸ்வபிரம்மம் வை.இ.எஸ்.காந்தன் குருக்கள் ஐயா அவர்களால் கும்பாபிஷேகம் செய்யப்பட்டு இன்று அழகாக காட்சியளிப்பதை காணக்கூடியதாக உள்ளது. மேலும் இவ்வாலயம் ஆரம்பித்த காலத்திலிருந்து குடும்பங்கள் இணைந்த பாகை முறை சடங்காகவே மாற்றம் செய்து சிறப்பாக் இடம்பெற்று வருகின்றது. இவை இரண்டும் இக்காலங்களில் நிகழ்ந்த முக்கிய நிகழ்வாக கருதப்பட வேண்டியதாக உள்ளது.

28.05.1994 தலைவராக சீ.சிவஞான முதலி அவர்களும். இணைச் செயலாளர்களாக செ.சோதி நாதன் அவர்களும், நா. புஸ்பநாதன் அவர்களும் பொருளாளர்களாக வி.அற்புதானந்த முதலியார் அவர்களும் ஏனையோர் உறுப்பினர்களாகவும் தெரிவு செய்யப்பட்டனர். இவர்கள் ஆலயத்தை பரிபாலித்து வரும் காலத்தில் ஆலயம் சிதைவடைந்துள்ளதாலும், மூல விநாயகர் சிலை சேதமடைந்து இருப்பதாலும் ஆலயத்தை புனர் நிர்மானம் செய்யும் பொருட்டு 03-04-1996ம் வருடம் பாலஸ்தாபனம் விஸ்வப்பிரம்மம் வை.இ.எஸ்.காந்தன் குருக்கள் ஐயா அவர்களால் செய்யப்பட்டது. இதே காலத்தில் இங்கு ஆலய அர்ச்சகராக இருந்த சிவஸ்ரீ. வே. கருணாகரன் ஐயா அவர்களின் சேவை பற்றி குறிப்பிட வேண்டியதும் கடமையாகும். இவர்தான் ஓர் அர்ச்சகர் என்ற நிலையில் இல்லாமல் எமது இளைஞர்களுடன் தானும் ஒருவராக இணைந்து ஆலயத்தை முற்றாக இடித்து அள்ளும் பணியிலும் புணருத்தாரண பணியிலும் பங்கு கொண்டமையை நாம் அனைவரும் மறந்துவிட முடியாது. அத்துடன் அன்றிலிருந்து இன்று வரை இவ்வாலயத்தில் பூசை செய்தும் வருகின்றார்.

27-08-1997 ம் வருடம் புதன் கிழமை ஆலய நிர்மான பணிகள் ஆரம்பிக்கப்பட்டு கட்டட வேலைகள் இடம் பெற்று வந்தன. அப்போது தலைவராக இருந்த பூசகர் சீ. சிவஞான முதலி அவர்களின் பங்களிப்பை நினைவு கூருதல் இவ்விடத்தில் சாலச்சிறந்தது. ஏனெனில் இன்று இவ்வாலயம் அழகாக அமைக்கப்பட்டிருப்பதற்கு காரண கர்த்தாவாக இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் 11-06-2006 வரை தலைவராக இருந்து பணி செய்ததுடன் தற்போது போஷகராகவும் இருக்கின்றார்.

11-06-2006 ம் வருடம் புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டது. தலைவராக கலாநிதி. இரா.பத்மரஞ்சன் அவர்களும் செயலாளராக ச.மணிசேகரன் அவர்களும் பொருளாளராக நா.புஸ்பநாதன் அவர்களும் ஏனையோர் உறுப்பினர்களாகவும் போஷகர்களாக பூஷகர் சி.சிவஞான முதலி அவர்களும் ஆசிரிய சிரோன்மணி த.செல்வநாயகம் அவர்களும் சட்டத்தரணி.வ.வினோபா இந்திரன் அவர்களும் டாக்டர். வா.ஞானரெட்ணம் அவர்களும் த.ராஜேஸ்வரன் (M.L.T) அவர்களும் தெரிவு செய்யப்பட்டனர். இவர்கள் 2007ம் ஆண்டு பங்குனி உத்திரத்திற்கு கும்பாபிஷேகம் செய்ய வேண்டும் என்ற இலக்கை வைத்து திருப்பணி வேலைகளை துரிதமாக செய்தனர். இருந்தும் குறித்த தினத்தில் இதை நிறைவேற்ற முடியாமல் போய்விட்டது. இக்காலத்தில் தலைவராக இருந்த அமரர். கலாநிதி.இரா.பத்மரஞ்சன் அவர்களின் பங்களிப்பு கூடியளவு இருந்ததையும் குறிப்பிட வேண்டியுள்ளது. மேலும் இக்காலத்தில் எல்லை வீதியிலிருக்கும் ஆலய வளவினுள் ஆறு கடைகள் கல்லால் கட்டுவிக்கப்பட்டது.

03-06-2007ம் வருடம் தலைவராக இருந்த இரா.பத்மரஞ்சனின் மரணத்தை அடுத்து புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டது. அதில் தலைவராக கன.யோகராஜா அவர்களும் செயலாளராக ச.மணிசேகரன் அவர்களும் பொருளாளராக வி.பரிபூரணானந்த முதலியார் அவர்களும் உபதலைவராக த.பாலச்சந்திரன் அவர்களும் உபசெயலாளராக மா.யசோதரன் அவர்களும் உப பொருளாளராக சி.ஜினோரஞ்சன் அவர்களும் உறுப்பினர்களாக பொ.இந்திரலிங்கம், இரா.பிரதீபன், ப.லக்ஸ்மன் வி.அற்புதானந்த முதலியார், கு.யசோதரன், பா.பிரபாந்தன், செ.சோதிநாதன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். கணக்குப் பரிசோதகராக ச.ரெட்ணராஜ் அவர்களும் நியமிக்கப்பட்டனர். கும்பாபிஷேகத்தை துரிதமான செய்ய வேண்டும் என்ற நோக்கோடு பின்வருவோர் கும்பாபிஷேக குழுவாக தெரிவு செய்யப்பட்டனர்.

இரா.பிரதீபன், மா.யசோதரன், சி.ஜினோரஞ்சன், பொ.இந்திரலிங்கம், ப.காண்டீபன், கீ.சூரியகாந், பா.பிரபாந்தன், கு.யசோதரன், சி.பாலகுமார், நா.புஸ்பநாதன், வி.அற்புதானந்த முதலியார், திருமதி.செள.சிவானந்தம், திருமதி.கோ.பாலசுப்ரமணிய முதலி இவர்கள் தங்கள் கால நேரத்தையும் உணவையும் பொருட்படுத்தாது செயற்பட்டதால் எதிர்பார்த்த தினத்தில் எம்பெருமானின் குடமுழுக்கு விமர்சையாக இடம்பெற்றது. இதே நேரத்தில் கலைச்சிற்பி பொ.இந்திரலிங்கம் அவர்களின் சேவையை நாம் இவ்விடத்தில் நினைவு கூருதல் எமது கடமையாகும்.இவர் ஸ்ரீமுத்து மாரியம்மன் ஆலயத்திற்கு அழகிய தேர் ஒன்றையும் மரத்திலான திருவாசி ஒன்றையும் சொந்த செலவிலும், சகடையை சில அன்பர்களின் உதவியுடனும் புதிதாக வடிவமைத்து கொடுத்தது மாத்திரமல்லாமல் விநாயகர் ஆலயத்திற்கான நான்கு மரக்கதவுகளையும் அழகாகவும் கூடிய விரைவிலும் எந்தவிதமான கூலியும் பெறாது செய்து தந்துள்ளார். மேலும் ஆலயத்தில் இடம் பெற்ற அனைத்து தச்சு வேலைகளையும் எவ்வித சிரமமும் பாராது கூலியும் பெறாது செய்து முடித்தமையும் நாம் குறிப்பிடத்தக்கது. அடுத்து ஆசிரிய சிரோன்மணி செல்வநாயகம் குடும்பத்தினர் ஆலய நிர்மான பணிகளுக்கு கூடியளவு நிதி வழங்கியமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

நிதிமிகுந்தவர் பொற்குகை தாரீர்
நிதிகுறை ந்தவர் காசுகள் தாரீர்
அதுவுமற்றவர் வாய்ச்சொல் அருளீர்
ஆண்மையாளர் உழைப்பினை நல்கீர்

எனும் பாரதி பாடலுக்கு ஒப்ப செங்குந்தகுல மக்களினதும் ஏனைய சமூக சமய மக்களினதும் புலம் பெயர்ந்து அயல் நாடுகளில் வசிக்கின்ற மக்களினதும் பங்களிப்புடன் 12 வருடங்களின் பின் 11-02-2008 ம் வருடத் திங்கட்கிழமை மகா கும்பாபிஷேகம் சாகித்திய சிரோன்மணி வேதாகம வித்தியாபதி சிவாகம குருமணி குமார விக்கினேஸ்வர சிவாச்சாரியார் அவர்களின்

தலைமையில் (சப்தரிஷி இந்து குருபீடாதிபதி கொட்டகலை) மிகவும் கோலாகலமாக இடம் பெற்றது. இங்கு நடந்த மண்டலாபிஷேக பூசை இடம்பெற்று 14.03.2008 அன்று வெள்ளிக் கிழமை ஆரையம்பதி சிவனேஸ்வரர் ஆலயத்தில் இருந்து பால்குட பவனி இடம்பெற்று 1008 சங்குகளினாலும் பாற்குடங்களினாலும் சங்காபிஷேகம் சிறப்பாக இடம்பெற்றது. இங்கு நடந்த மண்டலாபிஷேக பூசையினை பல அன்பர்களும் சிறப்பாக செய்து எம்பெருமானின் அருளைப் பெற்றுள்ளனர். இம்மாபெரும் காரியத்தை நிறைவு செய்ய உதவி செய்த அனைவரினதும் பெயர் குறிப்பிட முடியாவிட்டாலும் இவ்விடத்தில் நினைவு கூர்ந்து அவர்கள் அனைவருக்கும் எம் பெருமானாம் ஸ்ரீ திருநீலகண்ட விநாயகப் பெருமானின் அருள் கிடைக்க பிரார்த்திக்கின்றோம்.

நன்றி.

"அன்பே சிவம் அதுவே நலம்"

இவ்வரலாற்றை எழுதுவதற்குரிய உறுதுணையாக இருந்தவர்களுக்கும் உசாத்துணை நூல்கள் ஆசிரியர்களுக்கும் இதனை எழுதுவதற்கு உத்வேகம் கொடுத்தவர்களுக்கும் எனது நன்றிகள் உரித்தாகட்டும்.

1) செங்குந்த பிரபந்ததிரட்டு -
2) மட்டக்களப்பு சைவக் கோயில்கள் - அமரர் வீ.சி.கந்தையா பண்டிதர்
3) அமரர்.ஞானமுத்து செல்வநாயகம் (முன்னாள் வண்ணக்கர் அவர்களின் குறிப்புப் புத்தகம்)

4) அமரர்.தமிழ்மணி சிவ.விவேகானந்த முதலியார். (கோயில்குள ஆலய வரலாறும் விநாயகர் ஆலய குறிப்புகளும்)
5) ஆலய கூட்டக்குறிப்பு பதிவுப் புத்தகங்கள்
6) பூசகர்.சீ.சிவஞானமுதலி (போஷகர்)

இவ்வண்ணம் இறைபணியில்
சக்தி.திரு.வி.பரிபூரணானந்த முதலியார்
(பொருளாளர் ஆலயபரிபாலன சபை)

## ஸ்ரீ திருநீலகண்ட விநாயகர் அகவல்

ஆரையம்பதி எனும் ஊரகம் மருவும்
வீர செங்குந்தர் வீதியில் விளங்கிடும்
திருநீலகண்டத் தேவே யுனது
திருத்தாழ் வணங்கிடும் சேயேன் எனக்கு
பரந்த அறிவும் பார்புகழ் செல்வமும்
சுரந்தருள் செய்வாய் சுருதியுட் பொருளே
சாந்தம் பொறுமை சற்குணம் யாவும்
ஏந்தலே தந்து எனப் புரந்திடுவாய்
தும்பி முகத்துச் சோதியே உன்னை
நம்பித் துதிக்கும் நாயினேன் எனக்கு
பாவ வினைகள் பற்றிடா வண்ணம்
ஏவும் வினைகள் எனை யனுகாமல்
எண்ணிய யாவும் எளிதினில் நிறைவுற
புண்ணியா திருவருள் புரிந்தருள்வாயே
திங்கது செய்யும் தீயோர் தமக்கு
ஓங்கிய நற்குணம் உதவிடும் நற்பரனே
தேக நற்சுகமும் தீர்க்கமாய்த் தந்து
மோகமயக்கம் முனைத் தெழாமல்
திருநீலகண்டா திருவருள் புரிவாய்
வருமடியார்க்கு வல்வினை புரிவாய்
உம்பகற்கரசே உமை பெரு மகனே
வெம்பிடாதருள்வாய் வித்தக மணியே
சித்தி புத்தியர் திரு நாயகமே
நம்பியே உன்னை நித்தமும் ஏற்றிட
ஆனைமுகத்து அண்ணலே எனக்கு
ஞானப் பழத்தை நல்கிடும் பரனே
கோவே வாழ்வு சிறப்புடன் தந்து
கோனே எந்தன் குறை தீர்த்தருள்வாய்
பாயில் இருந்து பரிதவிக்காமல்
காக்கும் விநாயக களிரே உன்னை
பூக் கொண்டு துதித்துப் போற்றிட அருள்வாய்
மோன குருவே மூஷிக வாகனா
ஞானக் கொழுந்தே நம்பிடும் அரசே
உத்தமக் குன்றே ஒருதனிப் பொருளே
சித்தம் இரங்கி சிறியேனுக்கருள்வாய்
நாரதனுக்கு நல்லுரை புகன்ற
ஆரணப் பொருளே அடைக்கலம் ஐயா
ஆதியே அடைக்கலம் அண்ணலே அடைக்கலம்
சோதியே அடைக்கலம் சுருதியே அடைக்கலம்
அடைக்கலம் அடைக்கலம் அடைக்கலம் உனக்கு.

ஆக்கம் :

*இலக்கியமணி அமரர்.நல்.அழகேசமுதலியார்.*

# திருநீலகண்ட விநாயகர் திருப்புகழ்
## காப்பு

*•••••*

சின்ன வயதில் யான் சீர்தொண்டு செய்வதற்கு அன்னைபோல் வந்தென்னை ஆளாக்கி - என்னிதயம் போற்று திருநீலகண்டப் பூரணனே இக்கோவை சாற்ற வரமீவாய் சரண்.

1) திருவை அணையுமால் மருகோனே
தினமுமுனை நாலும் பணிவேனே
உருவில் ஒரு கரியை நிகர்வோனே
உனதருளை வேண்டி வருவேனே
திருகி ஒரு மருப் பொடித்தோனே
திகிரி தனிலெழுதி முடித்தோனே
திருமலரை அள்ளிச் சொரிவேனே
திருநீலகண்டர் பெருமானே.

2) அடியவரினுள்ளம் உணர்வோனே
அருள்மழையை யெங்கும் பொழிவோனே
அடிமுடியில்லாத பரம் பொருளே நீ
ஆதிபகவனின் புதல்வோனே
கொடியவினைபோக அருள்வாயே
குருபரனின் ஞான முதல்வோனே
கடிமலரை அள்ளிச் சொரிவேனே
கருணைபுரி தெய்வப் பெருமானே.

3) தொந்தி வயிற்றானைத் துதிப்பேனே
தொல்லைகளை நீக்கி இருப்பேனே
ஐந்தகரத்தனை அழைப்பேனே
அல்லல்களை அகற்ற வருவானே
பந்தமொடு பாதம் பணிவேனே
பரிந்துவரமனைத்தும் பெறுவேனே
கந்தமுறு மலரைக் குவிப்பேனே
கடிதில் வரமருள்வாய் பெருமாளே.

4) விக்கினங்கள் தீர்க்க வருவோனே
விக்கினேஸ்வரப் பெருமானே
முக்கனியும் பாலும் தருவேனே
முத்தமிழை எனக் கருள்வாயே!
முத்திநிலை யளிக்க முயல்வோனே
முக்கனனின் முத்த புதல்வோனே
பக்தியுடன் உன்னைத் துதிப்பேனே
பாவவினை தீரும் பெருமானே.

5) சங்கரனின் மைந்தனே நீ வருவாயே
செங்கரத்தைத் தூக்கி ஆசி தருவாயே
மங்களங்கள் பாடி நிதம் மகிழ்வோனே
மனங்குளிரப் பொங்கலையும் படைப்பேனே
மாங்கனியை வாங்க வலம் வந்தோனே
மனமுருகி இன்னலையும் தீர்ப்பாயே
தீந்தமிழின் சுவைபருகத் தருவாயே
திருவுளத்தால் கருணைபுரி பெருமானே.

ஆக்கம்
அமரர். செல்வி.சிவசிதம்பரப்பிள்ளை திருமலர்ப்பாக்கியம்
ஓய்வுபெற்ற ஆசிரியை,
செங்குந்தர் வீதி,
ஆரையம்பதி - 02.

# திருநீலகண்ட விநாயகர் பதிகம்
## ஸ்ரீ மஹா கணபதியே நமஹ
## சிறப்புப் பாயிரம்
### நேரிசை யாசிரியப்பா
*............*

திங்கணதி பொருத்த செங்கனற் சடிலனைத்
தேசுடை மணிதிகழ் மாசுணப் பணியனைச்
சிஃறலைத் தவன்செயப் பஃறலைப் பாந்தன்
சென்னிப் பரிப்பவுண் நன்னில மாதியர்
அண்டம் பெறுமோ ரொண்டொடிப் பாதியை
நெஞ்சத் தவிசலர் கஞ்சத் திருத்து
பக்தன்வியன் திருப்பத்தூரகத்தன்
நாதங் கடந்த போதத் திருந்த
விதானத்தமர்தரு சதோதய முனிவனை
இலங்கா தீழத் திலங்காபுரிப்பான்
மட்டுக்கொழும்பின் மொட்டுடைந்தலர
மருத மாய சுரதம் பாடு
மதுகரம் குழுகுப் புதுமது மாந்த
நாகிளம் பருவக் கோகில நல்லார்
மேனிமாந் தளிரென கானமேற் கூவ
தத்தித் தத்தித் தத்தை கொஞ்ச
மாகனச் சொல்லால் நாகண வாய்ப்புள்
பேசப் பொலிந்த வாசச் சோலை
கமலத் தொட்டி லமலைத் திரைகள்
ஆட்டப் பெண்டழிக் கூட்டி நலம்பொலி
வாவிகட் சூழ்வரு மோவியம் புரையும்
ஆரையம் பதியெனு மூரக முடையோன்
சைவசமய மெய்வசங் கொண்டோ(ன்)
உபசுப்ர மணியச் சிவமரபாளன்
வேலாயுதவனற் பாலகனானோன்
நொத்தாரிஸ்என்னும் உத்தியோகத்தினன்
மூத்த தம்பியென்றேத்தபி தானன்
அன்புருவாய பேரன்பிற் கனிந்து
பிரணவன் தனக்கோரரனெனப் புகல
திருநீலகண்டப் பரனீர் மைந்த
கணபதி தனக்கிங் குணவணியாய
அலங்கற் றமிழாலலங்கரித துதவ
வேண்டுமென்ன வேண்டி யுலகுளோர்
தழியிப்புரங் காத்துக் குழீயித் துதிப்ப
தந்தானறம்புரி நல்ல சிந்தையன்
சிவஞ்சாரிதயத் தவமிக் கோனே.

இது தருமபுரியைச் சார்ந்த குமாரசாமிப்பேட்டை ம.ற.ற.ஸ்ரீ.தணிகாசலமுதலியாரால் 1907ம் ஆண் டு இயற்றப்பட்டது.

# இலங்காபுரி மட்டுக் கொழும்பு
# ஆரையம்பதி செங்குந்தர் வீதி
# திருநீலகண்டவிநாயகர் பிரணவட்டகம்
## ஸ்ரீ மஹா கணபதியே நமஹ

*•••••••••••••••••*

1) காராயுனை யல்லால் கதி கானேனடியேனே
ஏராருல கெல்லாந்தரு மெந்தாயுமைமைந்தா
பாரார்தொழும் பொருளேயிசை பண்ணேயிருகண்ணே
சீராரையம் பதிமாமுக சிவமே பிரணவமே.

2) கருவாயெனை யினியோரனை கானாவணம் பேணா
அருவாயுரு வானாயென தன்னே பசும்பொன்னே
மருவா மலருளதாள் கொடுவானோர் பணிதேனே
திருவாரையம் பதிமாமுக சிவமே பிரணவமே.

3) மகிழாதக நெகிழாதொரு மதியாகியகதியே
சகமீதரும் பொருணீயருள் தனியே கயமுனியே
நிகராறிய பரமேபெரு நிதியே சிவகதியே
திகழாரையம் பதிமாமுக சிவமே பிரணவமே.

4) வீணாசையி லுழலாவரு விதியால் சிறுமதியேன்
நாணா வகையருளாய் குருநாதா சுகபோதா
மாணாரண முடிமேலொளிர் மணியேமணியணியே
சேணாரையம் பதிமாமுக சிவமே பிரணவமே.

5) ஆசாடவி தனில் நாயினேன் அந்தோவென நொந்தேன்
பூசாபல மிதுவோவரும் பொருளேயெனக்கருளே
பாசாங்குசக் கையாசிவ பாலாகுணசீலா
தேசாரையம் பதிமாமுக சிவமே பிரணவமே.

6) நாவாலது தினமோங்கண நாதாவென் வோதா
தாவாபல பகலேகினவறியா மதிநெறியால்
காவா வினி நின்றாயரை காலேகதியாலே
தேவாரையம் பதிமாமுக சிவமே பிரணவமே.

7) நலம்போல்வரு மிடருன்மிக நலியாமனஞ் சலியா
புலம்பாவுன திருதாள் மலர்புணையே நறுந்துணையே
வலம்பாரெனத் தொழுதேனெனை வந்தாதரி நந்தாற்
சிலம்பாரையம் பதிமாமுக சிவமே பிரணவமே.

8) ஆங்காரமு மகலாருனை யடையாரெனு மடையாற்
பாங்காக முளாதாலுனைப் பணிவேன் மலரணிவேன்
தூங்காநெடுங் கையாயருள் செய்யாய்மழை பொழிமீத்
தேங்காரையம் பதிமாமுக சிவமே பிரணவமே.

பிரணவட்டகம் முற்றிற்று.

# திருநீலகண்ட விநாயகர் பதிகம்

## காப்பு – "நேரிசை வெண்பா"

*.................*

திருவைத் திருவாற் சிறப்பிப்பான் போலும்
அருவுமுருவு மிலாத்தொரு பரமும்
முன்னேன் புகலவைக்கு முன்னாக நின்றனக்கே
சொன்னேன் பலகாற் துதி.

## பதினான்கு சீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்

*...........*

1) கனககன மணிமகுட வொளிசடில முடிநிலவு
காந்தி பரமப மென்னக்
கவுளயளி லிளியருவி சுடரதனை பருகவரு
கானன் மதுகர சீவர
மினகதிரெயிறு விரிய நுதலிலணி தருசுவண
வில்லேந்து பாசாங்குச
மிலகுகர கரமசர சரமுதவு நெடியகர
மீர்ங்கிரண மின்ப வடிவா
மனகமன வடியரிடு சிறுபயறு கடலைபொதி
யகடுபெரி தெரியாதப
மழிவிலொரு கதியுதவி பதயுகள கதிரறிய
வருளுமிது ததியமலனே
தினகரனை பொருவுசின கரவாரையம்பதிச்
செங்குந்தர் வீதிமேவுஞ்
சிந்தித மனோரதந் தந்தமா தங்கமுக
திருநீலகண்ட பரமே.

2) வன்னி மந்தாரை மாதுளை கூவிளத்திலோ
மாவிலையிலோ வறுகிலோ
மருதிலையிலோ நொச்சி கத்தரியி னிலையிலோ
மாசி பத்திரங் கரிசிலாங்
கானாத்தி மஞ்சடரு மத்தவிலை மீதிலோ
கனவெள்ளே ழுக்கதனிலோ
தன்னிகரிலாத சிவகண நாயகாவுபய
சாணார விந்தபரநின்
தனக்கெது மனத்துற லெனக்கது புகற்கொடு
தரித்துனது சரணமுறுவேன்
தென்னிலங்காபுரியி லுறையாரையம்பதிச்
செங்குந்தர்வீதி மேவுஞ்
சிந்தித மனோ ரதங் தந்தமா தங்கமுக
திருநீலகண்ட பரமே .

3) கோங்கிலவு கமலமுகை யெனவளர்ந் திருமாந்த
கொங்கையே கூர்த்த துதியாற்
கொல்விட மனைந்த இலைவேனிகர் விலோசனக்
கொள்ளையே யன்ன நடையே
பூங்குரு தருந்தலைக் கோலமே மடமாதர்
போந்தெழி லுறுஞ் சாலமே
புந்தியை கவர்ந்தவிது பந்தமெனின் மோக்கமாம்
போத மெத னாலடைவனோ
மாங்கனி விரும்பிவலமாகி சிவனகமகிழ
வாங்கியொரு கவளமிட்ட
வாயனே வல்லபையின் நேயனே சொல்லுமொரு
மாற்றமிது தருணமையா
தீங்கழை பொலிக்கழனி திகழாரையம்பதிச்
செங்குந்தர்வீதி மேவுஞ்
சிந்தித மனோரதங் தந்தமா தங்கமுக
திருநீலகண்ட பரமே.

4) பூத்தா ரகன்றட மகன்றிலாக் கானலைப்
புனலென்று வெள்ளறிவினாற்
புரவந் திரிந்தலைந் தொருபயனு மறியாத
புலிவாயெனப் பொய்பிகக்
கூத்தாயியங்கு தனு கரணபுவனம் போக
குறைபினாலிடறு நெடிய
குன்றிடத் தெற்றுண்டு பரசுக முணர்ந்திலேன்
கோதென்றெலா மொருங்க
நீத்தாரை நீத்தநெறி நின்றுதவ முறுகின்ற
நிருவாண திசையுளாரை
நேடிற்றிலேன் கண்டு கூடிற்றிலே னெங்கள்
நித்தனே புத்தியருளாய்
தேத்தால மடர்சோலை யோங்கா ரையம்பதிச்
செங்குந்தர்வீதி மேவுஞ்
சிந்தித மனோரதங் தந்தமா தங்கமுக
திருநீலகண்ட பரமே.

5) தருமலவு பவனத்தி லரசனாயங்குள்ள
சசியாதி போகத்தினும்
தாரணியிலேக சக்ரேசனா யிங்குள்ள
தாழ்விலாப் போகத்தினும்
கருமருவு சனனமரணந்தரு நசைத்தது
கறங்கின்ப துன்னமென்னுங்
காரணத்தாற் சமதமாதி குணமேமையேன்
கான்பனேவென வாடினேன்
மருமருவலர்க் கொடியினிமையோ ரனுதினம்பரவு
வந்திதம்புய பாதமாம்
மலைமகள் புத்ரகணநாயகா கனவாகு
வாகனாவேக கருணா
திருமருவு மட்டுக்கொழும்பா ரையம்பதிச்
செங்குந்தர்வீதி மேவுஞ்
சிந்தித மனோரதங் தந்தமா தங்கமுக
திருநீலகண்ட பரமே.

6) தங்கமல மனையாதி பந்தமல மனமல்ல
தரையல்ல புனலுமல்ல
தணலல்ல காலல்ல வெளியல விருக்காதி
சதுர்வேத மல்லவேதத்
தங்கமல்ல வாகமா திகழல்ல வுபநிடத
மல்லமெய்ப் பொருளென்றுரைத்
தான்றோ ரிருந்த நிலையோ நீயிருந்தவிட
மலதணுவிட னொய்யமனமா
எங்கமல மங்கங் கிருத்தியோ வுலகமாய்
என்நெஞ் சகமண்டமாக
எந்தவினை செய்துளேன் அந்தமுத லிடையிலா
எந்தையே சிறிதுபுகலாய்
செங்கமல மலர் வாவி சூழாரையம்பதிச்
செங்குந்தர்வீதி மேவுஞ்
சிந்தித மனோரதங் தந்தமா தங்கமுக
திருநீலகண்ட பரமே.

7) அவசமனமாக உடலம் புளகிதங் கொள்ள
அங்கரோமம் பொடிப்ப
அஞ்சரோரு கமல அடிக்கண்ட கண்கணீ
அருவி முத்தங்கொழிப்ப
திவசமணி யாவிழுங் கரியவா பிரமனு
செப்பநாக் குளறவென்னைச்
செய்வித்த நின்கருணை என்னென வியப்பதென்
தெய்வமே யெங்குமிசையே
கவசமணி தருமைங் கராவெங் கராவுரி
கருத்தன தவபுத்திரா
கைம்முகா விக்கின விநாயகா கைலாய
கதிவிகித கணநாயகா
சிவசமய நெறியாள ருறையா ரையம்பதிச்
செங்குந்தர்வீதி மேவுஞ்
சிந்தித மனோரதங் தந்தமா தங்கமுக
திருநீலகண்ட பரமே.

8) அகரவுயிரென உலகடங்க நிறைவாய்கர
ஆயமித வண்டபிண்ட
ஐம்பூத காரியத் தெழுமசர சரபேத
ஆக்கியவை நின்றியங்க
உகரவடிவாய் நான்குயோனியெழு வகைத்தோற்ற
உள்ளும் புறம்புமுணர்வை
உண்ணத்தெவிட்டப் புகட்டிப் புரந்தவை
ஒருங்கல் பெருங்கருணையான்
மகரவடிவாலுற மயக்கி யெழுமோங்கார
வடிவாயிருந்த பரம்நீ
வந்தெனதிரும் பிறவிதீரவொரு மொழிதந்த
வள்ளலென் துணைநம்பினேன்
சிகரகோபுரமாக நீடாரை யம்பதிச்
செங்குந்தர்வீதி மேவுஞ்
சிந்தித மனோரதங் தந்தமா தங்கமுக
திருநீலகண்ட பரமே.

9) காருலவு மேருவென வெணியனுவினுஞ் சிறிய
கருமத் துழைத்து வினையாற்
கருவிற் புகுந்தெழுங் தாகாமியந் தேடிக்
கால சக்கரத் திறந்து
பேருலவு சீவரென வந்தோ வனாதியாய்ப்
பெற்ற பயனினி வேண்டிலேன்
பெருமையுள ஞான வள்ளலா ரென்றுனது
பிரச மலரடி பிடித்தேன்
ஆருலவு செஞ்சடாடவி சிவனுமைக் கினிய
அருமருந் தன்ன மதலாய்
அருள்பரவ மலதிமிர மகலவரு பானுவே
அங்கையா மலக வனகா
சீருலவு மணிமாட நிரையாரை யம்பதிச்
செங்குந்தர்வீதி மேவுஞ்
சிந்தித மனோரதங் தந்தமா தங்கமுக
திருநீலகண்ட பரமே.

10) பாசிலைய வெஃகங் கரங்கொண்டு சூரடு
பசுங்கலா பத்தோகரப்
பாங்கரெழு சரவணப் பெருமாளை நவவீர
பார்த்தீப செங்குந்தரை
மாசிலரு மிளவலாக் கொண்டசுமுகா கரிய
வக்ரதுண்டா வகண்டா
மாகுசானென விகட விக்னராசா பால
மதிதூம கேதாதியா
பேசுலவு மந்த்ர வபிதான கணநாதவென்
பிழையெலா நீக்கியாளுனின்
பசுமையா லென்ன நானருமையாய் நம்பிப்
பிழைத்தே னழைத்துமதிதா
தேசுலவு மணிமாட நிரையாரை யம்பதிச்
செங்குந்தர்வீதி மேவுஞ்
சிந்தித மனோரதங் தந்தமா தங்கமுக
திருநீலகண்ட பரமே.

*ஸ்ரீ மஹா கணாதிபதியே நமக*

*திரு நீல கண்டவிநாயகர் பதிகம் முற்றிற்று*

## ஸ்ரீ மஹா கணாதிபதியே நமக
## திருநீலகண்ட விநாயகர் மாலை

1) கவளமத மாவுனது கைவரு முத்தேவர்
கண்டெனைக் கொண்டாட்டுகின்றார் காணுதிரென் றெளியேன்
தவளமதி முடிப்புடை நுந் தந்தையிடத் திந்தத்
தரணியெலாம் பெற்ற பெருந் தாயிடத்தும் புகல்வேன்
அவநளினச் சேக்கையனம் பெடையோடு மசைய
நளினிபுறும் பதுமவிலை குடை கவிப்ப வியந்து
குவளைவிளி நோக்காரை யம்பதியங் கோவில்
கொண்டருளுந் திருநீலகண்ட வீநாயகனே

2) தாதினெழு விடயவகை ஐம்புலன்கள்
தருவகையுட் கரணவகை யென்பதெலாங் கழற
நேதிசெயும் வகையுதித்த பிறவியிதிற்பெறுமா
நினைப்பேனோ வின்பமெனு நிலையமுறுவேனோ
சீதமதி மடியுலவு சரக்கொன்றை மானா
திகழ சலம்புரி சடையெம்பரம நிகராகும்
கோதிறிதி யோங்காரையம்பதியங் கோயிற்
கொண்டருளுந் திருநீலகண்ட வீநாயகனே.

3) கரவையிலா வகத்தமுது மங்கைமுன மன்பிற்
கவீமலராற் பிரசமலராற் றொடுத்துச் சூட்டுஞ்
சரவையிவை யன்றேனு நின்னடியைப் பாடுந்
தருமமுள் தாலடியேன் பாமலருங் கொண்ணீ,
பரவையர வந்தணிய நாற்றுநடுங்கழனி
பணியிலங்க ளொளிமருதப் பண்வாயர் செய்யுங்
குரவையொலி வயலாரையம்பதியங் கோயிற்
கொண்டருளுந் திருநீலகண்ட வீநாயகனே.

4) மணலைசல நிதித்திரையை குறைத்துமிகுஞ் ஜெனன
மறப்பகையை நின்னருளாம் வலியுடைய ஞானத்
தணலையகங் கைக்கொண்டு நான்வெற்றி யெய்துந்
தருக்கருள நின்றாளின் மலர்ச் சரணந் தந்தாள்
அணலையரன் தனைப்பாகம் பெற்றவனை பாதத்
தரதநத்தாஞ் செங்குந்த வீரமரபிற ரண்ணிற்
குணலைசெயும் பேராரையம்பதியங் கோயிற்
கொண்டருளுந் திருநீலகண்ட வீநாயகனே.

5) தலநிலவு மீடனையின் திரயமடைவேனோ
தந்தாபத் திரயவகை தன்னினறிவேனோ
மலமுலவு திரயத்தனாதி முதலின்னம்
வாடுவனோ யினியேனு மலரடிப்பேறருளாய்
நிலமுலவுஞ் சூரடுவான் வீரவுருவாகி
நெட்டிலைவேலுட சுப்ரமணிய ரெனப்பிறந்த
குலமுலவும் பேராரையம்பதியங் கோயிற்
கொண்டருளுந் திருநீலகண்ட வீநாயகனே.

6) இளமதியாலுலகி லெதிருற்ற பொருளெல்லா
மண்ணியெனி லடங்காத புண்ணினழிகின்ற
உளமிதனாற் ஜனனமரணங்களெது மிடறை
உறுவதுநின் பெருங்கருணைக் கழகோவென்னிறையே
வளமுடையபொழிற் பூந்தேனூற்று வழியேறி
வாழைகமுகின் பெரியபாளையகத் துறங்கும்
குளநிரைவான் மிகுமாரையம்பதியங் கோயிற்
கொண்டருளுந் திருநீலகண்ட விநாயகனே.

7) கடையவனைப் புரங்காக்கத் தொண்டரிடத்துள்ள
கருணையுரு வாயரிய பாசாங்குசப்போ
படையுடனே கடுங்கவன்வாகி னெளுந்தருளப்
பார்ப்பேனோ வென்னிகருகண் பாவைநிகரிறையே
மடையுடைத்துச் செழுங்கழனி நீரோடையுறங்கும்
வாளினக் குருகயரா வணமரைத்தமாலக்
குடைநிகழ்த்தும் பேராரையம்பதியங் கோயிற்
கொண்டருளுந் திருநீலகண்ட விநாயகனே.

8) பருககிலம் விண்ணுலகப் போகத்தினெஞ்சம்
பற்றாம நித்தியமா யுன்பாதமலரைத்
தருகவென மன்றாடித் தேமலாகளெண்ணிச்
சாற்றுவனோ வொன்றாய தந்தமுளதுரையே
தருகதியிற் போஞ்சினையின் பூங்கனியைத்தெய்வத்
தத்தையின முணவிரும்பி மொய்த்திருக்கக்கண்டக்
குருகயரும் பேராரையம்பதியங் கோயிற்
கொண்டருளுங் திருநீலகண்ட விநாயகனே.

9) நன்றறியாக் கயவரினஞ் சேராதமதிதா
ஞானநிலமுலவ வுலகாசையெனுந் தேயம்
வென்றகண்ட மாமுணர்வையுற்று சமநோக்க
வேதாந்தவன் துணையிருப்பாரினஞ்சேரு நிதிதா
சென்றமுடி மேகடலெங்களெலா முலவ
செஞ்சேவலங் கொடியுட்தெய்வமணி பீடக்
குன்றமுறும் பேராரையம்பதியங் கோயிற்
கொண்டருளுந் திருநீலகண்ட விநாயகனே.

10) வசனமன மணுகாத பூரணத்தி னெஞ்சம்
வைத்தமருமான்ற மதியெத்தகமை யுரையாய்
கசமுகத் தெம்பெருமானே சிறுமானை யேந்துங்
கண்ணுதலுக்கினிதான புண்ணியமா மணியே
அசலமென வளர்ந்தனந்தங் கொடுமுடிகள் விளங்கு
மணிமாட மீதிருக்குமரிவையர் களாயல்
குசலமொடும் பாடாரையம்பதியங் கோயிற்
கொண்டருளுங் திருநீலகண்ட விநாயகனே.

11) சமதமமாதிய முயன்று தூங்காமற் றூங்கி
சந்ததமு மந்தகரணச்சேட்டை யின்றி
நமகணநாயக சர்வவிக்கின விநாயகா
ஞானகரா வென்னநானடைவரு ளிறையே
அமுதரவி பெறக்கிருது பலமுடித்த நூலோ
ஆயங்கள் குடைந்தாடுதோ பத்திலணிசெங்
குமுதமலா் தடையாரையம்பதியங் கோயிற்
கொண்டருளுந் திருநீலகண்ட விநாயகனே.

12) நீங்குபவத் தவரிநல நோலாமல் விரிந்த
நெஞ்சமுளே னோங்கியெறி யலைகடலிற் றிகைக்குஞ்
சோங்கனையேன் றுணையென நின்றாட்டிடரைக் கண்டேன்
சுகமருளக் கடனுனக் கென்றும்பி முகத்திறையே
மாங்குயில்கள் சுதிகூட்ட வண்டினங்கள் பாட
மயிலினங்கள் நடனமுற்று வனத்துநலார் முலைநேர்
கோங்குமுகை தருமாரையம்பதியங் வேகயிற்
கொண்டருளுந் திருநீலகண்ட விநாயகனே.

13) சிங்காரப் பணியணிக்கே யறுசுவைக்கே மாதர்
சிற்றின்பக் கொள்ளைக்கே தேங்கினரைக் காலன்
சங்காரஞ் செயவரினென் செயவிருந்தா ரந்தோ
சாமிகய முகப்பரநீ மாமதி தந்தெனையாள்
பொங்காரம் பாதிரிமா வன்னிவிளா வேங்கை
புன்னைபலா தெங்கிலவஞ் சண்பகமந் தாரங்
கொங்காரஞ் சூழாரையம்பதியங் கோயிற்
கொண்டருளுந் திருநீலகண்ட விநாயகனே.

14) பொடியணிந்து ருத்திரமாமணி வீதியினங்கம்
பூண்டுமுதன் மனுவோதி யாண்டகை நீயென்ன
கடிமலர்கொணடு உன்னடியருச்சிக்குஞ் செல்வங்
காமுற்றேனென் நெஞ்சங் கண்டிலையோ விறையே
துடியிடையுண்டிலை யென்னமுலைச்சுமையா னடிக்குந்
தோகையர்பின்றே வுலகத் ஜோதிமங்க டொடருங்
கொடிமாட நிரையாரையம்பதியங் கோயிற்
கொண்டருளுந் திருநீலகண்ட விநாயகனே.

15) இந்தருக்க னப்பனல் காலாகாய ஞால
மியமான வடிவாகி யெங்குநிரை பரநீ
அந்திவணத் தரணியெம் மாறுமுகக் குருநீ
ஆதிவரா கத்தரீநீ யானைமுகத் திறையே
நந்துவயற் கரையேறி பொழின் மருங்கிலூர
நாவினிக்கத் தேன்சொரியும் பூமணக்குந் தாரிற்
கொந்தழகு நிரையாரையம்பதியங் கோயிற்
கொண்டருளுந் திருநீலகண்ட விநாயகனே.

16) கம்பமிலாக் கடல்போலப் புந்தியலை யாறி
காணாத வின்பநலங் கண்டிருக்கப் போதல்
எம்பரமோ வினையொப்போ மலங்கள் பரிபாக
மெய்தியதோ நின்கருணைச் சீரோவென் னிறையே
கும்பமுனி வாழசலந் தோன்றிமக ரந்தக்
கோலமுடன் வந்தவிளங் காலணவு மென்பூங்
கொம்பரசை பொழிலாரையம்பதியங் கோயிற்
கொண்டருளுந் திருநீலகண்ட விநாயகனே.

17) தொழுந்தெய்வ மேதெனநூலாய்ந்த வழித்தேறித்
தும்பிமுகத் திறையென்றே நம்பிவிடயத்தில்
அழுந்தாமலுற்ற சதோதயமாகி நின்றாள்
அரவிந்தப் பேரின்பத்தாசை மிகவீழைந்தேன்
இழங்காரணக்கிழவ ரம்மனுவைப் போற்றி
சந்ததமு நெய்சொரியாரி செய்யோமத்தூமக்
கொழுந்தோடி நீடாரையம்பதியங் கோயிற்
கொண்டருளுந் திருநீலகண்ட விநாயகனே.

18) கற்றுணர்ந்த வழிநிற்கை யித்தனுவிலேழை
காண்பேனோ காணேனோ நாலவலங்கண்டேன்
பெற்றமுகந் தேறுசிவ பெருமானாருதவும்
பிள்ளையாரே சொல்லு முள்ளவகையெனக்கே
நற்றவமே நற்குணமே நற்குலமேபூண்டு
நம்பனடி யாரடிக்கே யன்புடைசெங்குந்தக்
கொற்றவாக ணிறையம்பதியங் கோயிற்
கொண்டருளுந் திருநீலகண்ட விநாயகனே.

19) பொன்றுடலுக் கிரைதேடிப் பூமியெலாமோடி
பொய்யுரைத்துத் தெய்வமெனு மெய்யறியேனந்தோ
கன்றைவிள வாலெறிந்ததோனருமை மருமானே
கயமுகனே சயமுகத்திற் றந்தமிறுத்தோனே
மன்றனடித் தவர்வாழுந் திருக்கோணவிந்த
மாணிக்கக் கங்கைமுதற் காணின்பமண்ணிற்
கொன்றையலர் தருமாரையம்பதியங் கோயிற்
கொண்டருளுந் திருநீலகண்ட விநாயகனே.

20) மாகனகம் பூமடவா ராசையெனச் சொல்லும்
வாசனையா லெத்தனையோ மரணஜனனங்கள்
ஆகநக வந்ததினி யாற்றுகிலே னெங்கள்
ஆனைமுகனே பரனேஞான நிலந்தந்தான்
மேகநகுந் திருமேனி யாளனுரம் போலும்
விம்மிதங் கொண்டகலாத மெய்யுடையளாகி
கோகனகை வாழாரையம்பதியங் கோயிற்
கொண்டருளுந் திருநீலகண்ட விநாயகனே.

21) தேசிகர்தம் திருநாவும் பதிவேத முடிவுஞ்
செப்புமொழி கேட்டமன தொப்பியவன் முகந்து
பேசுகதை யாயொழித்து நடந்திலதாற் சென்ற
பிறவியெலா மிவ்வணமே யென்னமிகத் தெளிந்தேன்
பாசிலைவேலுப சுப்ரமணிய ரிளங் கோக்கள்
பாரப்பனாகி வந்தும் பைந்தமிழா லாய
கோசிகமே பயிலாரையம்பதியங் கோயிற்
கொண்டருளுந் திருநீலகண்ட விநாயகனே.

22) வீட்டறமே நன்காற்ற பொருட்செல்வம் வேண்டும்
வேண்டுமருந் துறவறத்திற் கான்றமன வலியே
தேட்டமுற நிற்குமருட் செல்வமுறின் மேலாஞ்
சேதனமே மற்றிரண்டுந் தேடேனெந் துரையே
நாட்டமொரு மூன்று பனிரண்டுடையார் முன்ன
நான்றவொரு கையுடையார் செய்யமலர் வீழிபார்
கோட்டமுறும் பேராரையம்பதியங் கோயிற்
கொண்டருளுந் திருநீலகண்ட விநாயகனே.

23) மாமனுவை யோதிமக ரச்சுழியிலாறி
மனநிலைக்கச் சொற்றதுநற் றினமிதுவெம்பரனே
பூமணமே கும்பமதத் தும்பிமுகக்குருவே
பூரணமே யாரணமுந் தேடரியபொருளே
காமருவும் பொன்னுலகக் காட்சியினுஞ்சாலக்
கணகவருஞ் சோலையிளங் காலசையவாடுங்
கோமளமே நிரையாரையம்பதியங் கோயிற்
கொண்டருளுந் திருநீலகண்ட விநாயகனே.

24) காலயிலும் வீடதரமே பருவத்திற் கனிந்த
கனிபயிலும் பைங்கிளியே யான்மடியிற் கறந்த
பாலயிலும் பூசையின்னமே யென்ன விரதம்
பரமென்ன வாற்றுகிலேன் வரமொன்று தருவாய்
ஏலமலர் வாவியெலாஞ் சோலை யெலாந்தும்பி
என்றுமன வரையென்ன மன்றமென விளங்குங்
கோலமிகும் பேராரையம்பதியங் கோயிற்
கொண்டருளுந் திருநீலகண்ட விநாயகனே.

25) சேட்படுமுன் திருக்கருணைக் கேக்கமுளராகி
தேவர்களுமுவர்களும் யாவர்களும் விரைந்தே
ஆட்படுவார் பெற்றதவ நற்றவருமென்றரைவார்
ஆனந்த முருவரியாலாளாக வினியென்
நாட்படுமே நெய்தனில மாக்கலெளாங்கூடி
நதிபதிதன் பதிவேண்டி விதியின் விழவாற்று
கோட்பறைகண் மிகுமாரையம்பதியங் கோயிற்
கொண்டருளுந் திருநீலகண்ட விநாயகனே.

26) பாவைநிக ராசனத்தி லங்கமுறக் கரணம்
பாபநிவாதத் தியமாயநிலை யருளாய்
பூவைநிகர் வண்ணவரி மருமானே மத்த
போதகமா முகத்தோனே யடியரகத்தோனே
சேவைசெயச் சதிபதியா யன்பரெலா மேகுங்
தெருப்பைப் பூங்காவனத்துந் தோரணத்துமுத்தக்
கோவையணி நிரையாரையம்பதியங் கோயிற்
கொண்டருளுந் திருநீலகண்ட விநாயகனே.

27) பாரகத்திற் கானலெனத் தோன்று பொருளெல்லாம்
பற்றற வீட்டுத்தமரின் முத்தவடிவாய்
தாரகத்திற் சிந்தனையைச் செய்ததுவாய் நின்று
சாதிக்க வின்றெனக்கு நீதிக்கென்றடைந்தேன்
நீரகத்த வயலுழத்தி மாரி நித்தவாய்
நேயவிளி யுரையரிய தாஞ்சினையி லெண்ணிற்
கோரகைகள் மிகுமாரையம்பதியங் கோயிற்
கொண்டருளுந் திருநீலகண்ட விநாயகனே.

28) ஆடையனம் பொன்பெறுவான் தேவுலகக் கோவே
அரிசந் தனத்தருவே யென்றரிய தமிழின்
பாடையிலு மாரியத்தின் பாடையிலும் பாடி
பயனற்ற மாக்களினங் கூடனெந் துரையே
ஓடையர விந்தமலர் குவளைச் செங்குமுத
ஒண்முகங்கண் வாய் காட்ட விண்மணிக்கேழெரிக்குங்
கோடையிலும் வளமாரையம்பதியங் கோயிற்
கொண்டருளுந் திருநீலகண்ட விநாயகனே.

29) சேவிளக்கமான சதாசிவன் தனதுசெல்வத்
திருவிளக்கே யடியரகத் திருக்கலத்தோன்று
மாவிளக்கேயென் இருகண் மணிவிளக்கேயேழை
மதிவிளக்க மாயிருக்க வேண்டியுனைப் பணிந்தேன்
பூவிளக்கம் வசைமலர்த்தடந் தாங்கநாளும்
பொறிவிளக்கம் கொண்டநகர் புறத்தகத்தும் புனித
கூவிளக்கா நிறையாரையம்பதியங் கோயிற்
கொண்டருளுந் திருநீலகண்ட விநாயகனே

30) பழித்துலக திச்சையெலாங் கொச்சையெனத் தெளிந்து
பற்றறவிட் டுள்ளதுன் பாதநிதியென்றே
விழித்துதனிப் பசித்திருந்து விம்மித நெஞ்சகலா
விரதியர்கள் பெற்றவொரு வரமெனக்கருளாய்
செழித்ததிரு மலரல்லி கருங்குவளை நெய்தல்
செங்காவியலரா கழியலைக்கையான் முத்தம்
கொழித்தமதின் முற்றாரையம்பதியங் கோயிற்
கொண்டருளுந் திருநீலகண்ட விநாயகனே.

31) பணங்கமழும் பேரரவந் தாங்கு நிலத்தெண்ணிற்
பவத்துன்பந் துன்பமெனத் தேறெனக்கு முத்தி
மணங்கமழும் பாதமலர் கதியருளு மிறைநீ
வாழிநிதம் வாழிநிதம் வாழிநிதம் வாழி
கணங்கமழும் தொண்டரக சத்தமொடுஞ் சிரமேற்
கரங்குவித்து வலம்புரியுங் காட்சிவிழாநாளின்
குணங்கமழும் பேராரையம்பதியங் கோயிற்
கொண்டருளுந் திருநீலகண்ட விநாயகனே.

## திருநீலகண்ட விநாயகர்மாலை முற்றிற்று

மேற்படி பாடல்கள் அனைத்தும் இந்தியா தர்மாபுரி ஆதின குரு முதல்வர் சதோதய முனிவரால் 1907ம் ஆண்டு பாடப்பட்டது.

## பிரணவட்டகத்தின் கட்டளைக் கலித்துறை

திருநீலகண்ட வளவாணி நெஞ்சந் சிவமுறவந்து
திருநீலகண்ட வெளிமண் நலந்தரு தீவுமுறை
திருநீலகண்ட உறையாரையம்பதி தேர்ந்துலகீர்
திருநீலகண்ட விநாயகனே யென்று சிந்தியினே.

## வாழி

### கட்டளைக் கலிப்பா

**ஆதியாரண மாதவர் வேதியர் .. ஆனினந் தழன் மாமகம் வாழியே**
**சோதிமாமலை யானவனம்பிகை .. தும்பி மாமுகன் நம்பியும் வாழியே**
**சீதநீர்தரு மேகநகும்பயிர் .. தேய மாணெறி மன்னவர் வாழியே**
**நீதிசைவ நெறியடியாரிள .. நிதமும் ஆரையம்பதிமிக வாழியே**

ஸ்ரீ மஹா கணபதியே நமஹ.

# திருநீலகண்டவிநாயகர் பொன்னூஞ்சல்

## காப்பு

நீருலவுஞ் சடைபரம தூயபாத
நெஞ்சில் மறவாத்துதி செய்நேயரான
பேருலவுஞ் செங்குந்தர் வீதிமேவும்
பெருமைபெறு விநாயகர் மேலூசல்பாட
காருலவு மணிமதில்சூழ கைலைவாசன்
கபாலீசரருள் கயமா முகத்துநாதன்
சீருலவக் கூத்தாடும் விநாயகன்றாள்
சிந்தைதனில் குடியிருத்திச் செப்புவோமே.

## நூல்

1) பொன்னுலவு வாசவன்மால் பிரமன் விண்ணோர்
பேரசுரர் வாதை வெள்ளிப் பொருப்பிலீசன்
தன்னுடனே யுரைக்க நுதல் விழியில் வீசுந்
தழற் பொறியி லறுமுகவன் றனைவா வென்று
பன்னுமசு ரேசர் குழா னாசமாகப்
படைசிதறத் தேவர்களும் பயங்கள் தீர
மின்னுதனி வேல்கொடுபோய் வெல்வாயென்ன
வென்ற குகன் முன்னவரே யாடீரூசல்

2) வச்ரமணியாற் கடைந்த கால்கள் நாட்டி
வைடூரியத்திலுயர் விட்டம் போட்டு
பச்சைநிற மரகதத்தால் கொடுங்கை சேர்த்து
படுநீல மணிப்பலகைத் தொட்டில்பூட்டி
நிச்சயச்செம் பொன்னிவடக் கயிறு தூக்கி
நிலையாகச் சோடித்த ஊசல்மீதே
கச்சிமா வடிக்கம்பர் பங்கில் வாழுங்
கவுரியுமை புத்திரரே யாடீரூசல்.

3) சந்திரகாந்தியி னொளிசேர் பட்டினாலும்
தபன னொலிப் பட்டாலு மழகுசேர
அந்தமிகு சவரிகள் சல்லிகளுந் தூக்கி
அலங்காரக் கண்ணாடி ஒளிகள் வீச
சுந்தரமாகிய செம்பொற் குடங்கள் மின்ன
தூய்மணி மாணிக்க விளக்கெங்கும் மின்ன
இந்தடைவா யலங்கரித்த ஊசல்மீதே
இயல்முருகன் முன்னவரே யாடீரூசல்.

4) சந்தனங் குங்குமம் புனுகுகளபம் பன்னீர்
சவ்வாது கூட்டிவட்டில் தன்னில் மொண்டு
கந்தமிகு தோகையர்கள் நிறைந்து பூசக்
கனகசுகந்த கார்குழாம் வசந்தமாட
இந்துநுதல் மடவார்கள் பூப்பந்தால் விட்டு
எறிந்து கையால் மருக்கொழுந்து மலரும்வாரி
சிந்துமழை போற்பொழியக் களித்த நீல
சிறிகண்ட விநாயகரே யாடீரூசல்.

5) மாதவரும் மறையோரும் ஆசிகூற
வண்டமிழோர் செந்தமிழான் மகிழ்ந்து வாழ்த்த
ஓதுபாட்டுவர் ஒருபாற் புகழ்ந்து போற்ற
உகந்து கட்டியக்காரார் எச்சரிக்க
ஆதிபஞ்ச வாத்தியத்தின் தொனிகள் எங்கும்
அதிர்ந்து பெருங்கடலொலிபோல் முழங்கி யார்ப்ப
சீதமதிச் சடைப்பரமன் சிறுவரான
சித்தி தரும் விநாயகரே யாடீருசல்.

6) அஞ்செழுத்து மந்திரத்தை யுன்குதாரை
அரிய முத்தி தரும் வெண்ணீ றணியா தாரை
தஞ்ச மெனச் சிவனடியைப் பணி செய்யாரை
தருக்குடனே சிவாலயத்தை வலம்வா ராரை
வஞ்சனை பொய் யுரை நெஞ்சில் மறவாதாரை
வளர் சடையோன் தாள் மனதில் வையாதாரை
வெஞ்சமறக் சிரம் துணித்து மகிழ்ந்து வாழும்
வீரர் தொழும் விநாயகரே யாடீருசல்.

7) அரிவையர்கள் பரதநட னங்க ளாட
அணிகொள் புவி யோர்க ளெலாம் மகிழ்ந்து பார்க்க
பரிவுடனே கவரியிரு பாலும் வீச
பகைவ ரெலாம் வணங்கி நலம் பாரித் தார்ப்ப
வரிசை மலர் செங்கடப்ப மாலை பூண்ட
வையமெலாம் மிக மணக்கும் வளமை யுள்ள
குரு கருணை தழைத்தவரே ஆரை யாரிந்
குடி கொண்ட விநாயகரே யாடீருசல்.
சீதமதிச் சடைப்பரமன் சிறுவரான
சித்தி தரும் விநாயகரே யாடீருசல்.

## வாழி

திருமாலும் திருவும்போல் வாழி வாழி
சித்தசனும் ரதியும்போல் வாழி வாழி
புருகுதனும் சசியும்போல் வாழி வாழி
பூவுலகில் அனைவோரும் வாழி வாழி
மருவுறுநற் செங்கடப்ப மாலைபூண்ட
மன்னரெனும் செங்குந்தர் வாழி வாழி
திருமறையும் செங்கோலும் வாழி வாழி
திருநீல கண்டனருள் வாழி வாழி

முற்றிற்று

**இயற்றியவர்**

***அமரர் டாக்டர் .சிவ.சோமசுந்தரம் (ஈழத்துக் காளமேகம்)***

## செங்குந்தர் பெருமை கூறும் இலக்கிய செய்யுள்கள்

சாம்பவி சிலம்பிற் பூத்த சாயலாம் மணியின் மாதர்
சாம்பவன் கருணையாலே நந்த செங்குந்த மாக்கள்
தேம் பொலி வீதி தன்னிற் றிருவல கியற்று வோர்கள்
வேம்பலர் மன்னன் போல மேதினி பிறந்து வாழ்வார்.

உலகத்தினிற் புட்ப ராக மொளியினிற் கதிராமைந்து
புலந்தினிற் கருங்கண் வாவிப் பூவினிற் கமலஞ் சொல்லும்
குலத்தினிற் செய்ய குந்தங் குன்றினின் மேருக் குன்றம்
தலத்தினில் மதுரை மேலாந்த் தரமெனுந் தகைதத்தம்மா.

கோக்களை மின்னாரைத் தவத்தரைக் குலத்தில்வேத
மாக்களை சிசுவைக் கொன்றான். செய்நன்றி மறந்தானாசான்
ஆக்கம தழித்தான் பாவ மனைந்துஞ் செங்குந்தர் வீதி
தேக்கிடப் பிச்சை வாங்கி யுண்டிடத் தீரு மன்றே.

### ஸ்ரீ கந்தபுராணம்

முந்தவே கயிலை வெற்பின் முயலு மெய்க்காவலாளர் கந்தர்
கைக் கோளராகிக் கார் நிறத் தசுரைச் செற்றுச் சுந்தர
முசுகுந்தற்குச் சுற்றமுமமைச்சுமான குந்தர்களுமறையும்
வீதித் தன்மையைக் கூறுவோமாகில்.

### தேவர்கள் சிறை நீக்கிய சிறப்பு

குறையினைக் கடவுளா கூறக் கேட்டவர்
துறையினை நிறுவியே சூர்த டிந்துனான்
மறையினை வழுவற வளர்த்துத் தேவர்தஞ்
சிறையினை மீட்டது திருச் செங்குந்தமே.

### ஈட்டிப் படைச் சிறப்பு

தாருவுஞ் சுரபியுந் தவள வேழமும்
தாருடைப் புரவியுஞ் சசியுங் கைம்மிசைப்
போருடை வச்சிர வாளும் பொன்னகர்ச்
சீருறும் படியவுன் செறிசெங்குந்தமே.

### தேவர் பகையொழித்த சிறப்பு

முன்பனக யாவையு முடித்துக் கூரெயிற்
றன்பகை யாவையுந் தடிந்து சந்ததம்
பின்பகை யில்லாதாப் பெற்றி செய்ததாம்
ஒன்பதி னோர்கரத் தொளிருங் குந்தமே.

## அறுபடை வீட்டின் குந்தச் சிறப்பு

பருப்பத மேரகம் பரங்குன் றம்பழம்
பொருப்பத மாவினன் குடிசெந் றிற்பொது
விருப்பெனக் குன்றுநோ றாட வாமெனும்
திருப்தி தமிலமர் செய்ய குந்தமே.

## முதலியர் பட்டச் சிறப்பு

இந்திர னன்மா றேவர் யாவர்க்கு முதன்மையாக
வந்தபான் மையினாற் சூல மழுப்படையத்த னார்க்கு
முந்திய நாமந் தானு முதலிய ராகை யாற் செங்
குந்தர்சந் ததிக்கு மப்பேர் முதலிய ரென்று கூறும்.

## புலிக்கொடிச் சிறப்பு

### கலிவிருத்தம்

கலிக்குறும் படுவள வனுக்குங் காதுசூர்
வலிக்குறும் படுதனி வாகைக் குந்தர்க்கும்
பலிக்குனநற் புகழெலாம் பாதி யாதலாற்
புலிக் கொடி மரபிரண் டினுக்கும் போந்தலால்

"சோழன் மரபினுக்குச் சொல்லத் தகுந்தகுமே
வாழும் புலிக்கொடியை வையகத்தில் - சூழறவால்
குந்தன் மாபினுக்குங் கூறத் தகுந்தகுமே
அந்தக் கொடியினையே யாம்"

## மெய்த்தலே கொடுத்தச் சிறப்பு

### கலிவிருத்தம்

முத்தமி ழிராசரா சேந்திரன் முன்னமே
சுத்தவீ ரத்திறந் துலங்கு தற்பொரு
பொய்த்தலை கொடுத்தலிற் புகழ்பெ றறதென
மெய்தலை பொடுத்தன வீரக் குந்தமே.

## நவவீரர்

அரனவுன் மாள வுகுத்த வனற் பொறிக் கஞ்சு முலம
வரமுறு தாட்சிலம் பின்மணி யொன்பதுண் மன்னியெழும்
உருவொளிச் சத்திகன் மாட்டுதித் தீட்டி யுவளருளச்
செருமுகங் காவை வீரர் செங்குந்த சிவாக்கியரே.

## மெய்கண்ட சிவாச்சாரியார்

முந்தடன் மொய்ம்ப னருந்தவ மாற்று முசுழுகளை
நிந்தைசெ யுழ்முறை நிறப வுலகி னிரிச்சுரர் கோள்
உந்த மகதி முனியர னாரிடத் தோதவுவை
சிந்தச் சுவேதத் செங்குந்த சிலாக்கியரே

## நேரிசை வெண்பா

ஒற்றிச் செங்குந்தனென்றோ ரோங்கன்மே னாற்பரவும்
வெற்றிச் செங்குந்த விநாயகனிற்கு - முற்றித்
தனிந்துயவு தீர்த்தமிழ்ச் சொ றண்மலரான் மாலை
யணிந்துயவன் னானாறாளரண்.

## ஔவை பாடியது

மூவுலகை யுங்கடந்து மூதண்டப் பித்திகையை
மேவியதற் கப்பாலு மின்னியதே - பூவிலென்றும்
மங்காத நூல் வேண்டி மாண்கூத்தற் கிட்டசிரச்
சிங்கா தனத்தலைவர் சீர்.

## கம்பர் பாடியது

கந்தமிழியென் றான்றோர்கள் கண்டு நிதம்பரவும்
எந்தை முருகனினையவராம் - சந்ததியில்
வந்து மகிழ் செங்குந்தர் வாய்மைதனை யென் சொல்கேன்
செந்திருமாற் செவல்வர்களே தேர்ந்து.

## புகழேந்தி பாடியது

விண்முகத்தோர் பூமாரி வீசியது மோர்வியப்போ
மண்முகத்தே வெங்குந்தர் மாய்சிரங்கள் - என்முகத்தும்
சிந்தியதத் தம்முடலைச் சேர்ந்தொட்டிக் கொண்டொலித்து
வந்தவித மெண்ணவருங் கால்.

## வம்சாவளிச் சிறப்பு

பாதலு புரத்திற் றேவி சாயைகன் டமலன் கொண்ட
கதவாற் கருப்ப மாகுங் கதிர்நவ மணிமா தர்க்கன்
மேதகு வீரத் தோடு மென்மீசை யோடும் வந்த
மாதவ வீர வாகுத் தலைவரித் தலைவர் மாதோ.

## செங்குந்தர்குல வரலாற்றுத் தொன்மையும் திருநீலகண்ட விநாயகர் ஆலயமும்

உ

திருச்சிற்றம்பலம்

சேவிளக் கமான சதாசிவன் தனது செல்வத்
திரு விளக்கே யடியரகத் திருக் கலத் தோன்று
மா விளக்கே யென்னிருகண் மணி விளக்கே யேழை
மதிவிளக்க மாயிருக்க வேண்டியுனைப் பணிந்தேன்
பூவிளக்கம் வசை மலர்த் தடந் தாங்க நாளும்
பொறி விளக்கம் கொண்ட நகர்ப்புறத் தகத்தும் புனித
கூவிளக்கா நிறையாரையம் பதியங் கோயில்
கொண்டருளுந் திரு நீல கண்ட விநாயகனே.

### திரு நீல கண்ட விநாயகர் மாலை

- சதோதய முனிவர் -

ஆரையம்பதி செங்குந்தர் வீதி ஸ்ரீ திரு நீல கண்ட
விநாயகர் ஆலய மகா கும்பாபிஷேக ஞாபகார்த்த மலருக்கு
சிறு குறிப்புகளை எழுத அருள் பாலித்த எம் குல தெய்வ
மாம் விநாயகப் பெருமானின் பாத கமலங்களுக்கு
பல கோடி வணக்கங்களைக் காணிக்கையாக்கி
சமர்ப்பிக்கின்றேன்.

தமிழகத்தின் பட்டினப்பாக்கத்தின் அமைப்பைப் பின்பற்றி சகல குல மக்களையும் தன்னகத்தே கொண்டதாய் விளங்குவது ஆரையம்பதித் தமிழ்க் கிராமம். மட்டக்களப்பு நகரின் தென்பால் நான்கு மைல் தொலைவில் வடக்கே காத்தான்குடியும் தெற்கே கோயிற்குளமும் மேற்கே மட்டக்களப்பு வாவியும் கிழக்கே வங்காளவிரி குடாக் கடலும் எல்லைகளாக அமைந்துள்ளன.

இக்கிராமத்தின் முகப்பில் காத்தான்குடியின் தெற்குக் கரையோரம் கிராமத்தின் அணிகலன்களாக விளங்குவன ஸ்ரீ திருநீலகண்ட விநாயகராலயமும் நொத்தாரிஸ் முத்ததம்பி வித்தியாலயமுமாகும். செங்குந்தர் குலம் விளங்க அருள் பாலிக்கும் ஸ்ரீ திருநீலகண்ட விநாயகராலயம், பல கல்விமான்களை உருவாக்கிய நொத்தாரிஸ் முத்ததம்பி வித்தியாலயம் ஆகிய இரண்டும் செங்குந்தர் குலப் பெருமையை விளக்கும் சாதனங்களாக மிளிருகின்றன.

குலம், சாதி, முதலிய பிரிவுகளில் பற்றுக் கொண்டோர் தம் குலத்திற்கு ஏதோ ஒரு தெய்வத்தைப் பற்றுக் கோடாகக் கொண்டு அதன்வழி தாம் தோன்றினவராகக் கூறிப் புகழ்ந்து கொள்ளும் கொள்கையை மேற்கொண்டு விட்டனர். சிலர் சூரியன் வழித்தோன்றினோம் என்பர். சிலர் சந்திரன் வழித் தோன்றினோம் என்பர். அக்கினி வழித் தோன்றினோம் என்பர்.

செங்குந்த மரபினர் வீரவாகுதேவர் முதலிய நவவீரர் வழித் தோன்றியவர். குந்தம் என்பது வீரப்படை. செங்குந்தர் என்பவர் குந்தம் என்னும் வீரப்படைக்கு உரியார் என்பது பொருள். அன்றியும் இம் மரபினருக்கு "கைக்கோளர்" என்னும் பெயர் ஏற்பட்டதற்கும் இதுவே காரணம் எனலாம். குந்தம் என்னும் ஈட்டியைக் கைக்கொண்டவர் எனப் பொருள்படும். அச் சொல் "கைக்கோலர்" என்று இருந்து பின்னர் "கைக்கோளர்" என மாறிற்று என்பர்.

செங்குந்தர் என்பவர்கள் வீரவாகுதேவர் முதலிய ஒன்பதின்மர் மரபினர் என்பது புராணப் பிரசித்தம்.

"தேவியுரிமை பாதச் சிலம்பில் வருவீரியர்கள் சிறு தேருருட்டி யருளே
சிவ கயிலாய பரம்பரையாரென்னும் செங்குந்தரே"

என்னும் பாவடிகள் மூலம் அறியமுடிகிறது. அத்துடன் செங்குந்தர் சிறந்த சீலமுடையார் என்பதும்

"தேவாரமுற்றும் படிப்பாரும் அங்கையிற் செங்குந்தரே
திருவாசகம் சொல் ஒருவாசகத்தரும் செங்குந்தரே"

என்னும் பாவடிகள் மூலம் நாம் அறிய முடிகிறது.

(ஆதாரம்:- செங்குந்தர் பிரபந்தத் திரட்டு)

இந்நூல் செங்குந்தர் மரபைச் சேர்ந்த ஒட்டகக் கூத்தர் பாடிய ஈட்டி எழுபது முதல் புகழேந்தியார், ஸ்ரீஞானப்பிகாச முனிவர், நாகை முத்துக் குமார தேசிகர், மயிலை நாகர், முதலான புலவர்கள் பாடிய பதினான்கு நூல்களையும் தொகுத்து ஸ்ரீகாஞ்சி நாகலிங்க முனிவர் அவர்கள் அட்சய வருடம் ஆவணிமாதம் 1926ம் ஆண்டு பதிப்பித்து ஸ்ரீமான் தி.க.ச சபாபதி முதலியார் அவர்களால் வெளியிடப்பட்ட செங்குந்தர் குல வரலாறு கூறுவதாகும். இக்குலத்தினர் பற்றிய பல சிறப்புக்களை இந்நூலிற் காணலாம்.

இத்தகைய சிறப்பு மிக்க கைக்கோளர் மரபினரான நாகப்பர், என்னும் பெரியார் கோயிற்குளப் பகுதி இடிபாடுகளுக்கிடையில் கண்டெடுக்கப்பட்ட சிறிய வேலாயுதத்தை ஆரைப்பற்றையில் ஒரு மர நிழலில் வைத்துப் பந்தலிட்டு அதன் கீழ் வைத்து வழிபடும் நாளில் முருகன் கனவில் தோன்றி தனக்கு ஒரு ஆலயம் அமைத்துத் தரும்படி கேட்டதாகவும், அவர் கற்களால் சிறு ஆலயமொன்றைக் கட்டி அதில் அந்த வேலாயுதத்தை ஸ்தாபித்து அபிஷேக பூசைகள் செய்வித்ததாகவும் கதைகள் வழங்குகின்றன.

இந்த நாகப்பர் பிள்ளையில்லாமல் இருந்து முருகன் கோயிலில் விநாயக விரதம் அனுட்டித்தாரென்றும், விநாயகர் கனவில் தோன்றி இவருக்குப் புத்திரபாக்கியம் கிடைக்குமென்றும், பிள்ளை பிறந்தவுடன் தனக்கு ஒரு தனிஆலயம்

அமைக்க வேண்டுமென்றும் கூறினார். அதன்படி சில வருடங்கள் சென்றபின் அவருக்கு ஒரு ஆண்குழந்தை பிறந்தது. அதனால் மனம்மகிழ்ந்த நாகப்பர் ஆரையம்பதியின் வடபகுதியில் வில்வமரத்தின்கீழ் வெள்ளைச்சலவைக் கற்களாலான ஓர்விநாயகர் உருவத்தை ஸ்தாபித்தார். கனவில் அவருக்குக் காட்சிகொடுத்த விநாயகர் நீலநிற மேனியுடையவராகவும் சிறப்பாகக் கண்டம் (கழுத்து) நீலநிறமுடையதாகவும் காணப்பட்ட படியால் அவர் ஸ்தாபித்த விநாயகருக்கும் திருநீலகண்டவிநாயகர் எனப்பெயர் வழங்கலாயிற்று. இவ்வாலயம் தான் தற்போது ஆரையம்பதி 2ம்குறிச்சி செங்குந்தர் வீதியில் அமைந்துள்ள ஆலயம். சதோதய முனிவரால் பாடல் பெற்ற திருத்தலம் ஸ்ரீ திருநீலகண்ட விநாயகராலயமாகும்.

பலநூறு வருடங்கள் சென்ற பின்னர் இவ்வாலயம் செங்குந்தர் குலத்தில் உதித்த கொடைவள்ளல் நொத்தாரிஸ் மூத்ததம்பிமுதலியார் அவர்களால் புனரமைக்கப்பட்டு பொலிவுடன் விளங்கியது. ஆரம்பத்தில் குறிப்பிட்டவாறு மூத்ததம்பி நொத்தாரிஸ் அவர்களால் ஆக்கப்பட்டு செங்குந்தரின் இரு நயனங்கள் போன்று ஒளிதரும் வித்தியாலயம் பல கல்விமான்களை இலக்கியமணி, தமிழ்மணி, வைத்திய கலாநிதிகள், சட்டத்தரணிகள், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், புகழ்பூத்த ஆசிரியர்கள், அதிபர்கள், ஆசிரியர்சிரோ மணிகள் போன்றோரை உருவாக்கிய பெருமைக்குரியது.

சமகாலத்தில் தமது சொந்த உறவினர்க்காக, இனத்திற்காக ஆக்கப்பட்ட இவ்விரு அழியாச் சொத்துக்களுள் வித்தியாலயமானது 1996ம் ஆண்டு அதன் நூற்றாண்டு விழாவினை கொண்டாடிய ஒரே ஒரு வித்தியாலயம் இதுவாகும். அது போன்று இவ்வாண்டு 2008 பெப்ரவரி மாதம் 11ம் நாள் நூற்றாண்டிற்குரிய கும்பாபிஷேகப் பெருவிழாவைக் காண்கின்றது. இவ்வாலயத்தின் சிறப்பைப் பற்றி அறிய விரும்பினால் இந்து சமய திணைக்களம் பிரதேச அபிவிருத்தி அமைச்சு மூலம் பங்குனித் திங்கள் 1983 ஆம் ஆண்டு வெளியிட்ட வித்துவான், பண்டிதர் வி.சீ. கந்தையா, பீ.ஓ.எல் அவர்கள் எழுதிய மட்டக்களப்புச் சைவக் கோயில்கள் பாகம் 1 எனும் நூலில் காணலாம்.

இவ்வளவு பழம் பெருமைமிக்க இவ்வாலயத்தில் எழுந்தருள் அருள்பாலிக்கவுள்ள ஸ்ரீ திருநீலகண்ட விநாயகரின் மகா கும்பாபிஷேகத்தைக் கண்டு களிக்கும் அடியார்கள் பெரும் பேறு பெற்றவர்கள்.

இவ்வடியார்களுள் அடியேனையும் ஒருவனாக்கி விழா நினைவு மலரில் அவர் சிறப்புப் பற்றிய சிறுகுறிப்பொன்றினை எழுதச் செய்து ஊக்கப்படுத்திய எனது குல தெய்வத்தின் பாதகமலங்களை மீண்டும் மீண்டும் பணிந்து நிறைவு செய்கிறேன்.

வான் முகில் வழாது பெய்க மலிவளம் சிறக்க
மன்னன் கோன் முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க, நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக அகிலமெல்லாம்

- திருச்சிற்றம்பலம் -

என்றும் விநாயகனடித்தொண்டன்
ஆசிரியர் சிரோன்மணி.
தம்பிப்பிள்ளை செல்வநாயகம்

## ஆலய வழிபாடும் ஆத்மீக வழிபாடும்

சனாதன தர்மத்தின் ஒரு கிளையாகிய இந்து தர்மத்தின் வழிபாட்டு இயலிலே இறைவனை உருவிலே கண்டு ஆலயத்துள் வைத்து வழிபாடு செய்வது பழமையான பண்பாட்டின் விழுப்பமாகும். "உள்ளம் பெருங் கோயில்" என்றும் "காயமே கோயிலாக" என்றும் "நினைப்பவர் மனமே கோயிலாகக் கொண்டவன்" என்றும் கூறிய திருமுறைகளின் பெருமொழிகள் நம் இதயத்தால் சிந்திக்கத்தக்கவை. (நம் சிந்தையில் தங்கியவை)

வேதநூல்கள் முதல் சமகால நூல்கள்வரை ஆலய வழிபாட்டைப் பல கோணத்தில் ஆராய்ந்து நீராய் தெளிவு படுத்தி உள்ளன. அந்நோக்கிலே நாம் இப்போது பார்க்கும் போது , விடயம் மிகக் கூர்மையானது. கட்டாயமானது.

ஆலயம் என்பது ஆத்மா லயப்படும் இடம். அமைதி இழந்த ஆத்துமா சாந்தியடையும் தனியிடமே சந்நிதானம். முதற்கண் ஆலய அமைப்பைக் காண்போம். காயமே கோயில் ஒரு மனிதனின் உடல் அமைப்பே ஆலயமானது.

| | | |
|---|---|---|
| தலை | - | மூலஸ்தானம் |
| கழுத்து | - | அர்த்த மண்டபம் |
| மார்பு | - | மகா மண்டபம் |
| வயிறு | - | நிருத்த மண்டபம் |
| ஆண்கோசம் | - | நந்தி முதலான வாகனங்கள் |
| பெண்குறி | - | பலிபீடம் |
| முதுகுத்தண்டு வடம் | - | கொடித்தம்பம் |
| மூலம் (மூலாதாரம்) | - | தம்ப விநாயகன் |
| தொடைப்பகுதி | - | தரிசன மண்டபம் |
| கனுங்கால் | - | கோபுர மண்டபம் |
| பாதம் | - | கோபுரம் |
| பாதவிரல்கள் | - | கோபுர கலசங்கள் |

இதில் நெற்றிச் சுழிமுனை (பொட்டுவைக்குமிடம்) பிரம்மஸ்தானம். அதிலே மூல விக்கிரகத்தை யந்திரங்களின் மேல் நிறுத்துவார்கள்.

| | | |
|---|---|---|
| இரண்டு கண்கள் | - | சர விளக்கு |
| சகரஸ்திரம் (மூளை முகிலம்) | - | கமல விளக்கு |

மகா மண்டபத்துக்குள் அமைந்தது சபை எனப்படும். அதாவது ஒரு மனிதன் நீட்டி நிமிர்ந்து (சவாகனம்) உறங்கும் போது உதாரணமாக மேற்கே தலை வைத்து கிழக்கே கால் இருந்தால் இருதயம் இடப்பக்கமாக அமைந்தால் அவ்விடம் வட பால் சார்ந்த இருதய ஸ்தானமாகும். இம் மண்டபத்திலே சிவன் ஆலயங்களில் அம்பாளின் உற்சவ மூர்த்தம் (எழுந்தருளி மூர்த்தம்) இருக்கும்.

அம்பாள் ஆலயத்தில் அம்மண்டபத்தில் சிவன் இருப்பார். இந்நிலை கணவனின் இருதயத்தில் மனைவியும் மனைவியின் இருதயத்தில் கணவனும் இருக்கும் உயர்ந்த நிலைத் தத்துவம். நிருத்த மண்டபம் கிரிகைகள் செய்யுமிடம். அம் மண்டபத்திலுள்ள சிறிய யாககுண்டம் இருக்கும். அதே போல் மனிதனின் வயிறு உதராக்கினி.

ஆண்கோசம்:- நந்தி முதலான வாகனங்கள். இவை பசு எனப்படும். உயிர் என்றும் அழைப்பர்.

பெண்யோனி :- பலிபீடமாகும். இது தலை குடும்ப வாழ்வில் மாயைக்குள் மனித மனம் பலியாக்கப்படுகின்றது. பலிபீட பூஜையில் நெய்வேத்தியம் வைத்த பின் அப்பலிக் கல்லை கழுவி நேரே இறைவனை நோக்கி கற்பூரதீபம் காட்டப்படும். மாயையிலிருந்து மாய்ந்த ஆத்மா அருட்புனலில் தோய்த்த பின் உயிர் பதியை நோக்குகின்றது. இதுவே நந்தி முதல் பலிபீடம் வரையிலான தத்துவம்.

கொடித்தம்பம்:- மனிதனின் முள்ளந்தண்டு வடத்தைக் குறிக்கும். கொடித் தம்பத்திலுள்ள முப்பத்து இரண்டு வளையங்கள், முள்ளந்தண்டிலுள்ள முப்பத்து இரண்டு இளையங்களே. முள்ளந்தண்டிலுள்ள மேற்பகுதி தலையிலுள்ள நரம்பு முடிச்சோடு தொடர்பு பெற்று மூளை முகிலத்தில் இணைந்திருக்கும். முள்ளந்தண்டிலுள்ள மூன்று அமிர்த நாடிகள் மேல்நோக்கிச் செல்லும் அவ்வேளை மூளை முகிலம் விழிப்படைய சடை முளையம் தொழிற்படும்.

இதுவே கொடித் தம்தத்தில் சுற்றப்படும் கொடிச் சீலை, தர்ப்பைக் கயிறு, பூச்சரம் ஆகியன. கொடி ஏற்றிய பின் இறைவன் வெளி உலா வருவார். பண்டைய காலங்களில் தமிழகம் எங்குமுள்ள ஆலயங்களில் கொடி மரம் கோபுரத்திற்கு வெளியே அமைக்கப்பெற்றிருந்தன. பின் ஆகம சிற்ப சாஸ்திர விதிக்கமைய தம்ப மண்டபத்தில் அமைக்கப்பெற்றுள்ளன.

ஆலயத்தை அமைக்கும் போது தகுதி வாய்ந்த சிற்பாசாரியின் மூலம் நிலத்தைத் தெரிவு செய்து கர்ப்பக்கிரகத்தை அமைக்குமிடத்து ஆழமான குழி வெட்டி நடுவேயுள்ள பிரம்மஸ்தானத்திலே செப்புக் குழாயை நிறுவி அதை மத்தியாக வைத்து ஆலயம் அமைக்கப்டும். கருவறை தூபி வரையுமாகக் கட்டப்பட்டு ஏனைய மண்டபங்களும் அமைக்கப் பெற்று மூலஸ்தானத்தின் நடுவிலே செப்புக் குழாயுள்ள இடத்தில் சிங்காசனம் அமைக்கப்படும். செப்புக் குழாயுள் அடியில் நீர் காணும் வரையிலான நீளமான செப்புக் கம்பியை உள்ளே இட்டு அதை சிங்காலனத்தில் மேலே தொடர்புடுத்தி இருப்பார்கள். இப்புதிய ஆலயத்துக்கான விக்கிரகத் தெரிவு ஒரு ஸ்தபதியின் மூலம் நடைபெறுவதற்கான கருங்கல் தெருவிலே,

ஆண்கல்:- வெங்கல ஓசை - ஆண் விக்கிரகங்கள்

பெண்கல்:- உடைந்த வெங்கல ஓசை - பெண் விக்கிரகங்கள்

அலிகல் :- உடைந்த தவிலோசை - பீடம், ஆசனக்கற்கள் முதலியன.

இவ்விக்கிரகங்களை கருங்கல்லிலே செய்வார்கள் காரணம் கல்லிலே நெருப்பு, நீர், ஆகாசம், மண், காற்று, ஆகிய ஐம்பூதங்கள் அடங்கியுள்ளன.

உதாரணம், (கல்லிலே நெருப்புத் தோன்றியது. கல்லின் உள்ளே தேரைகள் உயிர்வாழும்.) கல்லில் செய்த விக்கிரகங்களை உயிருள்ளதாக மாற்ற கருவறையிலுள்ள சிங்காசனத்திலே செப்புக் குழாய், செப்புக் கம்பி, செப்பு , தங்க, யந்திரங்கள், நவ ரத்தினக் கற்கள் மேல் ஸ்தாபிப்பார்கள்.

அஷ்ட பந்தனம் எனும் எட்டு வகையான மருந்துகளை இடித்து விக்கிரகத்திற்கும் பீடத்துக்குமாக பந்தனம் பண்ணுவார்கள். மூலஸ்தானத்தின் தூபியிலே நிறுத்தப்படும். தூபியிலுள்ள செப்புக்கலசம், கொடிமரத்திலுள்ள செப்புக்கலசங்கள், கோபுரத்திலுள்ள செப்புக்கலசங்கள் வானிலுள்ள மின்சக்தியை உள்வாங்கும்.

கலசத்தினுள் வைக்கப்டும் யந்திரம், கருங்காலிக்கட்டை, வரகரிசி, இவை இடிதாங்கியெனப் பெயர் பெறும். மின்னல்களால் ஏற்படும் இடிகளை தடுத்து ஆலயத்தைக் காப்பாற்றும் சக்தி இவைகளுக்கு உண்டு. தூபிகளிலும் கோபுரங்களிலும் செப்புக்கலசங்கள் வைக்கப்பட வேண்டும். (சமகாலத்தில் எவர்சில்வர் முலாம் பூசி அழகுக் கலசங்கள் வைக்கப்படுகின்றன.) செப்புக்களில் கலசம் செய்தவன் காரணமாக வான் மண்டலத்தில் இருக்கும் மின்சக்தியை ஈர்த்து பூமியினூடாக ஏற்கனவே கர்ப்பக்கிரகத்தின் நடுவே நிறுத்தப்பட்ட செப்புக் குழாயினூடாக நீரிலிருந்து வரும் மின் சக்தியோடு ஆலயத்தில் கூறப்படும் மந்திரங்களின் ஒலித்திறன், தீபங்களின் ஒளிக் கூறுகள் ஒன்றாகக் கலக்கின்றன. ஆக மேற்குறித்த நிகழ்வுகள் மெஞ்ஞான வழிபாடாக இருந்தாலும் அவை முழுமையான விஞ்ஞான வெளிப்பாடாகும். இத்தகைய சக்தி கொண்ட ஆலயத்துள் மனிதன் இறைவனை வணங்கிச் செல்கின்றான். வீட்டிலிருந்து நீராடித் தோய்த்து உலர்ந்த எளிமையான ஆடைகளை அணிந்து கையிலே பூசைப் பொருட்களுடன் ஆலயத்துக்கு விரைகின்றான். ஆலயத்துக்குச் செல்லும் போது வெறுங் கையோடு போகக்கூடாது என்பர். அதன் உண்மை யாதெனில் "வெறுங்கையோடு போகாதே நம்பிக்கையோடு போ" என்பதே தத்துவம்.

ஆலய வீதியை அண்மித்ததும் நீருள்ள இடத்தில் முதலில் தன்னை சுத்தம் செய்ய வேண்டும். இதுவே வழிபாட்டுக்கு முன் நடைபெறும் அங்க சுத்தியாகும். முதலில் கால் கழுவ வேண்டும். கால் கழுவும் போது புறங்காலினூடாக நீர் விட்டுக் கழுவ வேண்டும். அதன் பின் இரண்டு கைகளையும் நன்கு கழுவ வேண்டும். அடுத்து தேகத்திலே தெளித்துக் கொள்ள வேண்டும். பின் மூன்று கைத் தண்ணீரை வாயிலிட்டு நன்கு அலம்பிக் கொள்ள வேண்டும். அதன்பின் மூன்று கைத் தண்ணீரை உள்ளே குடிக்க வேண்டும். இக் கழுவு முறையினால் உள்ளும் புறமும் சுத்தமடைகின்றன.

கால் கழுவும் போது காலினால் செய்த பாவம் நீக்கம். கை கழுவும் போது கையினால் செய்த பாவம் நீக்கம். தேகத்தில் தெளிக்கும் போது காயத்தினால் செய்த பாவம் நீக்கம். வாயை அலம்பும் போது வாக்கினால் செய்த பாவம் நீக்கம். உள்ளே குடிக்கும் போது மனதினால் செய்த பாவம் நீக்கம். (தற்போது இவையெல்லாம் தெளிவாக நூல்களில் எழுதாமையினாலும், தெரிந்து ஆழ்ந்து சொல்லாமையினாலும் இந்து சமய மக்கள் சம்பிரதாயத்துக்கு கால் கழுவும் நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டார்கள்.) மேற்படி சுத்தம் செய்த பின் கோபுரத்தக்கு முன்னதாக கைகளை உயர்த்தி இறைவனை வணங்க வேண்டும். கைகளை மேலே உயர்த்தும் போது "இறைவா நீ பெரியவன் நான் சிறியவன்" என்ற தத்துவமும் ஆழமான நீர் நிலையில் வீழ்ந்த ஒருவன் கால்களையோ, தலையையோ தூக்கிப் போட்டு காப்பாற்றுங்கள் என்று சொல்லமாட்டான். கைகளை உயர்த்தியே காப்பற்றுங்கள் என்று சொல்வான். அதே போல, பிறவிக் பெருங்கடலில் அமிழ்ந்து போகும் "என்னைக் காப்பாற்று இறைவா." என்ற தத்துவமே உயர்ந்தது. இதன் பின் தூலலிங்கமாகிய கோபுரத்தை தரிசனம் செய்து ஆலயத்துள் செல்லும் போது வழமையாக வாயிற் படியை வணங்கி விட்டே செல்வோம். அதன் காரணம் விளங்காமல் பலர் கூறலாம். மூலஸ்தானத்திலே இருக்கும் கல்விக்கிரகம் மதிக்கத்தக்கது. இங்கிருக்கும் படிக்கல் மிதிக்கத்தக்கது, மிதிக்கின்ற கல்லையும் வணங்குகின்றார்களே என்று கேலி செய்யலாம். ஆனால் அதன் உண்மை எண்ணி நாம் இறைவனிடத்தில் இகபோக சுகங்களை வேண்டுவோமானால் மகான்களும் ஞானிகளும் பாதத்தன்மையே வேண்டுவார்கள்.

அத்தகைய ஒரு மகான் "படியாய்கிடந்துன் பவள வாய் காணேனே' என்ற ஆழ்வாரின் வாக்கிற்கு ஒப்ப யாரோ ஒரு மகான் திருக் கோயிலின் ஒரு படியாய் இருக்கலாம். என்ற உயரிய நோக்கை கருத்திற் கொண்டு அப்படியை மிதித்துச் செல்லும் போது அம்மகானை மிதித்துச் செல்வது போன்றது என்ற அச்ச உணர்வே அப்படியைத் தொட்டு வணங்குவதாகும் அதன் பின் உள்ளே சென்று கொடித்தம்பத்திற்கு முன்னால் உள்ள தரிசன மண்டபத்தில் ஆண்கள் அட்டாங்க நமஸ்காரம், பெண்கள் பஞ்சாங்க நமஸ்காரம்செய்வர். இதில் ஆண்கள் எட்டு உறுப்புக்களாகிய தலை, கையிரண்டு, செவியிரண்டு வாய், புயங்கள் இரண்டு நிலத்திலே பொருந்த வணங்க வேண்டும்.

பெண்கள் ஐந்து உறுப்பக்களாகிய தலை, கையிரண்டு, செவியிரண்டு, முழந்தாழிரண்டு ஆகிய உறுப்புக்கள் நிலத்திலே பொருந்த வணங்க வேண்டும். ஆண்கள் அட்டாங்க நமஸ்காரம் செய்யும் போது இரண்டு கைகளையும் நீட்டி மடக்கி நீர் நிலைகளில் நீந்தும் பாவனை போல் வணங்குதல் வேண்டும்." பிறவிப் பெருங்கடல் நீந்துவார் நீந்தார் இறைவனடி சேராதார் " என்ற வள்ளுவரின் வாக்கிற்கு அமைய பிறவிப் பெருங்கடலை நீந்துகின்ற பாவனையே ஆகும். இவை விஞ்ஞான ரீதியாக ஆலயத்தில் இருக்கின்ற மின்னியல் சக்தி உடலிலே ஊடுருவுவதாகும். பெண்கள் பஞ்சாங்க நமஸ்காரம் செய்யும் போது மார்பும் வயிறும் நிலத்திலே படக்கூடாது. என்பதை ஆன்றோர் கவனத்திற் கொண்டு இருக்கிறார்கள். காரணம் ஆலயத்தில் இருக்கின்ற மின்னியல் சக்தி வயிற்றுப் பகுதியிலுள்ள கர்ப்பப்பையையும் மார்பக சுரப்பியையும் பாதிக்கக் கூடும் என்பதனால் பெண்களுக்கு பஞ்சாங்க நமஸ்காரத்தை ஏற்படுத்தினர். அதன் பின் முதற்கண் விநாயகனை வணங்குதல் வேண்டும்.

விநாயகரை வணங்கும் போது இரண்டு கைகளையும் முஷ்டியாகப் பிடித்து கைகளை மாறி வலது கை முஷ்டி இடது கன்னத்திலும் இடது கை முஷ்டி வலது கன்னத்திலும் குட்டுதல் வேண்டும்.குட்டும் இடத்தை கன்னச் சுழி என்பர். குட்டும் போது மும்முறை குட்டுதல் சித்தாந்த விதி. ஆனால் ஆகமங்களில் ஐந்து தரம் குட்ட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. ஆனால், உண்மை விதி யாதெனில் யானை முகத்தை உடைய கணபதிக்கும் முன் குட்ட வேண்டும் என்பதே. "குட்டுப்படினும் மோதகக்கையான் முன் குட்டுப்பட்டிடல் நன்றாகும்." என்ற இம்முது மொழி மாறி "குட்டுப்பட்டாலும் மோதிரம் போட்டவன் கையால் குட்டுப்பட்டிடல் நன்று" என்று அறியாமையால் மருவியுள்ளது.

விநாயகருக்கு உரிய முகம் யானை முகம், யானை மும்மதத்தை உடையது. கன்னமதம், கபோதமதம், கரடமதம். இம்மதம் வெறியாகும் போது யானையை அடக்குகின்ற பாகன் அங்குசத்தால் யானையின் செவியைத் திருகி இழுப்பர்., அவ்வேளை அம்மதம் வலிமை கெட்டு யானை நெறிப்பட்டு அடங்கும். இதே போல் மனிதனும் மும்மதங்களை உடையவன். ஆணவம், கன்மம், மாயை இம்மும்மலங்களும் வலிமை கெட மும்முறை குட்டுதலும் உடன் அக்கைகளை மாறிய படியே செவிகளைப் பிடித்து தோப்புக் கரணம் இடுதலும் ஆகும். இதை கந்தபுராணத்திலே அனந்தன் சாபம் நீங்கும் படலத்தில் பத்தாம், பதினோராம் பாடல் தெளிவுறுத்துகின்றது.

"இத்திறம்படு மெல்லையில் நின்றிரு
மத்தலைச் சுரர் யாவரும் அன்புறிக்
கைத்தலத்தைக் கவித்தம தாக்கிய
தத்த மத்தகம் தாக்கினர் மும்முறை" - 10

"இனைகொள் கையை எதிரெதிர் மாற்றியே
துணை கொள்வார் குழை தொட்டனர் மும்முறை"

என்ற இரு பாடலும் இதற்கு எடுத்துக்காட்டாகின. விஞ்ஞான ரீதியாக இரண்டு கன்னச் சுழிகளிலும் குட்டும் போது இடை பிங்கலை, சுழிமுனை என்னும் மூன்று நாடிகள் தொழிற்படுகின்றன. இவை ஞாபகசக்திக்கு வழிவகுக்கும். அதன்பின் ஆலயத்தை மும்முறை வலமாக வந்து தரிசன மண்டபத்தில் ஆண்கள் வலது பக்கமாகவும் பெண்கள் இடது பக்கமாகவும் நிற்றல் வேண்டும். அவ்வேளை ஆலயத்திலே திரை இடப்பட்டிருக்கும். மனமாகிய இறையொளி தெரியுமிடத்தில் மாயை என்ற திரை அதை மறைத்திருக்கும். அதற்குள் இறைவன் மறைந்திருப்பான். திரை நீங்க தீபங்கள் காட்டப்படும் மாயை நீங்க இறைவனின் காட்சியைக் காணலாம்.

தூபம் காட்டல் :- இறைவன் அருபமானவன்

அடுக்குத் தீபம் :- இறைவன் என்னுதற்கரிய சோதி வடிவானவன்

ஐந்து திரித் தீபம்:- இறைவன் ஐந்து வடிவாய் காட்சி தருகின்றான். (நாக தீபம் முதல் இடப தீபம் வரை பிரம்மா, விஷ்னு, உருத்திரன், சதாசிவன், மகேஸ்வரன்)

மூன்று திரித் தீபம்:- இறைவன் மூன்று வடிவானவன். (வில்வ தீபம்) - (பிரம்மா, விஷ்ணு, உருத்திரன்)

கும்ப தீபமும் ஐந்து தட்டுக்களும்:- கும்பம், பிரமம், ஐந்து தட்டுக்களும், ஈசானம், அகோரம், வாமதேவம், சத்தியோ ஜாதம், தற்புருஷம்.

ஒற்றைத்திரி தீபம் :- இறைவன் ஒருவனே

கற்பூர தீபம் :- இறைவன் உடன் தோன்றி மறைபவன்.

பஷ்மரட்சை :- பூ, விபூதி, நீர் மூன்றையும் தொட்டு ஓங்காரமாகக் காட்டி மூன்றாவது தடவை கற்பூறத்தட்டின் அடியிலே இடப்படும். (தற்போது கற்பூர ஒளியை விபூதியைப் போட்டு அணைத்து விடுகின்றார்கள். இதன் தத்துவம் பூப்போன்ற உடம்பு ஒரு நாள் நீறாகும். அதை நீரிலே கரைப்பர் என்பதாகும். அவ்வேளை ஆத்மா ஒளிப்பிளம்பிலே கலக்கட்டும். ஓங்காரமாக காட்டல் முதல் வட்டம் பிறப்பு. இடைச்சுழி நடுமத்திய வாழ்வு. கடை வட்டம் இறப்பு.

கண்ணாடி :- மனிதா நீ கண்ணாடியாக இரு என்பதாகும்.

குடை :- மனிதா நீ நிழலுள்ளவனாக இரு என்பதாகும்.

வெண்தாமரை :- மனிதா நீ மானமுள்ளவனாக இரு என்பதாகும்.

விசிறி :- மனிதா நீ இறைவனைத் தவிர யாருக்கும் அடிமையாக இராதே.

ஆலவட்டம் :- மனிதா நீ புகழோடு வாழ்.

கொடி :- மனிதா கொடி போன்று உன் பெயர் பட்டொளி வீசிப்பறக்கட்டும்.

பன்னீர் :- புகழ் மணம் உலகெல்லாம் பரவட்டும்.

இறைவனின் கருணைக்கு பாத்திரமாகிய மனிதன் கண்ணாடி போன்று வாழ வேண்டும். கண்ணாடியில் நாம் நம்மைப் பார்த்து அலங்கரிப்பது போல மற்றோர் கண் நம்மைப் பார்த்து வாழ வேண்டும். கண் - நாடி - அளத்தல் மற்றவர் நம் தூய வாழ்வைக் கண்டு திருந்துதல், குடை நிழலுக்கு பாத்திரமானது. இறையன்பன் எல்லோருக்கும் நிழலாய் இருத்தல் வேண்டும். வெண்சாமரை ஓர் முடி இழந்தாலும் உயிர் வாழாத கவரிமான் போல மான உணர்வோடு இறைவாழ்வோடு வாழ வேண்டும். சில போர்க்கு சில பேர் விசிறி என்பர். விசிறி அடிமையின் சின்னம். இறையடியான் "நாமார்க்கும் குடி அல்லோம்" என்ற அப்பர் வாக்கிற்கு ஒப்ப வாழுதல் வேண்டும். ஆலவட்டம் ஆள்வட்டம் - மனிதர்களிடையே பெரு மனிதராக மனிதருக்குள் மாணிக்கமாக நீ வாழ வேண்டும். (ஞானிகள், மகான்களுடைய வாழ்க்கை இதற்கு எடுத்துக்காட்டு) கொடி கண்ணாடியாக வாழ்ந்து நிழலாக இருந்து மானமுள்ளவனாக வாழ்ந்து அடிமையாய் இராமல் மனிதர்களால் ஏற்றுக் கொள்ளப்படும் மாமனிதராக இருந்தால் உலக மாந்தர் தலை வணங்கும் மங்காத புகழ் கொண்ட கொடியோடு வாழ்ந்தால், உனது பெயர் பன்னீர் போல் எங்கும் புகழ் மணம் வீசும்.

அர்ச்சனை :- இறைவனின் நாமங்களை சொல்லி அர்ச்சனை செய்தல். அதன் பின் பஞ்சாராத்தி காட்டுதல் இறைவனின் நாமத்தை சொல்ல, அவனின் திருவருள் சக்தி என்ற ஒளிக்குள் நாம் கரைந்து ஒன்றாகி விடுகின்றோம். கற்பூரம் , ஆத்மா அதில் பற்றிய ஒளி- இறைவன். ஜீவாத்மா, பரமாத்மாவோடு கரைதல் அப்பஞ்சாராத்தியை பின் அடியார்கள் தொட்டு வணங்குதல். அவ்வொளியை அகக்கண் காண ஊனக் கண் கண்டு உணர்வடைதல்.

("முகக்கண் கொண்டு பார்ப்பதே ஆனந்தம்" என்று திருமூலரின் பாடல் சிந்தை கொள்ளத்தக்கது.) அதன்பின் பஞ்சபுராணம் பாடும் ஓதுவாருக்கு கைகழுவ நீர் கொடுத்து விபூதி அணிவித்து கை நிறைய மலர்களைக் கொடுத்து பின் பாடுதலே சிறப்புடையதாகும். (தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருப்புராணம், வாழ்த்து இதில் திருப்புகழ் பிற்காலத்திலே சேர்க்கப்பட்டவை. விரும்பினால் திருப்புராணத்தின் பின் திருச்சிற்றம்பலம் கூறி திருப்புகழ் பாடலாம். தலபுராணம் இருந்தால் தலபுராணம் பாடல் பாடலாம். திருப்புராணம், பெரிய புராணம் மட்டுமே பாடுதல் வேண்டும். நிறைவில் "வான் முகில் வாழாது பெய்க" எனும் வாழ்த்து கட்டாயம் இடம்பெறல் வேண்டும். பரிவார ஆலயங்களில் பூஜை நிறைவு பெற்று சண்டேஸ்வரர் பூஜை நடைபெறும். சண்டேஸ்வரர் பூஜையில் பூஜையின் பலன்களை அவரிடம் ஒப்புவித்து மெதுவாக கையைத் தட்டிக் கொள்ளுதல். இதில் இரண்டு தத்துவங்கள் அடங்குகின்றன.

1) நித்திய தியானத்தில் இருக்கின்றவரை சற்றே அசைத்து எமது பிரார்த்தனையை நிறைவேற்றும்படி கூறல்.

2) ஆலயத்துள் நாம் வரும் போது வெறுங்கையோடு வராமல் நம்பிக்கையோடு வந்தோம். ஆலயத்தை விட்டு இறுதியாக செல்லும் போது ஆசையோடு எதையும் கையில் பற்றிக் கொள்ளாமல் வெறுங்கையோடு போகின்றேன். ஆனால் நம்பிக்கையோடு போகின்றேன் என்பது.

இதில் கடைசியாக மூன்று தரம் மணி அடிப்பதற்கும் சண்டேஸ்வரருக்கும் சம்பந்தமில்லை. பூசை தொடங்குவதற்கு முன் மூன்று தரம் மணி அடித்தால் அதே போல் நிறைவிலும் மூன்று தரம் மணி அடித்து நிறைவு செய்தல் ஆகும்.

ஒரு தரம் அடித்தல் :- உலக நன்மைக்காக

இரண்டு தரம் அடித்தல் :- கிராம நன்மைக்காக

மூன்று தரம் அடித்தல் :- ஜனங்களின் நன்மைக்காக.

காண்டா மணி அடித்தல் தீய எண்ணம் விலகவும் நன்மையான சிந்தனை நமக்குள் விழிக்கவும். இதுவே அசுரர்கள் விலகவும், தேவர்கள் வரவும் அடித்தல் என்பதாகும். சண்டேசுவரர் பூஜை நிறைவின் பின் குருக்கள் ஐயாவினால் கட்டாயம் ஒரு நற்சிந்தனை வழங்கப்பட வேண்டும். அதன் பின் விபூதி வழங்குதல், விபூதி மேலான அனுபூதி ஆகும். குருக்கள் ஐயா அவர்கள் தன் திருக்கையினால் நம் நெற்றியிலே அணியும் போது தலை தாழ்த்தி வலது கையினால் வாயை மூடி விபூதியை நெற்றியில் அணிந்து பின் அவரின் திருவடியைத் தொட்டு வணங்குதல் வேண்டும்.

இதில் உயர்வு, தாழ்வு பார்த்தல், தவிர்த்தல் வேண்டும். விபூதியை நம் கையில் தரும் போது இடது கை கீழாகவும் வலது கை மேலாகவும் வைத்து தலை தாழ்த்தி விபூதியைப் பெற்றுக் கொண்ட பின் இரண்டு கண்களிலும் ஒற்றி வணங்கிய பின் தலை நிமிர்ந்து கீழே சிந்தா வண்ணம் நெற்றியில் அணிதல் வேண்டும். அணிந்த மீதி விபூதியை கவனமாக வீட்டிற்கு கொண்டு சென்று அணிதல் நன்று. விபூதியின் பின் தீர்த்தம் வழங்கும் போது வலது கை மேலாகவும் இடது கை கீழாகவும் வைத்து ஆணவத் தன்மையுடைய ஆட்காட்டி விரலை பெருவிரலாகிய பதியோடு மடித்து மூன்று விரல்கள் நிமிர்ந்து நிற்க உள்ளங்கையில் தீர்த்தத்தை வாங்கி மெதுவாக அருந்துதல் வேண்டும்.

ஆணவம் இறைவன் அடியில் வலிமைகெட, மனம், வாக்கு, காயம், சுத்தி பெறும். பெருவிரல் - இறைவன், ஆட்காட்டி விரல் - ஆணவம் அடங்கி வலிமை கெடல், மூன்று விரல்கள் மனம், வாக்கு, காயம். தீர்த்தம் எனப்படுவது சுத்தமான தண்ணீரே. இது தீர்த்தக் கிணற்றிலே எடுத்தல் அல்லது சுவாமி அபிஷேகித்த சுத்த நீர். இந்நீரிலே இறைவனுக்கு உகந்த பத்திரங்களை இட்டுப் பத்திரப்படுத்தி கொடுத்தால் அது மருந்துக்கு சமமாகும்.

| | | |
|---|---|---|
| விநாயகர் | :- | அறுகுத் தீர்த்தம் |
| சிவன் | :- | வில்வைத் தீர்த்தம் |
| அம்பாள் | :- | வேப்பிலைத் தீர்த்தம் |
| விஷ்னு | :- | துளசித் தீர்த்தம் |
| ஆஞ்சநேயர் | :- | துளசித் தீர்த்தம் |

பஞ்சாமிர்தம், பால் தீர்த்தமல்ல. நெய் வேத்திய பிரசாதங்களே இவை பிரசாதங்களோடு வழங்கப்படும். தீர்த்தம் வழங்கிய பின் சந்தனம் வழங்கப்படும். சந்தனம் சிவத்தின் அடையாளம் குளிர்ச்சியை உடையது.

சந்தனத்தை மோதிர விரலால் நெற்றியில் சுழிமுனையில் வேல் போன்ற அடையாளமாக மேல் நோக்கி இட வேண்டும். (மோதிர விரலால் வைத்தல். இவ்விரல் சூரியன் மேட்டை உடையது. அவ்விரலுக்கும் மூளைக்கும் தொடர்புண்டு.) கல்வைத்த மோதிரம் அவ்விரலில் அணிதல் அதித சக்தியைக் கொடுக்கின்றது. அவ்விரலால் சந்தனம் வைத்தால் அது அதிக சக்தியைக் கொடுக்கும். சந்தனத்தின் மேல் குங்குமம் வைத்தால் குங்குமம் சக்தியின் அடையாளமாகும்.

குங்குமம் :

சக்தி - வல்லமை, நிறம் - செந்நிறம், இரத்தத் தன்மை உடையது. பெண்கள் கட்டாயம் குங்குமம் இடுதல் வேண்டும். குங்குமம் பெண்களுக்கு கட்டாயமானவை. ஆறு மாதம்முதல் ஒன்றை வயது வரை தாயின் நாக்கால் நெற்றியில் தடவிவிடல் "தாய் எச்சி நோய்படா" ஒன்றரை வயது முதல் மூன்று வயது வரை கறுத்த சாந்துப் பொட்டு, மூன்று வயது முதல் பன்னிரெண்டு வயது வரை சிவப்புச் சாந்து பொட்டு - பன்னிரண்டு வயதில் நதுமங்கலம் அடைந்த பின் ஒரு சுமங்கலியாய் நெற்றியிலே நீர் வார்க்கும் அன்று குங்குமம் இடப்படும். அக்குங்குமம் அவள் திருமணமாகும் வரை அவளைப் பாதுகாக்கும் செஞ்சூரியக் கவசமாகும். நெற்றியிலே இட்ட குங்குமம் பிறந்த வீட்டுக் குங்குமம். திருமணத்தன்று கணவனால் நெற்றி வகுட்டிலே வைக்கும் குங்குமம் சத்தியக் குங்குமம். புகுந்த வீட்டுக் குங்குமம்.

எனவே பெண்கள் சமகால நாகரீகத்தில் ஸ்ரிக்கர் பொட்டாகிய ஒட்டுப் பொட்டில் வாழ்க்கையை ஓட்டாமல் குங்குமம் நெற்றியில் இட்டு மங்களமாக வாழுதல் நலனே. குங்குமம் கொடுத்த பின் பூ கொடுக்கப்படும். இதில் ஒரு மாற்றம் ஆலயத்தில் தரப்படும் பூவை காதில் வை , தலையில் சூடு என்று எந்த நூலிலும் கூறப்படவில்லை. (காதிலே பூவை - ஏமாற்றுத்தனம் - ஏமாந்த தன்மை ) எனவே இச் செயற்பாடு பழக்க தோசத்தாலும் அறியாமையினாலும் வந்தவையே.

எனவே ஆலயத்தில் தரும் மலர்களை காதிலும் கூந்தலிலும் சூடாமல் அதை மிகக் கவனமாக வீட்டிலே கொண்டு வைத்தல் சிறப்புடையதாகும். காரனம் அம்மலரிலே கலந்த தெய்வ சக்தி காதிலோ, கூந்தலிலோ, வைத்து எதிர்பாராத விதமாக வீதியிலே விழுந்து மிதிபட்டால் அதன் தெய்வ சக்தி அழிந்து விடும்.

எனவே அம்மலரை வீட்டுக்கு கொண்டு சென்று வைத்தால் தெய்வ சக்தி மணம் வீசும். அதன் பின் பிரசாதங்கள் வழங்குவார்கள். அவைகளை மருந்து போல் பெற்றுக் கொண்டு ஆலயத்தில் அமைதியாக சற்று நேரம் இருந்து வீடு செல்ல வேண்டும். (சரணகமலாயத்தை அரை நிமிட நேரமட்டில் தவமுறைத் தியானம் வைக்க அறியாத" என்ற திருப்புகழ் சிந்திக்கத்தக்கது) ஆலயத்துள் நாம் விளங்கும் பூசைப் பொருட்கள் ஆலயத்தில் இருந்து நமக்களிக்கப்படும் பிரசாதங்கள் யாவும் உயரிய தத்துவம் உடையவையே.

வெற்றிலை :-வெறுமை - இலை மனம்ஆலயத்துள் செல்லும் போது வெறுமை, நிலை இருத்தல் வேண்டும்.

பாக்கு :- முற்றிய இதயத்தைக் குறிக்கும். மனம் பாக்காக பக்குவப் பட்டு விட்டால் மனம் வலிமையடைந்து விடும்.

வாழைப்பழம் :- வெறுமை நிலை மனமிருந்து பாக்காக வலிமை பெற்றால் வாழ்வு கனிந்து விடும் வாழைக்கனி வாழ்வுக்கனி (மற்றுப்பற்றெனக் கின்றிநின் திருப்பாதமே மனம்" என்ற சுந்தரரின் பாடல் சிந்தை கொள்ளத் தக்கது.)

அரிசி :- உமி - ஆணவம், முளை - கன்மம், தவிடு - மாயை, உமி நீக்கிய அரிசி - ஆன்மா. ஞானாக்கினியில் பக்குவம் ஆவது போல் அரிசி நெருப்பிலே வேகி, பக்குவமான அன்னம் ஆகின்றது.

தேங்காய் :- மட்டை - மாயை, தும்பு - கன்மம், ஓடு - ஆணவம், தேங்காய் உடைக்கும் போது நீர் வழிந்து விடும். நல்ல தேங்காய் பக்குவ ஆன்மா துருவிப் பிழிந்து பயன் பெறும். நல்ல ஆத்மா சோதனைக்கு உள்ளாக்கப்படும். தேங்காய் உடைத்து தும்பை எடுத்தல் குடுமித்தும்பு எடுபட மூன்று கண்கள் தெரியும். கன்மமாகிய தும்பு நீங்க மனம், வாக்கு, காயம் வெளிப்படும்.

தேங்காய் எண்ணெய் :- துருவிப் பிழிந்து நெருப்பிலிட்டு நீர் வற்றக் காய்ச்சிய பின்பு சுடர் விட்டுப் விரகாசிக்கும். சோதனைகளில் துவண்டு பக்குவப்பட்ட ஆத்மா சுடர் விட்டுப் பிரகாசிக்கும்.

கற்பூரம் :- எரிந்து மீதமெல்லாம் காற்றில் கலந்து விடுகின்றது. தூய ஆத்மா இறை அருளோடு கலந்து விடுகின்றது.

ஊதுபத்தி :- எரிந்து புகையைப் பரப்பி தான் சாம்பல் ஆகி விடுவது போல மனிதப் பிறவி தியாக சிந்தையால் நலம் விளைத்து அழிந்து விடுகின்றது.

மலர்கள் :- பூவுக்குள் காணுதற்கரிய மணம் இருப்பது போல சிவனுக்குள் காணுதற்கரிய சிவமணம் கலந்திருக்கும்.

பொங்கல் :- அரிசி, சர்க்கரை, பால், கற்கண்டு, கனிவர்க்கம் தனித்தனியாக இருந்து ஒரு பானையில் ஒன்றாகக் கலந்து இனிக்கும் பொங்கலாக மாறுவது போல் ஆலயத்துக்கு வெளியே பல வகைப்பட்ட மக்கள் ஒன்றாக ஆலயத்துக்குள் வந்தால் அவர்கள் பிரிக்க முடியாத இனிக்கும் இறை அடியார்களாவர்.

எனவே மேற்குறித்த ஆலய வழிபாட்டின் தத்துவங்கள் ஆத்மா நெறிப்பட உதவும் வழிபாடாகும். வழிபாடு ஒரு வழிபாடு என்பதற்கொப்ப ஆலயத்தோடு கலந்த ஆத்மா பேரின்ப வாழ்வில் இரண்டறக் கலந்து இன்பமுற ஆன்றோர்கள் வகுத்த சான்றுகளாகும். மேற்குறித்த அனைத்து தத்துவங்களும் பஞ்ச பூதங்களின் உட்பொருளே. ஆழ்ந்து சிந்தித்தால் அகம் மலரும். ஆத்மா பலம் பெறும். இறைவழிபாட்டை கடைப் பிடித்து பொருள் உணர்ந்து இருள் நீங்கி அருள் பெற்று வாழ்வோமாக.

மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.
அன்பே சிவம் - அதுவே நலம்.

நன்றி
விஸ்வப்பிரம்மம்
வை. இ. எஸ். காந்தன்குருக்கள்

செல்வி.ப.யுகேதகாந்தா
தரம் 11
மட்/வின்சன்ற் உயர்தர மகளிர் பாடசாலை
மட்டக்களப்பு

உ

## விநாயகர் தத்துவமும் பெருமையும்

தேவர்கள் தேவன் சிந்து முகத்தவன்
மூவர்கள் முதல்வன்முத் தொழிற்குங் காரணன்
மேவர மகிழ்வது விளம்பு நாமமுந்
தாவறு விநாயக சதுர்த்தி யென்பரால்

தேவாதி தேவர்களுக்கும் பூவுலகிலுள்ளோர்களுக்கும் இன்னல் இடர்களைக் கொடுத்து வந்த சிந்தூரனை அழிக்கும் பொருட்டு விநாயகப் பெருமான் திரு அவதாரஞ் செய்தார். ஆவணி மாத அமாவாசை வந்த நான்காம் நாள் சதுர்த்தியில் இவ்அவதாரம் நிகழ்ந்தது.

இன்னல் இடரினைத் தவிர்த்துப் பேரின்ப வாழ்வைத் தந்து, எடுத்த கருமங்கள் இனிதே நிறைவுறவும், நடப்பவைகள் நன்றே நடக்கவும் நாம் விநாயகப் பெருமானை வழிபட வேண்டும். வழிபடும் அடியவர்களுக்கு இடரினைக் களைந்து பேரருள் பாலிக்க பிள்ளையார் எந்நேரத்திலும் வருவார் என்ற நம்பிக்கை எல்லோருக்கும் உண்டு. இதனைக் கந்தப்புராணத்தில் கச்சியப்பச் சிவாச்சாரியார் இவ்வாறு கூறுகிறார்.

மண்ணுல கத்தினிற் பிறவி மாசற
எண்ணிய பொருளெல்லாம் எளிதின் முற்றுறக்
கண்ணுத லுடையதோர் களிற்று மாமுகப்
பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவோம்.

பிள்ளையாரை மஞ்சள் புற்றுமண், சாணம், சந்தனம், மரம், கருங்கல், இரும்பு, வெள்ளி, தங்கம், பஞ்சலோகம் என்பவற்றில் உருவகித்து நாம் வழிபாடுகளைச் செய்து வருகின்றோம். வீடு குடிபுகும் போது பிள்ளையார் படமே முதலில் வைக்கப்படும் படமாகும். எந்தக் கிரியையின் ஆரம்பத்திலும் விநாயகர் வழிபாடே முதலில் இடம்பெறுகின்றது. விக்கினங்களைப் போக்குவதனால் விக்கினராஜன் என்றும், சித்திகளைக் கொடுப்பதனால் சித்தி விநாயகன் என்றும் இளம்பிறைச் சூடியதால் பாலச்சந்திரன் எனவும் இன்னும் பல பெயர்களாலும் அழைக்கப்படுகின்றார்.

இவ்வாறான பெருமைக்குரிய விநாயகர் யானைத் தலையை உடையவர். யானை மிகுந்த அறிவு படைத்தது. யானைக்கு ஞாபக சக்தி மிக அதிகம். மேலும் யானையின் காதுகள் பெரிதாக இருப்பதனால் மிக நுண்ணிய ஒலியைக் கூட அதனால் கிரகித்துக் கொள்ள முடிகின்றது. இறைவன் புகழைக் கேட்பது என்ற ஆத்மிக சாதனைக்கு முதற்படியாக காதுகள் கூர்மையாக அமைந்திருப்பது அவசியமாகும்.

யானை புகழ்ச்சியையும் இகழ்ச்சியையும் ஒரே மாதிரியாக எடுத்துக் கொள்கின்ற தன்மை வாய்ந்தது. தேவையற்றவற்றை உதறித்தள்ளிவிடும். நல்ல விடயங்களை மென்மையாக இலகுவாக ஏற்றுக் கொள்ளும். இவ்வாறு மனித குலத்திற்கு அத்தியாவசியமான பாடங்களை கற்றுத்தருவதுதான் விநாயகப் பெருமானின் தத்துவமாகும்.

மேலும் அவரது வாகனம் மூஷிகம். மூஷிகத்தை மூஞ்சூறு என்றும் அழைப்பார்கள். இது இருளில் சஞ்சரிப்பதோடு அதனை வாசனை பிடிக்கும் தன்மையும் உண்டு. வாசனை பிடித்துக் கொண்டே எவ்வகையான உணவுப் பொருள் எங்கிருக்கிறது என்று இருட்டிலே கண்டு பிடித்துக் கொள்ளும். அதே போன்று ஆன்மீகத்திலும் இருள் என்பது ஆசைகளையும் குறிக்கின்றது. அதனால்தான் அஞ்ஞானத்தையும் ஆசைகளையும் தனது கட்டுப்பாட்டில் வைத்திருப்பவர் என்ற தத்துவத்தை எடுத்துக்காட்டவே விநாயகப் பெருமான் மூஷிகத்தை தனது வாகனமாகக் கொண்டுள்ளார்.

விநாயகன் பூசைக்கு விஷேடமாக அறுகம்புல் பயன்படுத்தப்படுகின்றது. இதனை விளக்க பிள்ளையார் புராணத்தில் ஒரு கதை கூறப்படுகின்றது. ஒரு தடவை கைலயங்கிரியில் சிவபெருமானும் உமாதேவியாரும் தாயம் ஆடிக்கொண்டிருந்தார்கள். இவ்விளையாட்டில் வென்றது யார்? தோற்றது யார்? என்னும் தீர்ப்புச் சொல்லும் நடுநிலைப் பொறுப்பு நந்தி தேவரிடம் ஒப்படைக்கப்பட்டது. நந்தி தேவருக்கு பரமேஸ்வரன்பால் பக்தி, அன்பு, அதிகம் அதனால் பரமேஸ்வரன் விளையாட்டில் தோல்வியடைந்த போது

கூட ஈஸ்வரனை வெற்றியடைந்ததாக அறிவித்தார். நடுநிலை தவறிய இந்தத் தீர்ப்பினால் கோபமுற்ற பார்வதியார், நந்திதேவரை சபித்துவிட்டார். இதனால் நலிவுற்ற நந்திதேவர் பாவவிமோசனம் வேண்ட, இதற்கு மனமிரங்கிய அம்மையார் ஆவணிச் சதுர்த்தியில் என்மகன் கணபதியின் பிறந்த தினமான அன்று உனக்குப் பிரியமான அறுகம்புல்லினால் கணபதியை அர்ச்சனை செய்தால் உனக்கு சாபவிமோசனம் கிடைக்கும் என்று அருள் செய்தார். அதே போன்று நந்திதேவரும் விநாயகப் பெருமானை ஆவணிச் சதுர்த்தியில் அறுகம்புல்லினால் அர்ச்சனை செய்து சாப விமோசனம் பெற்றார்.

இதிலிருந்து யார் யாருக்கு எது விருப்பமோ, எது பிரியமோ அதனை இறைவனுக்கு சமர்ப்பணம் செய்தால் பாவம் விலகி விமோசனம் கிடைக்கும் என்ற விடயம் தெளிவாக புரிகிறது. இந்த விடயத்தை உறுதிப்படுத்துவதே விநாயக தத்துவமாகும். உயிர் வாழ்க்கைக்கு தலைவர் விநாயகரே. சுயநலம் சுயலாப நோக்கம், அவற்றை வைத்துக் கொண்டு வாழக்கூடாது என்று உணர்த்துபவர் விநாயகர். சுயநலத்தை கைவிட்டு தியாகம், ஆன்மிக வாழ்க்கை நடாத்த வேண்டும். அதன் மூலம் தெய்வீகத்தை உணர்ந்து கொள்ள வேண்டும். இதுவே நிஜமான விநாயக தத்துவம் என பாபா தனது ஆன்மிக இதழ் ஒன்றில் கூறுகின்றார்.

விநாயகப் பெருமானை நாம் வணங்கும் போது இரண்டு கைகளாலும் மூன்றுமுறை கன்னப் பொட்டில் குட்டிக் கொள்கின்றோம். இதனை ஆதாரப்படுத்தும் வகையில் கந்தபுராணத்தில் பின்வருமாறு கூறப்படுகின்றது.

முனிவர்களில் பெரியவராகிய அகத்திய முனிவர் சிவபெருமானிடமிருந்த காவிரி நதியை கமண்டலத்தில் அடக்கிக் கொண்டு தென்திசை நோக்கி வந்து கொண்டிருந்த போது அதனிடையில் குடகுமலையில் சிவபூசை செய்து கொண்டிருந்தார். அப்பொழுது தேவேந்திரன் சீர்காழியில் பூசை செய்து கொண்டிருந்தான். அந்நேரம் அவனது நந்தவனம் மழையின்றி வாடி வதங்கியிருந்ததினால் சிவபூசைக்கு பூவின்றி தவித்தான். அச்சமயம் நாரத முனிவர் இந்திரனிடம் வந்து அகத்தியருடைய கமண்டலத்திலுள்ள காவிரியை பெருக விட்டால் உனது நந்தவனம் பொலிவுறும் என்றும் இதற்கு விநாயகப் பெருமானை வேண்டிக் கொள் என்றும் கூறினார். அக்கணமே தேவேந்திரன் விநாயகரை வழிபட்டு வேண்டிக் கொண்டான்.

விநாயக மூர்த்தி காக்கை வடிவுடன் சென்று காவிரி அடங்கிய கமண்டலத்தின் மீது அமர்ந்தார். அகத்தியர் அக்காலத்தை கரத்தினால் விரட்டினார். காகம் உந்திப் பறந்தது. கமண்டலம் கவிழ்ந்து காவிரி பெருக்கெடுத்து ஓடியது. அகத்தியர் காகத்தின் மீது சீறிப்பாய்ந்தார். அது அந்தணச் சிறுவனொருவனாகி நின்றது. அச்சிறுவனை இருகரங்கலாலும் குட்டும் பொருட்டு குறுமுனி ஓடினார். பிள்ளையார் அவருக்கு இடம் கொடாமல் அங்குமிங்கும் மாறிமாறி ஓடினார். அச்சிறுவனை நெருங்கி குட்டுவதற்கு இரு கைகளையும் ஓங்கினார். அத்தருணம் உடனே ஐங்கரங்களுடன் விநாயகப் பெருமான் காட்சி தந்தருளினார். அகத்திய மாமுனிவர் திகைத்து நிழலை தடுமாறி நடுநடுங்கினார். "இன்றுமுதல் ஓங்காரப் பொருளே உன்னை அடியேன் அறியாமல் குட்டுவதற்கு கை ஓங்கினேனே" என்று மனம் வருந்தி இருகைகளாலும் தன் கைகளாலும் தன் தலையிலேயே குட்டிக் கொண்டார். விநாயகர் அவருடைய கரத்தைப் பற்றி திருவருள் புரிந்தார். இன்றுமுதல் நம் திருமுன் பரமபக்தியுடன் தலையில் குட்டிக் கொண்டோர் சூரிய மதியும், சீரிய நிதியும் பெறுவார்கள் என்று வரமளித்தருளினார்.

இதனால் விநாயகப் பெருமானின் திருமுன் பக்தர்கள் அடியார்கள் குட்டிக்கொள்ளும் மரபுகள் உண்டாயிற்று. குட்டிக் கொள்ளும் வழக்கத்துடன் சேர்த்து நாம் தோப்புக்கரணமும் போடுகின்றோம்.

நமது உள்ளங்காலிலிருந்து தலையுச்சி வரை அநேகம் நரம்புக்கற்றைகள் உள்ளன. நாம் சுறுசுறுப்பாக அடிக்கடி உட்கார்ந்து எழுந்தால் (தோப்புக்கரணம்) அந்த நரம்புக் கற்றைகள் சுருங்கிச் சோர்வடையாமல் இரத்தம் நன்கு பாய்ந்து மூளைக்கு பலம் கொடுக்கும் அந்த இரத்தம் மூளைக்குச் சென்றால் மனதில் சாந்தமான நினைவுகள் மலரும்.

நாம் தோப்புக்கரணம் போடும் போது உடல் அசைவில் சுஷிம்னா என்ற நாடி தட்டி எழுப்பப்படுகின்றது. இரு கரங்களால் கன்னப் பொட்டுக்களில் குட்டிக் கொள்ளும் போது ஸஹஸ்ராரம் என்ற இடத்திலிருந்து யோகிகளுக்கு அமிர்தம் சிந்தும். விநாயக உபாஸனையின் மூலம் சுசஷீம்னா நாடி, அமிர்தகலசம் இரண்டும். ஒருங்கே இயங்குவதால் பூரண பலன்களை அடையமுடிகிறது என்பர்.

எந்தத் தேவதையை வணங்கத் தொடங்கினாலும் முதல் விநாயகரைத் தியானித்து நெற்றியில் குட்டிக் கொண்ட பின்னரே வணங்க வேண்டும். இவ்வாறு குட்டிக் கொள்வதால் அமிர்தம் பெருகி நாடிகளில் பாய்ந்து உபாசகர்களுக்கு சோம்பல் முதலிய அவகுணங்களை விரட்டி நல்ல மனநிலையை அளிக்கிறது.

மூலக்கனல் என்று சொல்லப்படுவதே சுஷிம்னா நாடி இது மனித சரீரத்தில் அடிவயிற்றில் கீழ் ஓங்கார ரூபத்தில் அமைந்து செயலாற்றுகிறது. இதைத் தட்டிச் செயல்படுத்தி மேல் நோக்கி ஸஷஸ்ரார மண்டலம் வரை செலுத்தி சிரசிலிருக்கும் அமிர்தத்துடன் கலந்து அவ்விடமே அதை நிலைநிறுத்திக் கொண்டால் மனிதன் தன் நிலை மறந்து பிரமத்துடன் ஐக்கியப்பட்டு நிற்பான். பேரானந்தத்தைக் காண்பான். இந்த நாடியை செயற்படுத்துவதற்கு , தட்டி எழுப்புவதற்கு மூலாதாரத்தில் அளவில்லாத உஷ்ணத்தை உண்டு பண்ண வேணடும். அதற்கு மனதை ஒரே நிலையில் ஐக்கியபடுத்தி, நெடுங்காலம் ஜபதபங்கள் புரிய வேண்டும். அதிக உஷ்ணமான பொருட்களை உபயோகித்து பூசை முதலியன புரிதல் வேண்டும்.

மூலாதாரத்திலுள்ள சுஷம்னா நாடி கணபதி என்பதனாலேயே நமது ரிஷிகள், சாஸ்திர விற்பன்னர்கள், ஆகியோர் தாவர வர்க்கத்திலேயே மிக மிக உஷ்ணமான வெள்எருக்கு, வன்னிப்பத்திரம் ஆகியவை கணபதி பூசைக்கு உகந்தவை என கூறியிருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. நெற்றிப் பொட்டில் குட்டிக்கொண்டு தோப்புக்கரணம் போடுவதையும் விநாயக வழிபாடு மரபாக அமைத்துள்ளார்கள்.

இவ்வாறான தத்துவப் பெருமைக்குரிய பிள்ளையாரின் யானை முகத்தையும், பானை வயிற்றையும் பெரும் செவிகளையும் கொண்ட இப்பெரிய தோற்றத்தைக் கண்ட சந்திரன் வியந்து ஏளனம் செய்தமையால் கோபத்துடன் "சந்திரனே! நீ என்னை நையாண்டி செய்து சிரித்தாய் ஆகையினால் இன்றைய நாளில் உன்னைப் பார்ப்பவர்கள் எல்லோரும் பழிபாவங்களை அடையக்கடவர்" என்று சபித்துவிட்டார். சந்திரன் ஏளனம் செய்த அந்த நாளும் ஆவணிச் சதுர்த்தி தினமாகும். இதனால் நான்காம் பிறைச் சந்திரனை யாரும் பார்க்கக்கூடாது என்ற ஐதீகம் வரலாறாயிற்று.

பிள்ளையாரை ஆவணிச் சதுர்த்தியன்று விரத அனுஷ்டானங்களுடன் வழிபட்டால் நம் எல்லோருக்கும் நல்வாழ்வு கிட்டும். சதுர்த்தி தினத்தில் அறுகு, வன்னி பத்திரங்களால் வழிபாடு செய்து நன்மையைத் தரும்.

விநாயகப் பெருமானுக்குரிய விரதங்களிலே ஒவ்வொரு மாதத்திலும் வரும் வளர்பிறைச் சதுர்த்தியும், விநாயகசஷ்டி ஆகியன முக்கிய விரதங்களாகும். சிறப்பாக ஆவணி மாத வளர் பிறையில் வரும் சதுர்த்தியையே மக்கள் விநாயகசதுர்த்தி எனக் கொண்டாடுகின்றனர்.

வாக்குண்டாம் நல்லமனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது - பூக்கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிக்கையான் பாதம்
தப்பாமற் சார்வார் தமக்கு.

என்று கூறி விநாயகப் பெருமானை தினம் தினம் துதி செய்வோமாக.

திரு.பெ.நாகலிங்கம்
ஆரையம்பதி - 02.

நன்றி: - இக்கட்டுரை வரைவதற்கு தகவல்களையும் அதற்குரிய தகல்களையும் தந்துதவிய வித்தியாபூசணம் சிவாகம சிரோன்மணி பிரம்மஸ்ரீ குமார விக்கினேஸ்வரக் குருக்கள் அவர்களுக்கு எனது மேலான நன்றிகள்.

மட்டக்களப்பு தமிழகத்தில் சமுக உருவாக்கம் உருவாகிய போது அன்று தொடக்கம் இன்று வரை நின்று நிலைக்கும் ஒரு முக்கிய சமுகக் கூறுகளுள் ஒன்றாக செங்குந்தர்களும் காணப்படுகின்றனர்.

செங்குந்தர்கள் யார்? என்ற வினாவிற்கு இம்மலரிலே பல கட்டுரைகளில் பெயரிற்கான காரண காரிய விளக்கங்கள் தரப்பட்டுள்ளன. அதனை விடுத்து மட்டக்களப்பு தமிழகத்திற்கு இச்சமுகத்தினரின் வருகையைப் பற்றிய சிறு அறிமுகக் குறிப்பொன்றை தருவதே நோக்கமாகும்.

இச்சமுகத்தினர் சோழர்களுடைய படைத்தளபதிகளாகவும் படைப்பிரிவுகளிலும் பல பணிகளை ஆற்றி அவர்களுடன் நெருங்கிய உறவுகளைக் கொண்டிருந்த இச் சமுகத்தினர் சோழர்களுடைய ஆட்சிக் காலத்திலேயே சோழர்களின் தேவைகளுக்காக இடப்பெயர்வினை மேற்கொண்டிருக்க வேணடும். அல்லது சோழர்களின் வீழ்ச்சியின் பின் வேறு தேவைகளின் நிமித்தம் இடப்பெயர்வினை மேற்கொண்டிருக்க வேண்டும். இவ்வகையில் இக்கருதுகோள் பற்றிய மூன்று கருத்துக்களைச் சுருக்கமாக நோக்கலாம்.

முதலாவது சோழர்களுடைய படைத்தளபதியாகவும், படை வீரர்களாகவும் விளங்கிய இவர்கள் இலங்கை மீதான சோழப்படையெடுப்பின் போது அவர்களுடனேயே வந்து அவர்கள் திரும்பிச் சென்ற பின் இங்கேயே நிரந்தரமாக தங்கிவிட்டவர்களாக இருக்க வேண்டும். அவ்வாறாயின் இவர்கள் சோழர் ஆட்சியில் தலைநகராக இருந்த பொலநறுவையில் அல்லது அதற்கு மிகக் கிட்டிய தூரத்திலேயே வாழ்ந்திருக்க வேண்டும். மாறாக மட்டக்களப்பிற்கு தெற்கே தான் இவர்களது குடியிருப்புக்கள் காணப்படுகின்றமை முக்கியமானது. யாழ்ப்பாணத்தில் வாழும் செங்குந்தர் நல்லூர் இராசதானியை அண்மித்த இடங்களிலேயே செறிந்து வாழ்கின்றமை குறிப்பிடத்தக்கது.

இவ்வகையில் சோழப்படைகளுடன் வருகைதந்த இவர்களில் பெரும்பாலானோர் சோழநாட்டிற்கு திரும்பிச் செல்ல சிறு தொகையினர் இங்கேயே தங்கி மட்டக்களப்பிற்கு தெற்கே கோட்டைக்கல்லாறு, ஆரையம்பதி, தாமரைக்கேணி ஆகிய இடங்களில் வாழ்ந்து தங்களின் குலத் தொழிலான நெசவையும், வைத்தியம், மாந்திரீகம் போன்றவைகளிலும் ஈடுபட்டிருக்கின்றார்கள்.

இரண்டாவது கல்விச் சக்கரவர்த்தி கம்பன் வேளாளரை சிறப்பித்து “ஏர் எழுவது” பாடியது போல தங்கள் குலத்தவரான கல்விச்சக்கரவர்த்தி, ஒட்டக்கூத்தர் தங்களின் குலப் பெருமையை பற்றிபாட வேண்டும் என செங்குந்த குல தலைவர்கள் பலர் ஒட்டக்கூத்தரைக் கேட்ட போது கூத்தர் செங்குந்த குலக் குடும்பத்தின் மூத்த ஆண் வாரிசு ஆயிரத்து எண்பர் பேரின் தலையைத் தர வேண்டும் என்றும் அவ்வாறு தந்தால் தான் பாடுவதாகவும் கூற அதற்குப் பயந்த பல குடும்பங்கள் மூன்று தோணிகளில் ஏறி இலங்கையை நோக்கி வந்ததாகவும் வரும் போது தோணி சுழல் காற்றில் சிக்கி ஒன்று யாழ்ப்பாணத்திலும், மற்றையது முல்லைத்தீவிற்கும், மூன்றாவது மட்டக்களப்பில் கோட்டைக் கல்லாற்றிற்கும் வந்து சேர்ந்ததாகவும் கூறுவர். அந்த மூன்று இடங்களிலும் இன்றும் செங்குந்தர் வாழ்வதனைக் காணலாம்.

இந்தியாவில் வாழ்ந்த ஆயிரத்தெண்பர் பேரின் தலையைக் கொடுக்க ஒட்டக்கூத்தர் அதனை காளிகோயில் முன்றலில் ஈட்டி முனையில் குத்தி “ஈட்டி எழுபது” பாடியதும் பின் “எழுப்பெழுவது” பாடி அவர்களின் தலையை மீண்டும் உடலுடன் ஒட்டி உயிரெழுப்பினார் என்றும் வரலாற்றுக் கதை ஒன்று உண்டு. இதன் காரணமாக தமிழகத்து செங்குந்தருக்கும் மட்டக்களப்பு செங்குந்தருக்கும் நீண்ட காலமாக திருமண உறவுகள் நிகழவில்லை என்றும் அறிய முடிகிறது.

கோட்டைக் கல்லாற்றில் குடியேறியவர்களை காலப் போக்கில் பஞ்சம், நோய் நொடிகளுக்கும் நகரமயமாக்கலுக்கும் உட்பட்டு அங்கிருந்து இடம் பெயர்ந்து ஆரையம்பதி, தாமரைக்கேணி ஆகிய இடங்களில் குடிபெயர்ந்தவர்களாவர். இவ்விரு கருத்துக்களுமே நீணட காலமாக இங்கு செங்குந்தர் மத்தியில் நிலைத்திருக்கின்ற கருத்துக்களாகும்.

எனினும் அண்மைக்காலமாக ஒரு புதிய கருத்தும் முன்வைக்கப்பகின்றது. மட்டக்களப்பிற்கு சோழ இளவரசி சீர்பாத தேவியின் வருகையோடும் செட்டி, ஐயங்கார் முதலி என்ற சாதிப் பட்ட பெயர்களுடன் பலர் வந்து அவர்கள் அனைவரும் இணைந்து சீர்பாத சமுகம் என்ற ஒன்று உருவாகியமை குறிப்பிடப்படுகின்றது.

மட்டக்களப்பில் முக்குவ சமூகம் கலிங்க இளவரசி உலகநாச்சியின் பெயரில் ஒரு குடி தோற்றம் பெற்றது போல சோழ இளவரசி சீர்பாத தேவியின் பேரில் சீர்பாத சமுகம் தோன்றியிருக்கலாம் என்பது சமுக ரீதியில் ஏற்றுக் கொள்ளத்தக்கது. இவ்வாறு சீர்பாத தேவியுடன் வந்த கண்ணப்ப முதலியின் பரம்பரையினராகவே இங்குள்ள செங்குந்த முதலி இருக்க வேண்டுமென சிவராம் குறிப்பிடுகின்றார்.

செங்குந்தருக்கு சோழ அரசர்களே முதலில் பட்டத்தை வழங்கியதுடன் அவர்களுக்கு மிகவும் விசுவாசமானவர்களான செங்குந்தர்கள் இருந்திருக்கின்றார்கள் என்பதும் கூறப்படுகின்றது. அவ்வகையில் சோழ இளவரசியுடன் வந்திருக்கலாம் என்பதற்கான வேறு ஆதாரங்களோ தொடர்புகளோ இதுவரை ஈழத்திலும் சரி தமிழகத்திலும் சரி கிடைக்கவில்லை என்பதுடன் தற்போது வரும் பெரும்பாலான செங்குந்த குல பெரியவர்கள் இக்கருத்துடன் உடன்பட மறுக்கின்றனர்.

எவ்வாறாயினும் பல கருத்துக்களினூடே செங்குந்தர்கள் சோழர்களின் ஆட்சிக் காலத்திலேயே வருகை தந்து இன்று வரை நிலைத்து தனித்துவமிக்க சமுகமாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

செங்குந்தர்களின் இருப்பு எனும் போது அவர்கள் குலத் தொழிலே ஆரம்பம் முதலே கைவிடத் தொடங்கி நொத்தாரிஸ் ஆசிரியர்கள் போன்ற அரச தொழில்களில் நாட்டம் செலுத்தி இன்று முற்று முழுதாக கைத் தொழில்களைக் கைவிட்டு கல்வி கற்ற சமுகமாக வாழ்கின்றார்கள் என்பதுடன் இன்றும் கோட்டைக் கல்லாறு , ஆரையம்பதி, தாமரைக்கேணி ஆகிய இடங்களில் வாழ்வதுடன் மூன்று இடங்களிலும் இன்று செங்குந்தர் வீதி என்ற ஒன்று இருப்பதையும் காண்பதுடன் மூவூர் செங்குந்தர்பளுக்குமிடையில் திருமண உறவு உட்பட மிக நெருங்கிய உறவு முறைகள் காணப்படுவதுடன் சகல நிகழ்வுகளிலும் பங்கு கொள்பவர்களாக விளங்குகின்றனர். அத்துடன் அன்று தொடக்கம் இன்றுவரை நீண்டதோர் கல்வி இலக்கிய பாரம்பரியத்தை கொண்டவர்களாகவும் காணப்படுகின்றனர்.

மற்றுமொரு விசேட அம்சம் யாதெனில் தமிழ் நாட்டிலுள்ள செங்குந்தர்கள் மத்தியில் காணப்படும் (5 உபபிரிவுகள்) உட்பிரிவுகளாகவோ, மட்டக்களப்பில் ஏனைய சமூகங்கள் மத்தியிலுள்ள குடி முறைமைகளாகவோ இவர்கள் மத்தியில் காணப்படாமல் ஒரே குலமாக செங்குந்தர் முதலிகள் அல்லது கைக்கோளர்கள் என்ற ஒரு குழுவாகவே வாழ்கின்றமை முக்கியமானது.

ஆனால் ஒப்பீட்டு ரீதியில் இச்சமுகமானது அன்றிலிருந்து இன்று வரை சனத் தொகை உட்பட சகல துறைகளிலும், விடயங்களிலும் வீழ்ச்சியினை நோக்கி செல்வதனை மிக வருத்தத்துடன் அவதானிக்கலாம். மீண்டும் பீனிக்ஸ் பறவை போல இவர்கள் சாதி உணர்வுகளுக்கு அப்பால் சமுக விழிப்புக்காக எழுச்சி கொள்ள வேண்டும் என்பதே அனைவரினதும் அவா.

## உசாத்துணை நூல்


1. செங்குந்தர் பிரபந்த திரட்டு
2. தேஷ்டனின் குறிப்பு
3. வ.சந்திரசேகரின் குறிப்புக்கள்
4. தமிழ்மணி விவேகாநந்த முதலியாரின் குறிப்புக்கள்
5. மட்டக்களப்பு வரலாறு அறிமுகம் - வெல்லவூர் கோபால்
6. மட்டக்களப்பு தமிழகம் - வி.சி.கந்தையா
7. சீர்பாதகுல வரலாறு - அருள் செல்வநாயகம்
8. டி.சிவராமின் கட்டுரை



*ச.மணிசேகரன் (ஆசிரியர்)*
செயலாளர்
ஸ்ரீ திருநீலகண்ட விநாயகர் ஆலயம்

## கும்பாபிஷேக முறைகளும் விளக்கங்களும்

அனாதி மலமுத்த சித்துருவாகிய பரம் பொருள் கற்பனைக் கடந்த சோதியாகினும் அனாதிமல பந்துக்களாகிய ஆன்மாக்கள். இறைவனுடைய உருவத்திருமேனியைக் நோக்கி வழிபட்டு மோட்சமடைய ஆலயத்தில் விக்கிரகங்களில் கருணையையே உருவாகும் படி பிரார்த்தித்து அபிஷேகித்தலே கும்பாபிஷேகம் ஆகும். கும்பாபிஷேகம் என்பது குடமுழுக்கு, குடநன்னீராட்டு விழா என்றும் சொல்வார்கள். அது பிரதிஷ்டை என்றும் கூறப்படும். இது நான்கு முறைகளில் நடைபெறுகின்றது.

1) ஆவர்த்தம் 2) புனராவர்த்தம்
3) அனாவர்த்தம் 4) அந்தரீதம்

இதன்படி ஆகம முறைப்படி கும்பாபிஷேகம் செய்யப்படுகின்ற போது பல கிரியைகள் இடம் பெறுகின்றது. அக்கிரிகைகள் பல தத்துவக் கருத்துக்களை உணர்த்தி நிற்கின்றதை நாம் காணக் கூடியதாக உள்ளது. அந்த வகையில் எமது ஆலய கும்பாபிஷேக நிகழ்வில் பல கிரியைகள் இடம்பெற்றன. அக்கிரியைகளின் விளக்கங்களினை விளக்கமாகக் கூறாவிட்டாலும் ஓரளவு சுருக்கமாக அறிய வேண்டியது நமது கடமையாகும்.

### *கிரியைகள்*

<u>ஆவர்த்தம்</u> :-
புதிதான ஓர் இடத்தில் திருவுருவம் வைத்துப் பாலப்பிரதிஷ்டை செய்து பூசித்துப் புதிதாகக் கோவில் கட்டி பாலாலய மூர்த்தியைக் கும்பத்தில் எடுத்து பின்னர் மூலஸ்தானத்தில் இருக்கும் மூர்த்தியில் சேர்த்து அபிஷேகம் செய்வதாகும்.

<u>அனாவர்த்தம்</u> :-
வெகு காலத்திற்கு முன் கோயில் கட்டி பூசையில்லாமல் அழிய விட்டும் சீர் குலைந்தும் இருந்தவற்றை முன்போல் அவைகளைத் திருத்தி ஆலயம் கற்பித்து கும்பாபிஷேகம் செய்தலாகும்.

<u>புனராவர்த்தம்</u> :-
கர்ப்பக்கிரகம், விமானம், பிரகாரம், கோபுரம், பலிபீடம் முதலியவைகளில் பழுது ஏற்பட்டாலும், அட்டபந்தனத்தில் பழுது உண்டானாலும், விமானத்தில் உள்ள விக்கிரகங்களில் பழுது நிகழ்ந்தாலும், வர்ணம் அழிந்து இருந்தாலும், பாலாலயம் செய்து ஆலயத்தைப் புதுப்பித்து மூலஸ்தானத்தில் பிரதிஷ்டை செய்து கும்பாபிஷேகம் செய்தலாகும்.

<u>அந்தரீதம்</u> :-
ஆலயத்தில் சோரன் சண்டாளன் நாய் முதலியன உட்சென்று தீண்டியதன் காரணமாக மூர்த்தியின் பிரத்தியங்கம், உபாங்கம் போன்றவைகளில் ஏதாவது பழுது ஏற்பட்டால் அவைகளைத் திருத்தி உடனே செய்வதாம்.

<u>அனுஞ்ஞை</u> :-
இறைவணக்கம் செய்து சர்வசாதகரிடத்திலும் பரம் பொருளிடத்திலும் தான் குறித்த காலத்திலும் இந்த மகத்துவமான கும்பாபிஷேகத்தை செய்ய உத்தரவு தரவேண்டும் என்று வணங்கி உத்தரவு கேட்பதாகும்.

<u>தனபூஜை</u> :-09
புண்ணிய வசத்தால் கிடைத்த திரவியத்தை பூசை செய்தலாகும்.

திரவிய பாகம் :-

பூசை செய்யும் திரவியத்தை ஒரு பாகம் ஆலய கட்டிட வேலைக்கும், இரண்டாவது பாகம் நித்திய பூசை, மாதாந்த விசேட பூசை உற்சவம், ஆபரணாதிகட்கும், மூன்றாவது பாகத்தை பதினொரு பாகம் செய்தல் வேண்டும். அவையாவன.

| | | |
|---|---|---|
| 1. | யாகம் கட்டுதல் முதலானவற்றிற்கு | - 2 பாகம் |
| 2. | அபிஷேகத் திரவியத்திற்கு | - 1 பாகம் |
| 3. | ஆசாரிய தட்சணை | - 2 பாகம் |
| 4. | மூர்த்திகளுக்கு | - 1 பாகம் |
| 5. | வேதாதி திருமுறைகட்கு | - 1 பாகம் |
| 6. | தானாதிகட்கு | - 1 பாகம் |
| 7. | பிராமண போஜனம், அன்னதானம் | - 1 பாகம் |
| 8. | சிற்பிக்கும், பரிஜனங்கட்கும் | - 1 பாகம் |
| 9. | யாக திரவியங்களுக்கு | - 1 பாகம் |
| | | 11 பாகம் |

மேற்கூறிய பாகமாகப் பிரித்து முறையே செலவு செய்தல் திரவியபாகமாகும்.

ஆசாரியவர்ணம் :-

பிரதான ஆசாரியரையும், சர்வசாதகரையும், மற்றைய ஆசாரியர்களையும் வணங்கி, இத்திரவியத்தைக் கொண்டு மகாகும்பாபிஷேகம் செய்து இளையருளைப் பெற்றுத்தர வேண்டுமென்று எசமான்கள் குருமார்களை வழிபடுதலாகும்.

கணபதி பூஜை :-

எவ்வகையினராயினும் முதலில் விநாயகரை வழிபாடு செய்தல் வேண்டும். செய்யாவிடில் அவர்களின் காரியத்தை இடையூறு செய் என்பது இறைவன் கட்டளை . ஆகவே இங்கு தொடங்கிய மகா கும்பாபிஷேகம் எவ்வித இடையூறும் இன்றி நிறைவேற விநாயகப் பெருமானுக்கு பூசை, அபிஷேகம், ஹோமம் என்பன செய்து முதலில் பிரதான சிவாச்சாரியார் வழிபடுதல்.

கிராம சாந்தி :-

சகலலோக சுகத்துக்கும் பட்டினம், கிராமங்களில் உள்ள அசுர, ராட்சத, பிசாசு, பிரம்மஇராட்சதர்களை திருப்தி செய்து சந்தோசப்படுத்தி கிராம அதிதேவதையான வைரப் பெருமானை பூசித்தலாகும்.

பிரவேசபலி :-

நாம் பிரவேசம் செய்து மகாகும்பாபிஷேகம் செய்யும் இடத்திலுள்ள எட்டுத்திக்குகளிலும் வசிக்கின்ற இயக்கர், இராட்சதர், பிசாசர், பிரம்ம இராட்சதர், பூதர், காளி, சரளி, வைரவர் முதலிய தேவதைகளுக்கு உணவு கொடுத்து எழுப்பி அவர்களை கடல், மலை, வனம், நதி, மயானம் முதலிய இடங்களிற் சென்று சுகமாய் வீற்றிருங்கள். இது சிவன் கட்டளை எனக் கூறித் திருப்திசெய்தலாம். இது மகாகும்பாபிஷேகம், திருவிழா, புதுவீடு குடிபுகுதல் போன்ற காரியங்களிற் செய்ய வேண்டும் என்று ஆகமங்களில் கூறப்பட்டுள்ளது.

திசாஹோமம் :-

நான்கு திக்குகளில் முறையே பாசுபதாஸ்திரம், அஹோராஸ்திரம், பிரத்தியங்கிராஸ்திரம், சிவாஸ்திரம் முதலியவைகளைப் பூசித்துக் காவல் செய்யும்படி கட்டளை இடுதலாம்.

இரட்சோக்கிரஹோமம் :-

அசுர, ராட்சதர்களின் தொல்லை நீங்குவதற்காக மூன்று மேடைகள் அமைத்து நடுவில் கும்பம் வைத்து, அதில் ரட்சோக்கிர தேவதையை வடமாமுகாக்கினிக்குச் சமமாகப் பாவித்து பூசை செய்து அதன் தென்புறத்தில் வெள்ளை வஸ்திரம் இட்டு, தேங்காய் ஒன்று வைத்து

வடக்குப் பக்கத்தில் சிவப்பு வஸ்திரம் வைத்து, அதன் மேல் வாள் ஒன்று வைத்து தேங்காயில் சிவனையும் வாளில் கட்கேசுவரனையும், வாளைச் சுற்றி அசிதாங்க பைரவர், சண்டைபைரவர் முதலிய எண்மரைப் பூசித்து அவர்களுக்குள்ள திரவியங்களாலும் சமித்தாலும் ஹோமம் செய்து சம்யோசித்துக் கும்பஜலத்தை ஆலயத்தைச் சுற்றி தெளித்தலாகும்.

<u>ஆயுஸ்கர்மம்</u> :- குருமார்கள் செய்து கொள்ளும் தசவித ஸ்நானமாகும்.

நவக்கிரகஹோமம் :-
கும்பாபிஷேகத்தால் உலகத்துக்கு அதிக மழையாலும், மழையின்மையாலும், விரோதிகளாலும் , துஷ்டர்களாலும் வரும் துன்பம் நீங்கவும் எல்லாப் பிராணிகளினதும் பயம்,நோய், பிணி, நீங்கவும் சூரியன் முதலிய நவக்கிரகங்களைப் பூசித்து வணங்கிக்ஹோமம் செய்தலாம்.

<u>வாஸ்து சாந்தி</u> :-
பூமியானது அசுத்தாக, ஜடசம்பந்தம் உள்ளதனால் அதை நீக்கிச் சத்பாவம் உண்டாவதற்குச் செய்வது. அசுத்த சொருபமான பூமியை பாலாக்கினியினால் தகித்துப் பின் பூமிக்கு அதிபதியான பிரமாவின் மூச்சுக் காற்றினால் சோதி ரூபமாக்கிச் சுத்தம் செய்வதாகும். நீற்றுப் பூசணிக்காயை பூமியின் வடிவமாகத் தியானித்து, அதன் விதைகளை அண்டங்களாக நினைத்து எல்லாவற்றையும் ஹோமம் செய்து, பின் பூமிக்கு அதிபதியான பிரமாவின் கட்டளையினால் பரிசுத்தமானதாகப் பாவித்தல் வாஸ்து சாந்தியாகும்.

<u>கோபூஜை</u> :- பசுமாடு கன்று கட்டி பூசை செய்தல்.

<u>விற்பிரபோசணம்</u> :-
வேதம் அறிந்த பிராமணர், பிருதுவி முதல் சுத்ததத்துவம் வரையுள்ள எல்லாத் தத்துவங்களையும் சுத்தமாக்குகின்றேன், ஹோமம் செய்கின்றேன். இது நன்கு சுத்தியடையட்டும் என்று சிவாக்கினியில் ஹோமம் செய்கின்ற பாவனையில் போசனம் செய்வித்தலால் அந்த இடம் சுத்தியாகும்.

<u>மிருத்சங்கிரகணம்</u> :-
கிராமத்திற்கு சாந்தியையும் தேசம் நன்மையடையவும் நினைத்து பூமாதேவியைப் பிரார்த்தித்து, இந்தப் பூமி கண்டங்களாகப் பிரிந்து இருப்பதனால் ஒவ்வொரு கண்டத்திற்கும் பூசை செய்து. பிரார்த்தித்து, ஞான யாகம் செய்ய முளையிடுவதற்காக மண்வெட்டியை சிவாஸ்திரமாக பூசித்து, பூமாதேவியின் வயிற்றில் மூன்று அல்லது ஐந்து முறை மண்ணைவெட்டி எடுத்தலாம். மண் எடுத்த தோசம் நீங்க இடத்திற்கு வேறு மண் போட்டுச் சப்தவாரிதி கும்பத்தால் அபிஷேகம் செய்தலாகும்.

<u>அங்குரார்ப்பணம்</u> :-
அங்குரார்ப்பணம் என்பது முளையிடுதலாகும். இந்தப் பூமியானது முன்னர் அமிர்தத்தால் நனைந்து சுத்தமானது. ஆகையால் உலக சேமத்தின் பொருட்டு நெல் முதலிய நவதானியங்களைப் பாலில் ஊறவிட்டு மந்திரம் செபித்து சந்திரனை வணங்கி முளையிடுதலாம்.

<u>ரட்ஷாபந்தனம்</u> :-
காப்புக் கட்டுதல், குழந்தையின் வருத்தம் தீர தாய் மருந்துண்ணுதல் போல உலக சேமத்திற்காக ஆசாரியர்கள் எடுத்த காரியம் செவ்வனே நிறைவேற இடையூறுகள் தடுக்கா வண்ணம் இறைவியின் கர்ப்ப நாடியில் நின்றும் உண்டான நாகராசனைப் பூசித்துக் கையில் கங்கணம் (காப்பு) கட்டுவதாகும்.

இரத்தின நியாசம், நயனோனமீலனம், தானியாதிவாசம், சயனாரோகணம், கிராமப் பிரதட்ணம் இவைகள் யாவும் புதிதான மூர்த்திகளுக்குப் பஞ்சபூத சம்பந்தமான தத்துவங்கள் ஏற்படுவதற்காகச் செய்யப்படும் கிரியைகளாகும். அன்றியும் இறைவன் "இருநிலனாய்த் தீயாகி நீருமாகி இயமானனாய் எறியுங் காற்றுமாகி" என்னும் தேவாரத்திற்கிணங்க இறைவடிவத்தை உண்டு பண்ணும் குறிப்பை உணர்த்துவதுமாகும்.

யாகசாலா தானியாதி ஸ்தாபனம் :-
யாகசாலையில் சப்த தாதுக்கள் மயமான சப்த தானியங்களைப் பரப்புதல்.

சூரியகாந்தி சங்கிரகணம் :-
யாகத்திற்கு தேவையான ஞானாக்கினிக்கு சூரியகாந்தத்தில் இருந்து அக்கினியை எடுத்தல்.

ருத்விக் சாதகாதி வருணம் :-
பிரதான குண்டத்தைத் தவிர ஏனைய குண்டங்களுக்கும் ஏனைய மூர்த்திகளுக்கும் ஏற்ற குருமார்களையும் சாதகர்களையும் உபசாதகர்களையும் நியமனம் செய்தல்.

கடஸ்தாபனம் :-
குடத்தைச் சுத்தமாக்கிச் சப்ததாதுக்களும் ஜீவனும் உண்டாவதற்காகக் கும்பத்தின் அடியில் ஆன்மதத்துவத்தையும் பிரம்மாவையும் கும்ப நடுவில் வித்தியா தத்துவத்தையும் விஷ்னுவையும் கும்ப நுனியில் சிவதத்துவத்தையும் ருத்திரனையும், கும்பத்தில் நவ சக்திகளையும் மூவினை நூலிற் சரஸ்வதி, இலக்குமி, ரௌத்திரி, ஆகியோரையும் கும்பத்திற்கு பிடிக்கப்படும் தூபத்தில் அர்ச்சினி சக்தியையும் தீர்த்தத்தில் கங்கை முதலிய புண்ணிய நதிகளையும் , மத்தியில் வருணனையும் நவரத்தினங்களில் வாமை முதலிய நவ சக்திகளையும் தங்கத் தாமரை பூவில் சதாசிவத்தையும், வாசனைத் திரவியங்களில் சப்தமாதுக்களையும்பூசித்து குடத்தில் இட்டு மாவிலையைச் சடையாகவும் தேங்காயைச் சிரசாகவும் கூர்ச்சத்தை முடியாகவும், வஸ்திரத்தை தோலாகவும் உபவீதத்தைப் பஞ்சப் பிரம மந்திரமாகவும் பூசிப்பதால் கும்பமானது சர்வதேவதா சொருபமாகின்றது என்று ஆகமங்கள் கூறுகின்றது.

யாகசாலைப் பூசை ஹோமம் பூர்ணாகுதி :-
யாகசாலை கலாமயமாக விளங்கும் ஒன்று. நிவர்த்தி முதலிய நான்கு கலைகளும் நான்கு பக்க நிலைகளாகவும் இதற்கு நான்கு கலசமும் இவைகளுக்கு இரு புறங்களிலும் நந்தி முதலிய எண்மர் வாயில் காப்பாளர்களாகவும் கிழக்கு முதல் எட்டுத் திக்குகளிலும் கீழ், மேல் ஆகிய பத்து திசைகள் இந்திரன் முதல் விஷ்னு ஈறாக தசலோக பாலகர்களும் அக்கினிக்கு வடக்கில் சிவ சூரியனும், நிருதிக்கு கிழக்கில் யாக பலனைத் தரும் வாஸ்து பிரமனும் வாயுவுக்கு தெற்கில் மண்டப ரூபமாகிய மகாலட்சுமியும் வாயுவின் வலப் புறத்தில் யாகத்தில் ஏற்படும் விக்கினங்களை நீக்கும் விநாயகரும் ஈசானத்திற்கு மேற்கில் எதையும் உத்தரவு கேட்டுச் செய்ய சதாசிவம் முதல் சப்தகுரு மூர்த்திகளையும் பூசிப்பதற்கு இருபத்தியேழு கலசங்கள் வைத்து ஞானவால் ஏந்தியபடி யாகேஸ்வரன், யாகேஸ்வரியையும் கலசத்தில் அமைத்து பஞ்சகுண்டங்களோடு விளங்குகின்ற மையால் யாகசாலை கலாமயமாகும்.

கும்பாகர்ஷணம் ( கலாகர்ஷணம்) :-
அலங்கரிக்கப்பட்ட கும்பத்தை இறைவன் சந்நிதியில் ஸ்தாபித்து இறைவனை பூஜித்து கும்பத்தில் வந்து சேரும்படி செய்தல்.

பதவின்யாசம் :-
மூலஸ்தானத்து இறைவனை ஸ்தாபிக்க ஏற்படுத்தும் இடத்தைக் குறித்தல். இது ஆகம விதிப்படி சிவாச்சாரியர்களும் சிற்ப சாஸ்திரியும் சேர்ந்து சிவன், அம்பாள், விநாயகர் முதலிய மூர்த்திகளைப் பிரதிஷ்டை செய்வதற்குரிய இடத்தை வகுத்தலாகும்.

ஸ்தூபிஸ்தாபனம் :-
அதிஸ்டானம் முதல் ஸ்தூபிவரியந்தமும் முறையே ஆறு அத்துவாக்களும் அமைய தூலலிங்கமாக அமைந்த பத்மத்தின் மேல் ஸ்தூபியை வைத்தலாகும்.

தீபஸ்தாபனம் :-
இறைவன் சோதிவடிவானவன் அவனை சோதி வடிவமாக வணங்குவதற்காக வைக்கப்படுவது தீபஸ்தானமாகும்.

**இரத்தினஸ்தாபனம் :-**
நவரெத்தினம், நவலோகம், முதலிய வஸ்துக்களை ஆரோக்கிய, வீரிய, பிரபாசத்தியமான திரவியங்களைப் பீடத்தின் மேல் இட்டு, இந்திராதி லோக பாலகர்களைப் பூஜித்துப் பத்மாசனம் வரை பூசித்தல் இரத்தினஸ்தாபனம் ஆகும்.

**இயந்திரஸ்தாபனம் :-**
கோடுகளும், கோணங்களும் இறைவனின் மூலமந்திரங்களும் எழுதிப் பூசிக்கப்பட்ட யந்திரத்தை உரிய இடத்தில் வைத்தலாகும். இது இறைவனுக்கு அருள் சக்தியை ஊட்டுவதாம் (இது லைட்டுக்கு பற்றரி போல் எனலாம்.)

**பிம்பஸ்தாபனம் :-** மூர்த்திகளை முறைப்படி ஆசனத்தில் வைத்தலாகும்.

**அஷ்டபந்தனம் :-**
அஷ்டபந்தனம் என்பது இறைவனின் அம்சமாகிய அஷ்ட மூர்த்திகளின் அருள்பெற்று, அஷ்ட சித்திகளும் சித்தியடைந்த நிலையில் ஞானகிரியா சக்தியாகும். சங்கநிதி, பதுமநிதி இரண்டும் தோன்றி, பரம்பொருளின் ஆணையால் சாம்பிராட்சிய லட்சுமியும் அதிலிருந்து பயன்தரும் வகையில் தனலெட்சுமி, தான்யலட்சுமி, வித்தியாலெட்சுமி, கீர்த்தி லட்சுமி, சௌபாக்கியலட்சுமி, ஜெயலட்சுமி, சந்தானலெட்சுமி ஈறாக அஷ்டலட்சுமிகளும் உருக்கொண்டு உயிர்களை உய்விக்கும் வண்ணம் உள்ள கதிகளை தருவது அஷ்டபந்தன சமர்ப்பணமாம்.

**சொர்ணபந்தனம் :-** தங்கத்தால் செய்யப்பட்டு இறைவனுக்கு அளிப்பது.

**தைலாப்பியங்கம் :-**
லிங்கத்திற்கு தைலத்தினால் (எண்ணெய்) ஆசாரியர்களும் , சிற்பசாஸ்திரியாரும் அன்பர்களும் சாத்துதல், அன்பர்கள் அடியார்கள், தங்களிடத்திலுள்ள ஆணவமல சம்பந்தத்தாலும் திரிகரணங்களாலும் ஏற்படும் குற்றம் நீங்கி சுத்தமடைவதன் பொருட்டு எள்ளில் இருந்து எடுக்கப்பட்ட சுத்தமான நல்லெண்ணையை சுவர்ணத்தினால் தொட்டு இறைவனின் சிரசு, கண்கள், மூக்கு, செவி, தொப்புள், பாதம் முதலிய எல்லா அங்கங்களிலும் குளிரும்படி நிறைய சாத்துவதாம்.

**பிம்ம சுத்தி :-**
அடியார்கள் முதலானோரால் பரிசிக்கப்பட்ட தோச நீக்கத்திற்காகவும், உஷ்ணசாந்திக்காகவும், பிம்பத்திற்கு சுத்தம் செய்வதற்கு உதகம்கந்தம், புஸ்பம், பத்திரம், காசாயம், மிருத்தி, பீஜம், பல்லவம், இரத்தினம், லோகம், தாது, அஸ்திரம், ஓசதி, கவ்வியம், குசம், சிருங்கம், முதலிய பதினாறு வகையான திரவியங்கள் நிரப்பிய கலசங்களைப் பூசித்து, ஓமம் செய்து, பின்னர் மூர்த்திக்கு முறைப்படி அபிஷேகம் செய்து அலங்கரித்துப் பூசித்தலாகும்.

**பிம்ப ரக்ஷாபந்தனம் :-** கும்பாபிஷேகம் நிமித்தம் மூர்த்திகளுக்கு காப்பு கட்டுதலாகும்.

**பூர்வசந்தானம் :-**
மூர்த்திக்குப் பக்கத்தில் ஆசாரியர். சாதகர், உட்கார்ந்து ஆதார சக்தி முதல் பஞ்சமாலரணம் வரை பூசித்து, கலை முதல் மந்திரம் ஈறாகச் சாங்கோபமாக ஆலய பேதங்களாய் பிம்பத்திற்கு தர்ப்பை நுனியால் நியாசம் செய்தலாகும்.

**விசேட திரவிய ஹோமம் :-**
இது இறைவனை அக்கினி வடிவில் பூசித்தலாகும். சகலவிதமான ஹோமத்திரவங்களையும் சிவமயமாக்கி அதற்குரிய மந்திரங்களோடு பஞ்சப்பிரம மந்திரமும் வியதகிரியும் சேர்த்துச் சொல்லி அக்கினியில் ஹோமம் செய்தலாகும்.

**ஸ்பரிசாகுதி :-**
யாகத்திலுள்ள மூர்த்தி, மூர்த்தீஸ்வரன், மூர்த்தீஸ்வரி, மந்திரம் ஆகியவைகளைப் பூசித்தும் ஹோமம் செய்த முறைப்படி மூலமூர்த்தியிடம் சென்று அந்தந்த ஸ்தானங்களில் முறையே தொடர்புபடுத்தலாகும்.

**<u>ஸ்தோத்திர வந்தனம்</u> :-**
**சிவாச்சாரியார்கள் மூர்த்திபர்கள் செய்த தொடர்புகளில் கூடுதல் குறைவு ஏற்பட்டால் அவைகளைக் கருணையினால் பூர்த்தியாக்கி அருள் செய்ய வேண்டும் என்று பிரார்த்தித்தலாகும்.**

**<u>ஆசாரிய பூஜை</u> :-**
**குருமாருக்கும் சர்வசாதகர்களுக்கும் உடை, உத்தரீயம், உருத்திராட்சம், வீபூதிப்பை முதலிய உபசாரங்கள் கொடுத்து மகிழ்வித்தலாகும்.**
**அக்னிசம்யோஜனம் :-**
**பிரதான குண்டத்தில் பூசை செய்து எடுத்த அக்கினி மூர்த்தி முதலானவர்களுக்குப் பிரதான சிவாச்சாரியார் மூலம் குண்டலத்தில் சேர்த்தலாகும்.**

**<u>பூரணாகுதி</u> :- ஹோமத்தைப் பூர்த்தி செய்வதற்காக செய்யப்படம் கிரியை.**

**<u>தீபாரதனை</u> :- இது சோடசோபசார விஷேட பூசையாகும்.**

**<u>வேதகோசம்</u> :- வடமொழி வேதம், தமிழ் வேதம் என்பன ஓதல்.**
**<u>ஸ்தூபி கும்பாபிஷேகம்</u> :-**
**அர்ச்சகர், ஸ்தானிகர் ஒருவரை நந்திகணத்தலைவராக பூசைசெய்து அவருக்கு வேண்டிய உபசாரங்கள் செய்து அலங்கரித்து அவரது சிரசின் மீது பிரதான கும்பத்தை வைத்து சர்வசாதகர், பிரதானகுரு, மூர்த்திபர்கள் முதலியோர் கும்பத்தைக் கொண்டு எஜமான்கள் , பக்தஜனங்கள் சூழ்நது புஸ்பாஞ்சலியோடும், தேவாரம், தோத்திரம் சங்கு, மங்கள வாத்தியம், பேரிகை, மணி, வாத்திய கோசங்களுடன் சிவநாமபஜனை செய்து பக்தியுடன் மெதுவாக வீதிவலம் வந்து மூலாலயம் சென்று ஆசனத்தின் மீது கும்பங்களை வைத்து கும்பத்திற்கும் மூர்த்திக்கும் நாடி சந்தானம் செய்து தொடர்பேற்படுத்தி, உரிய முகூர்த்தத்தில் இறைவனை ஆவாகனம் செய்து மூலமந்திரம் உச்சரித்துப் பத மந்திரத்துடன் பக்தர்கள் “ஹரஹர” என்ற சத்தம் முழங்க வேத சிவாகம், தேவார, புராண திருமுறைகளைப் பக்தர்கள் ஓத சகல வாத்திய கோசங்களும் ஒலிக்க மகா கும்பாபிஷேகத்தை செய்து எஜமான்களும் சகல ஜீவராசிகளும் உய்வடையப் பிரார்த்தித்து செய்வதே மகாகும்பாபிஷேகமாகும். கும்பாபிஷேகம் செய்து மகாநைவேத்திய உபசாரம் செய்து அகண்ட தீபம் வைத்துப் பிரார்த்தித்த பின்னர் தேவர்களின் பூசைக்காக மூன்றே முக்கால் நாழிகைக்கு கதவைச் சாத்தி வைத்தல்.**

**<u>தசதர்சனம்</u> :-**
**கதவைத்திறந்து பசு, ஆசாரியர், வேதபாதகர், கண்ணாடி, பூரணகும்பம், தீபம், கன்னிகை, சன்னியாசி சுமங்கலி, எஜமான், பக்தசனம் முதலியோரைச் சகலவாத்திய உபசாரங்களுடன் தனித்தனியே தரிசிக்கச் செய்தல்.**

**<u>பிராயச்சித்த ஆகுதி</u> :- இது யாகத்தில் செய்யப்படும்.**

**<u>ஆசார்ய உற்சவம்</u> :- குரு, சிவாச்சாரியார்களை எஜமான் பக்தஜனங்கள் வழிபடுதல்.**

**<u>எஜமான் அபிஷேகம்</u> :- எஜமானுக்கு கும்பாபிஷேகப் பலனை ஒப்புவித்தல்.**

**இவை யாவும் ஸ்ரீ திருநீலகண்ட விநாயகப் பெருமான் மகாகும்பாபிஷேகத்தின் போது இடம்பெற்ற கிரியைகளின் போது பார்க்கப்பட்டதும் பிரதிஸ்டா பிரதமகுரு. பிரம்மஸ்ரீ விக்னேஸ்வரக் குருக்கள், சர்வசாதகாசிரியர், பிரம்மஸ்ரீ சௌந்தரராஜன் குருக்கள் ஆகியோரால் அவ்வப் போது ஆற்றிய பிரசங்கத்தின் போது அறியப்பட்டதுமாகும். இன்னும் இதைப் பற்றிய விளக்க விரிவுகள் அநேகம் உண்டு. அவைகளை இன்னும் அறிந்தோர் வாயிலாகக் கேட்டுப் பேரானந்தப் பெருவாழ்வு அடைவோமாக.**

**ஸ்ரீ திருநீலகண்ட விநாயகர் பாதபங்கஜங்கள் நமஸ்து.**

**திரு.மா.யசோதரன்**
**உப செயலாளர்,**
**ஸ்ரீ திருநீலகண்ட விநாயகர் ஆலயம்.**

# விநாயகர் சதுர்த்தி விரதம்

எல்லாம் வல்ல பரம்பொருளை வழிபடும் மார்க்கங்கள் ஆறு எனப்படுகின்றது. அவற்றை ஆறு சமயங்கள் என்றும் குறிப்பிடுவர். வடமொழியிலே "ஷண்" மதங்கள் என கூறுகின்றனர். இறைவனை நாம் எந்தெந்த தோற்றங்களில் வழிபடுகின்றோமோ அந்தந்த தோற்றங்களிலே அவன் ஒளிர்பவனாவான். இந்த உண்மையின் அடிப்படையில் வளர்ந்தவைதான் ஷண் மதங்களாகும் இந்த ஆறுமதங்களை அனுசரிக்கும் முறைகளை எல்லாம் திரட்டி ஆதிசங்கரர் (பகவத் பாதாள்) தொகுத்துப் பகுத்த அமைப்புக்கள் தான் இவை அதனால் அவரை "ஷண்மத ஸ்தாபனாச்சாரியார்" என அழைத்தனர்.

எல்லையற்ற பரம்பொருளை நம் அறிவின் எல்லைக்குள் கட்டுப்படுத்தினார் சங்கரர். விநாயகப்பொருமான், சிவபெருமான், முருகன், விஷ்ணு, அம்பாள், சூரியன், ஆகிய ஆறு தெய்வங்களை வழிபடச்செய்தார், ஒவ்வொரு மூர்த்திக்கும் வழிபாட்டு முறைகளை வகுத்தார் "ஓம்" என்னும் பிரணவத்தின் உட்பொருள் விநாயகரையே குறித்து நிற்கின்றது ஆகவே "ஓம்" என்ற பிரணவச்சொல்லின் உருவமாக நாம் வழிபடுவது கணபதியையே ஆகும். ஆகவே எமது சைவசமயத்தின் முழுமுதற் கடவுளாக நாம் வழிபடுவது விநாயகரையே ஆகும்.

எந்த கருமத்தைச் செய்ய தொடங்கும் முன்பும் நாம் விநாயகரையே வழிபடுகின்றோம். இத்தகைய பெருமையுடைய விநாயகருக்கு பல விரதங்கள் நோற்கப்படுகின்றன. அவற்றுள் "விநாயகர் சதுர்த்தி" விரதமே மிகவும் சிறப்பிற்குரியதாக விளங்குகின்றது. விநாயகர் கோயில்களிலே இவ்விரதம் மிக சிறப்பாக நடைபெறும். விநாயகப் பெருமான் உற்பவமான தினமே "சதுர்த்தி" திருநாள் என்று கூறப்படுகின்றது மேலும் "சதுர்த்தி" சிறப்புப் பெற்ற வரலாற்றை பின்வருமாறு கூறுவர். விநாயகப் பெருமானை பார்த்து ஏளனமாக சிரித்த சந்திரனை அவர் ஒளி குன்றிப் போகும் படி சபித்தார். பின்னர் அதனால் மனம் வருந்திய சந்திரன் பெருமானைப்பணிந்தார். பின்னர் விநாயகர் மனமிரங்கி ஒவ்வொரு மாதத்தின் முன்பக்க சதுர்த்தியில் நோன்பிருந்து நம்மையும், சந்திரனையும் வழிபடுவோர் சர்வசித்திகளையும் பெறுவர் என்றருளினார். மேலும் ஆவணிச்சதுர்த்தியில் மட்டும் சந்திரன் தோஷமுடையவனாவான் என்றும் அவனை எவரும் பார்க்காதிருப்பார்களாக என்னும் அருளினார். மேலும் சந்திரனின் ஒரு கலையையுஞ் சூடி "பாலச்சந்திரன்" என்றும் பெயரையும் பெருமான் பெற்றார். சந்திரன் விநாயகர் தமக்கு இவ்வாறு அருள் புரிந்த தலமான கங்காநதிக்கு தென்கரையில் சர்வசித்தி தலத்திற்கு பாலச்சந்திர விநாயகரை நிறுவி வழிபாடு செய்தான். இந்தவகையில் ஒவ்வவொரு மாதமும் "பூர்வபக்ஷ" சதுர்த்தி விநாயகருக்குரிய விரத நாளாக அமைகின்றது மாதந்தோறும் "சதுர்த்தி" விரதம் இருக்க விரும்புபவர்கள் ஆவணிச்சதுர்த்தியிலே சங்கற்பத்தோடு தொடங்க வேண்டும். இருபத்தியொரு வருடங்கள் விரதமிருப்பது சிறந்தது எனினும் ஏழுவருடங்களுக்கு இதனை அனுஷ்டிக்கலாம் என்றும் மேலும் அவ்விரதத்தை இருபத்தியொரு சதுர்த்திகள் அனுஷ்டித்து ஆவணிச் சதுர்த்தியில் அவ்விரதத்தை நிறைவு செய்யலாம் எனவும் விரத சாஷ்த்திர நூல்கள் கூறுகின்றன.

விநாயக சதுர்த்திகளுள் "சங்கடஹர" சதுர்த்தியும் விசேஷமானது இச் சதுர்த்தி விரதம் நோய், கடன், சிறைவாசம், முதலிய துன்பங்களிலிருந்து விடுபடுவதற்காக பின்பற்றப்படுகின்றது. இச் "சங்கடஹர" சதுர்த்தி "ஹிருண பக்ச" சதுர்த்தியிலே நோற்கப்படுகின்றது சிறப்பாக மாசிமாதம் தேய்பிறையிற் செவ்வாய்க் கிழமையோடு வரும் சதுர்த்தியிலேயே தொடங்கி ஒரு வருட காலம் முறைப்படி அனுஷ்டிக்கப்படும் விரதமாகும். இவ்விரதத்தை தொடங்கும் நாளில் சூரியன் உதிக்க ஐந்து நாளிகைக்கு முன் எழுந்து நீராடி முறைப்படி விநாயப்பொருமானை வழிபட வேண்டும் இவ்விரதத்தின் போது "உபவாசம்" இருப்பது மிகவும் சிறந்த ஒன்றாகும். இவ்வேளைகளில் விநாயக புராணம், தோத்திரங்கள் பாடுவது நன்மையளிக்கும். அன்று இரவு உறக்கத்தை தவிர்ப்பதும் அவசியமாகின்றது.

இச் "சங்கடஹர" சதுர்த்தி விரதத்தை கூறும்போது ஆவணிமாத "கிருக்ஷ்ணபக்க்ஷ" சதுர்த்தி சிறப்பாக கூறப்படுகின்றது. சங்கக்ஷ்டஹர சதுர்த்தியை "கிருதரீரயன" நோற்றுத் "கார்த்த வீரியன்" எனும் மகனைப்பெற்றான். சந்திரனும் இவ்விரதத்தை அனுக்ஷ்டித்து "க்ஷயரோகம" நீங்கப்பெற்றான். புருசுண்டி எனும்முனிவரும் இவ்விரதத்தை மேற்கொண்டு தனது பிதிர் தேவதைகளை சுவர்க்கத்திற்கு அனுப்பினார். இவ்விரதத்தை கிருக்ஷ்ணர் வனவாசம் செய்த தருமருக்கு எடுத்துக்கூறியதாக "மகாபாரதம" கூறுகின்றது. இவ்விரதத்தைசெவ்வாய் முதன்முதலில் அனுக்ஷ்டித்து பேறு பெற்றதால் இவ்விரதம் "அங்காரக" சதுர்த்தி என்றும் கூறப்படுகின்றது.

சதுர்த்தி எனும்போது சிறப்பாக ஆவணிமாத வளர்பிறை சதுர்த்தி மிகச் சிறப்பானதாகும். ஒவ்வொரு மாதமும் வருகின்ற சதுர்த்தியை அனுக்ஷ்டிக்கமுடியாதவர்கள் விசேடமானஆவணிச்சதுர்த்தியைஅனுக்ஷ்டித்துவிநாயகரின் அருளைப் பெறலாம். கந்தபுராணத்தில் ஆவணிமாத சதுர்த்தி விரதம் மிகச்சிறப்பித்து கூறப்படுகின்றது. விநாயகபுராணம் இவ்விரதத்தை ஆவணி "சுக்லபக்க்ஷ" சதுர்த்தியில் தொடங்கி புரட்டாதி மாத "சுக்லபக்" சதுர்த்தி வரையில் அனுக்ஷ்டிக்க வேண்டும் என்று கூறுகின்றது. ஆவணிமாத வளர்பிறை சதுர்த்தி அன்று அதிகாலையில் எழுந்து காலைக் கடன்களை முடித்து விநாயகப்பெருமானை வழிபடல் வேண்டும். அன்று மதியம் ஒரு பொழுது மட்டும் உணவு உண்ணலாம். இரவு வேளைகளிலே உணவு உண்ணாமல் இருக்க முடியாதவர்கள். பால் பழம் பலகாரம் என்பவற்றை உண்ணலாம்.

உணவிலே நல்லெண்ணை சேர்க்கக் கூடாது. என்பது விதிமுறையாகும். சிறப்பாக இவ்விரதத்தை அனுக்ஷ்டிக்க விரும்புவோர் வீட்டின் ஈசானதிசையிலே சாணத்தால் மெழுகி வெள்ளை கட்டி தயார்செய்யப்பட்ட ஓரிடத்திலோ அல்லது சுவாமி அறையில் மாவிலை தோரணம் முதலியவற்றால் அலங்கரிக்கப்பட்ட இடத்திலோ ஒரு பூசகர் மூலம் சித்திகணபதி வித்தியாகணபதி மோக்க்ஷகணபதி மகாகணபதி ஆகிய மூர்த்திகளை 5 கும்பங்களிலே முறைப்படி பிரதிக்ஷ்டை செய்து இப்பூசையைத் தொடங்கலாம். சங்கற்பம் செய்து பிராமண அனுக்ஞை விக்னேஸ்வர பூஜை புண்ணியா வாசனம் பஞ்சகவ்யபூஜை முதலிய கிரியைகளையும் ஆவாஹனம் முதலிய பூசைகளையும் தீபாராதனை முதலியவற்றையும் செய்து வழிபாடு செய்யலாம். பூசைநிவேதனங்களாக அறுசுவை உணவு தேங்காய் வெற்றிலை பாக்கு பழம் என்பவற்றை நிவேதிக்கலாம் என்று புராணநூல்கள் கூறுகின்றன. நாவற்பழம் விளாம்பழம் வெள்ளரிபழம் கரும்பு என்பனவும் அப்பம் மோதகம் என்பனவும் விநாயகருக்கு பிரியமான வைகளாகும். இப்பொருட்கள் ஒவ்வொன்றிலும் இருபத்து ஒன்று என்ற எண்ணிக்கையில் வைத்த வழிபடுதல் வேண்டும்.

விநாயகசதுர்த்தி பூசையில் இருபத்தியொரு பத்திரம் இருபத்தியொருபுக்ஷ்பம் இருபத்தியொருஅறுகம்புல் என்றவாறு தனித்தனியே அர்ச்சனை செய்து வழிபடுதல் சிறப்பிற்குரியதாகும. பத்திரபூசை புக்ஷ்பபூசை முதலியவற்றுக்கு தேவையான பத்திரங்கள் புக்ஷ்பங்கள் நாமங்கள் என்பவற்றை பத்ததிகள் கூறுகின்றன. அவற்றிலே பத்ததிக்குபத்தத வேறுபடுகின்றது. இருபத்தியொரு பத்திரங்களைக் கூறும் செய்யுள் வருமாறு.

மேதகு மாசிப்பச்சை நறுங்கையாந்தகரை
வில்வமுட நூமத்தை நொச்சி நாயுருவி
ஏதமில் கத்தரி வன்னி அலரி காட்டாத்தி
எருக்கு மருதுடன் மால்பேரியம்பு காந்தி
மாதுளையே உயர் தேவதாருமரு நெல்லி
மன்னுசிறு சண்பகமே கெந்தனி பாதிரியே
ஓதரிய அறுகிவையோர் இருபத்து ஒன்றும்
உயர் விநாயகசதுர்த்தி குரைத்திடுபத்திரமே

ஆவணி சுக்லபக்ஷ சதுர்த்தி தொடங்கி புரட்டாதிமாத சுக்லபக்ஷ சதுர்த்திவரை அனுஷ்டிக்கும் விரதத்தின்போது நாள்தோறும் விடியுமுன் 5 நாளிகைக்கு முன்எழுந்து காலைக்கடன்களை முடித்து பூசைத்திரவியங்களை சேகரித்தல் வேண்டும் பின்னர் கலசஸ் தாபனம் செய்து அதன்முன் பொன்னால் அல்லது மண்ணால் இயன்ற திருவுருவங்களை எழுந்தருளச்செய்து விதிப்படி தினந்தோறும் பூசை செய்தல் வேண்டும். ஒவ்வொரு மாதத்திலும் தினமும் விநாயகருடைய மந்திரங்களில் ஒன்று இரண்டு நான்கு ஐந்து ஆறு எட்டு பத்து பன்னிரண்டு இருபத்தெட்டு எனும் எழுத்துக்களைக்கொண்ட மந்திரங்களில் ஏதாயினும் ஒன்றை செபிக்க வேண்டும்.

மேற்குறிப்பிட்டவாறு செபிக்கும்போது பத்துமுறைக்கொரு தர்ப்பணமும் பத்து தர்ப்பணத்திற்கு ஒருமுறை ஓமம் காட்டவேண்டும். பத்து ஓமத்திற்கு ஒருமுறை அன்ன நிவேதனம் செய்தல் வேண்டும். விரதம் பூர்த்தியாகின்ற போது விநாயகரை வீதியுலாச் செய்வித்து மண்ணலான மூர்த்தியை நதியிலாவது கடலிலாவது எழுந்தருளச்செய்தல் வேண்டும். விரதகாலத்தில் பழம் பால் முதலிய சாத்வீக உணவை உட்கொள்ளுதல் நன்மை பயக்கும். இவ்விரதத்தை முருகன் அனுக்ஷடித்து போரிலே சூரனை வென்றார். உமாதேவியாரும் இவ்விரதத்தை அனுக்ஷடித்தார். இன்னும்பலரும் அனுக்ஷடித்து பயனடைந்தனர்.

தூர்வாகணபதி விரதம் ஆவணிமாதவளர்பிறைச்சதுர்த்தி கார்த்திகைமாதவளர்பிறைச்சதுர்த்தி ஆகிய நாட்களில் அனுக்ஷடிக்கப்படும் விரதமாகும். இவ்விரதம் 3 அல்லது 5 ஆண்டுகள் அனுக்ஷடிக்கப்படவேண்டும் என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. இவ்விரதத்தை முறைப்படி அனுஷ்டிப்பவர்கள் செல்வப்பேறு மக்கட்பேறு என்பவற்றை அடைவர். விரதம் ஒரு குறிப்பிட்டகாலத்திற்கு அனுக்ஷடிக்கப்படுகின்றது. அக்கால எல்லை முடிந்ததும் முறைப்படி விரதத்தை முடித்து வைத்தல் முக்கியமானதாகும். இது விரதோத்யாபனம் என்று கூறப்படுகின்றது. விரத பூசையின்போது வழிபடுவதற்காக தங்கம் வெள்ளி செம்பு ஆகியவற்றில் ஒன்றினாலான திருவுருவம் வைத்து வழிபாடு செய்தல் வேண்டும். விரத உத்தியானத்தின்போது பூசை செய்து அர்ச்சகரின் தட்சணையுடன் இவ்வுலோக திருவுருவத்தினையும் தானமாக வழங்கி மகேஸ்வர பூசை செய்து காலை எட்டரைமணிக்கு முன்பதாக விரத பூர்த்தி செய்தல் வேண்டும். பூசை முடிவில் கும்பநீரால் விநாயகருக்கு அபிஷேகம் செய்தல் வேண்டும். களிமண் விக்கிரகமாயின் வழிபட்டபின் நீர்நிலையில் விட்டுவிடலாம் "விரநோத்யாபனம்" இவ்வாறு வீட்டில் செய்யமுடியாதவர்கள் ஆலயம் சென்று விஷேடபூசை செய்வித்து அர்ச்சகரிற்கு தட்சனை வழங்கலாம்.

இவ்வாறான விரதங்களை பின்பற்றி எமது குறைகளை நீக்கி எல்லாம் வல்ல விநாயகப் பெருமானின் இறையருள் பெருவோமாக!

செல்வன்.சி.ஜெயப்பிரசாந்
செங்குந்தர் வீதி
ஆரையம்பதி -02

# மாரியம்மன் தொடக்கமும் வழிபாடும்

எமது திருநீலகண்ட விநாயகரின் கும்பாபிஷேக மலர் வெளியீட்டுத் தொகுப்பில் திருநீலகண்டருடைய வரலாற்றைக் கூறுகின்ற வேளையிலே எமது செங்குந்தர் குலத்தைச் சேர்ந்த ஒட்டகக்கூத்தரின் வழிபாட்டின் மூலம் வந்த மகமாயி வழிபாடானது எவ்வாறு ஆரையம்பதியில் செங்குந்த குல மக்களின் கிராமிய தெய்வ வழிபாடாக மேற்கொள்ளப்பட்டது. என்பதனை நோக்கும் போது திருநீலகண்டரின் அருள் மழையில் நனைந்த மக்கள் முத்துமாரியின் அருட்கடாட்சம் வேண்டி தமது குல தெய்வமான மகாமாரி வழிபாட்டை 18 ம் நூற்றாண்டு அளவிலே பந்தல் அமைத்து வழிபட தொடங்கினர்.

இவ்வழிபாடானது மக்களுக்கு மக்கட் பேறு, நீண்ட ஆயுள் என்பவற்றை அளிப்பதோடு காய்ச்சல், அம்மை நோய்கள், பில்லிசூனியம் போன்றவை வராமல் தடுக்கும் தெய்வம் என்ற நம்பிக்கையினை அடிப்படையில் மடைபரவல் கும்பஸ் தாபனம் சர்க்கரை அமுது குளிர்த்தியாடல் போன்ற முறைகள் மூலம் மேற்கொள்ளப்பட்டு வந்தது. இவ்வழிபாட்டினை செங்குந்தர் குல மரபிலே வந்த மாந்திரீக முறைகளை சிறப்பாக பயின்ற பூசகர்களாளேயே மேற்கொள்ளப்பட்டு வந்தது. இக்கால கட்டத்திலே செங்குந்த குல மரபு வழிவந்த கந்தையா, அருணாச்சலம், போன்றோர்கள் பூசகர்களாக இருந்து மேற்கொண்டதாக அறியமுடிகிறது.

இவ்வாறாக பந்தல் அமைத்து இக்குல மக்களால் வழிபட்டு வந்த வழிபாடானது தற்காலிகமாக ஓலையினால் கோயில் அமைத்து நெற்குத்துச் சடங்கு, கன்னிமார் பூசை என பத்தாசி முறைகளை அடிப்படையாகக் கொண்டு வழிபாடு செய்யப்பட்டு வந்தது. அக் காலகட்டத்தில் எமது செங்குந்த குல மரபிலே மாந்திரீக முறைகளை கற்றறிந்த பல பண்டிதர்கள் இருந்ததாக அறிய முடிகிறது.

இவ்வாறு செய்யப்பட்ட வழிபாடானது ஆரையம்பதி வம்மிக்கேணியும் மாரியம்மன் ஆலய குல மக்களையும் இணைந்ததாகவே காணப்பட்டது. இவ்வேளையிலேயே 1934ம் ஆண்டு வம்மிக்கேணி மக்கள் தமக்கு தனியானதோர் ஆலயம் வேண்டுமென்று நினைத்த வேளையில் சபாபதி விதானையார் ஆலய தலைவராகவும் கிராமிய தலைவராகவும் இருந்த வேளையில் அவரது அனுமதியோடு இக்குல மக்களின் குல தெய்வமான பெரியதம்பிரான் வழிபாடானது ஆலயம் அமைத்து வம்மிக்கேணியிலே வழிபாடு செய்யப்பட்டது.

இவ்வாறாக மேற்கொள்ளப்பட்ட பெரியதம்பிரான் வழிபாடானது தற்பொழுது மாரியம்மன் வழிபாடாக மாறி வம்மிக் கேணி முத்து மாரியம்மனாக வழிபட்டு வருகிறது. இவ்வேளையிலே ஆரையம்பதி செங்குந்த குல மக்களின் ஆலய பூசகராக இருந்த அருணாச்சலம் பூசகரின் மறைவுக்குப் பின் ஸ்ரீமுத்துமாரியம்மன் ஆலய பிரதம பூசகராக கண்ணப்பர் (பூசாரியப்பா) அவர்களும் உதவிப் பூசகராக அருணாச்சலம் பூசகரின் மகன் சீனித்தம்பி உதவிப் பூசகராகவும் இருந்து மகமாரியம்மன் சடங்கு மேற்கொள்ளப்பட்டு வந்தது.

இவ்வாறு மேற்கொள்ளப்பட்ட வழிபாடானது 1950 ம் ஆண்டிற்கு பிறகு கண்ணப்பர் பூசகரின் மறைவுக்குப் பின் சீனித்தம்பி பிரதம பூசகராக இருந்த காலத்தில் இச்சடங்கு வழிபாட்டிலே கப்பல் சடங்கு, தேர் சடங்கு, என்பனவும் மேற்கொள்ளப்பட்டு வந்தது. இக் கால கட்டத்தில் தான் கப்பல் பாடல், தேர்ப்பாடல் என்பன தாமரைக்கேணி குமாரசுவாமி ஐயரிடம் இருந்து திரு.விவேகானந்த முதலியார் கந்தையா ஆசிரியர் ஆகியோரால் ஏட்டுப்பிரதியாக பெறப்பட்டு புத்தகமாக அச்சிடப்பட்டு பாடப் பெற்று வந்தது.

இக்கால கட்டத்தில் தான் மாரியம்மன் பத்தாசி முறையானது முழுமையான மாரியம்மன் வரலாறாக மாற்றப்பட்டு அம்மன் எழுந்தருளப் பண்ணுதல் ஆலய கதவு திறத்தல் கும்பஸ்தானம் தவநிலைச்சடங்கு, தேர்ச்சடங்கு, கப்பல் சடங்கு, கும்ப ஊர்வலம், பச்சை கட்டி பலிச்சடங்கு, நெற்குத்துச் சடங்கு, சர்க்கரை அமுதூட்டல், கன்னிமார் பூசை திருக்குளித்தியாடல் என்ற முறைகளில் இடம் பெற்று வந்தது. இச்சடங்கு முறையே கல்லாறு, தாமரைக்கேணி போன்ற இடங்களில் இக்குல மக்களால் வழிபாடு செய்யப்பட்டு வருகின்றது குறிப்பிடத்தக்கது. இக்கால கட்டத்திலே சீனித்தம்பி பூசகரின் மறைவின் பின் செல்லத்தம்பி பிரதம பூசகராகவும் சீனித்தம்பி பூசகரின் மரபு வழிவந்த அவரது மகன் சிவஞானமுதலி உதவிப் பூசகராகவும் இருந்து இவ்வழிபாட்டு முறையானது மேற்கொள்ளப்பட்டு வந்தது. அதன்பின் செல்லத்தம்பி பூசகரின் மறைவின் பின் மயில் வாகனம் (பெத்தப்பா) பிரதம பூசகராகவும் இருந்து தொண்டாற்றி வரும் வேளையிலே அவரது ஓய்வின் பின் இராசதுரை அவர்கள் பிரதம பூசகராகவும் கடடைமயாற்றி வந்தனர்.

இக்கால கட்டத்திலே 1987 ம் ஆண்டு இராசதுரை பூசகரின் ஓய்வின் பின் தொடர் உதவிப் பூசகராக இருந்த சிவஞான முதலி அவர்கள் பிரதம பூசகராக இருந்து தொண்டாற்ற ஆரம்பித்தார். சிவஞான முதலி பூசகர் தொண்டாற்றி வந்த காலகட்டத்தில் 1990 ம் ஆண்டு திரு.க.யோகராஜா தலைவராகவும், சிவஞான முதலி அவர்கள் பொருளாளராக இருந்த வேளையில் இவ்வாலய மூலபீடம் இடிக்கப்பட்டு மீள் புனருத்தானம் செய்யப்பட்டது. இக்கால கட்டத்தில் தான் பாகை சடங்காக மேற்கொள்ளப்பட்ட மாரியம்மன் சடங்கு முறை பொது சடங்காக மாற்றம் பெற்றது. இதன் பிற்பாடு 5 நாள் சடங்காக மாரியம்மன் சடங்கு மேற்கொள்ளப்பட்டு வந்த போது 8 நாள் கொண்டாட்ட சடங்காக மாற்றப்பட்டது.

இவ்வாறு மேற்கொள்ளப்பட்டு வருகின்ற சடங்கு முறையானது தற்பொழுதும் இக்குல மக்களால் சிவஞான முதலி பிரதம பூசகராகவும் இவருடன் இணைந்து பரிபூரணானந்த முதலியார் அவர்கள் உதவி பூசகராகவும் தொண்டாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இந்நூற்றாண்டு காலத்திலும் கிராமிய தெய்வ வழிபாடான மாரியம்மன் வழிபாடானது நம்பிக்கை அடிப்படையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வருவது சிறப்பம்சமாகும்.

திரு.ப.காண்டீபன்

உசாத்துணை :

ஆரையம்பதி - 02.

செங்குந்தர் குல பெரியவர்களின் செவ்விகள்

ஆரையூர் மக்களுக்கு அருள் வணங்குகின்ற ஆனைமுகனே
திரு நீல கண்டராய் எம்மத்தியிலே நீ திகழ்வதற்கு.
திருவுள்ளம் கொண்டு செங்குந்த குலத்துதித்த
திருத் தொண்டனுக்கு நீல நிறமேனியனாக நீ
திருக்காட்சி தந்தாய்
உன் திரு நாமம் கூறவே எம் குல மத்தியிலே
திருக் கோயில் அமைத்தோம்.
எம் தீமைகளை நீ அகற்றி சீர் பெருகும் பெருவாழ்வு
நீ அருள வேண்டும் நீல கண்டரே.

திரு.கீத பொன்கலன் சூரியகாந்த்.

## சின்னத்தம்பி குமாரசாமி ஐயர் :

சின்னத்தம்பி சின்னம்மை தம்பதியினருக்கு 22.12.1879ம் வருடம் மகனாகப் பிறந்த இவர், வடமொழி (சமஸ்கிருதம்) தமிழ், சைவம் (பரம்பரைக் கல்வி), வைத்தியம் போன்றவற்றை யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வித்துவான் த.கைலாசபிள்ளை அவர்களிடம் கல்வி கற்று சிறந்து விளங்கியவர். சைவ நெறி குன்றாத வாழ்வினால் ஐயர் எனப் சிறப்புப் பெற்றார்.

ஆக்கம் :-

1) சித்த வைத்திய பத்திரிகை, செங்குந்த மித்திரன் முதலிய சஞ்சிகைகளில் தமிழின் இனிமையும் குழைவும் உரைநடைப் புலமையும் உடைய பல கட்டுரைகளை எழுதியுள்ளார்.
2) மட்டக்களப்பிலே மேடையேற்றுகின்ற நாடகங்கள், கூத்துக்கள், காவடிச் சிந்துகள் முதலான பல நூல்களைத் திருத்தம் செய்வதும், அவற்றை மேடையேற்றுவதற்கு அங்கிகாரம் கொடுப்பதும் இவரது செயலாகும். அந்தளவிற்குத் திறமையுடையவராக இருந்தார்.
3) உருத்திராட்ச மகிமை உணர்ந்து அதனைத் தான் கழுத்தில் அணிந்தது மாத்திரமல்ல, "உருத்திராக்க மான்மியம்" எனும் செய்யுள் நூல் ஒன்றையும் எழுதினார். இந்நூலில் வெண்பா, ஆசிரிய விருத்தம், அகவல் என்பன கலந்து ஒரு இலக்கிய நூல் போல் அமைந்துள்ளது.
4) பரம்பரை வைத்தியத்துறையில் மேன்மையடைந்து "ஆயுர்வேத வைத்தியக் கருவூலம்" எனும் நூலை இயற்றினார். இதில் வெண்பா, ஆசிரியப்பா, கலித்துறை, கலிவெண்பா, விருத்தம் எனும் யாப்புக்கள் கொண்ட 800 பாக்களைக் கொண்டதாக இருக்கிறது.
5) மேலைத்தேய வைத்தியத்துறையிலும் இவர் தேர்ந்தவராக இருந்தபடியால் 1931ல் அரசடி ஆசிரியக் கல்லூரி அதிபராக இருந்த திரு.தம்பு அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க தமிழ் வைத்திய வழிகள் கலவாத 51 பாடல்களைக் கொண்ட "மலேரியா எனும் காட்டுச்சுரம்" எனும் நூலை இயற்றினார். இதில் வெண்பாமுதலாக கும்மி, நொண்டிச்சிந்து, ஆனந்தக்களிப்பு, குறம் (பள்ளு), கலிவெண்பாக்களாக இது அமைந்துள்ளது. இதனை திரு.டி.என்.நல்லதம்பி ஆசிரியர் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது. இந்நூலின் சிறப்பைப் பாராட்டி வைத்தியர் குழுவினர், மலேரியா வார விழா ஒன்றில் அரங்கேற்றி இவருக்குப் புகழ்மாலை சூட்டிக் கௌரவித்தனர்.
6) இவரின் வைத்தியத்துறையைச் சான்றுப்படுத்தும் வகையில் இவர் தயாரித்த திரட்சாரிட்டம், மிளகு சந்தனாரிதைலம், மயான தைலம் போன்றவை இப்பொழுது இவர் பெருமையைப் பேசுகின்றது.

சைவபணி :-

1) புராண வகுப்புக்கள் நடத்தியது.
2) தன் சொந்தப் பணத்தில் ஆலயத் திருப்பணி செய்தமை.
3) மட்டக்களப்பில் நடந்த சைவ சமயக் கிளர்ச்சிகளில் பங்குகொண்டமை.
4) சைவ பிரசங்கங்களும் சைவ சித்தாந்தச் சொற்பொழிவுகளும் நடத்தியது.
5) புராண வகுப்புக்கள், சைவ சித்தாந்த வகுப்புக்கள் என்பவற்றை நடத்தியது.
6) சைவம், இலக்கியம், வைத்தியம் என்ற துறையில் சிறப்புப் பெற்று தன்னால் இயன்ற அனைத்துச் சேவைகளையும் செய்தது.
7) கோட்டமுனை வீரகத்திப் பிள்ளையார் ஆலய நிர்வாகத்திலிருந்து அலய வளர்ச்சிக்குப் பாடுபட்டார்.

இவரின் சிறப்பு :-

1) மட்டக்களப்பு தமிழ் ஆசிரிய கலாசாலையில் விரிவுரையாளராக இருந்து பல ஆசிரியர்களை இந்நாட்டிற்குத் தந்தவர்.
2) தமிழ் புலமையிலும் வடமொழியிலும் சிறந்த புலமையைப் பெற்றதால் காரைதீவைச் சேர்ந்த மயில்வாகனம் எனும் சுவாமி விபுலானந்தருக்கு இப்பாடங்களைக் கற்பித்த பெருமையுடையவர்.

## இறுதிக்காலம் :-

தன் இல்லத்தையே கோயிலாக மாற்றி சிவபூசை செய்து மட்டக்களப்பு தாமரைக்கேணியில் சர்வசித்து வருடம் 20.04.1947ல் இறைபதமடைந்தார்.

## இலக்கியமணி ஆரையூர் நல்.அழகேசமுதலியார் :

ஆரையம்பதி செங்குந்தர் வீதியில் நல்லதம்பி அவர்களுக்கு மகனாக பிறந்த இவர் ஆரம்ப கல்வியை நொத்தாரிஸ் மூத்ததம்பி வித்தியாலயத்தில் கற்றார். இவர் 5ம் வகுப்புவரை தான் படித்திருந்தாலும் தெய்வ அருளால் பல நூல்களை எழுதி வெளியிட்டு தெய்வ புலவர் என பெயர் பெற்றவர்.

ஆக்கம் :- சித்தாண்டி தலபுராணம், தமிழ்த்தாய்க் காவியம் (1978) கந்த விரத அம்மானை, திருநீலகண்ட விநாயகர் அகவல், மாரி அம்மன் கும்மி, பல பத்திரிகைகளிலும் பல கட்டுரைகள், கவிதைகள் போன்றன.

சைவபணி :-

1) ஸ்ரீதிருநீலகண்ட விநாயகர் ஆலயம் ஸ்ரீமுத்து மாரியம்மன் ஆலயங்களில் வண்ணக்கராகவும், தலைவராகவும், போஷகராகவும் இருந்து ஆலய திருப்பணி வேலைகளையும் ஆலய கருமங்களையும் சரிவர நடத்தி வந்துள்ளார். இவரது காலத்தில் கும்பாபிஷேகங்களும் செய்து வைக்கப்பட்டுள்ளன.

2) ஆலயத்தில் கந்த புராணம், திருவாதவூரடிகள் புராணம், சித்திர புத்திரனார் கதை, மற்றும் மாரியம்மன் ஆலயத்தில் பாடப்படுகின்ற குளுர்த்தி, கப்பல், தேர், தவநிலை பாடல்களை இனிமையான குரலில் பாடுவது மட்டுமல்லாது இங்கு பாடப்படும் புராணங்களை மனனம் செய்து அழகாக சொல்பவர்கள் இன்று காண்பதரிது.

3) இவருடன் சிறிது நேரம் கூட இருந்து உரையாடுபவர்கள் கூட எழுந்து வருகின்ற போது தமிழ் கடலில் தாங்கள் நீராடி விட்டு வருவதாக கூறுவர். இவ்வாறான தமிழ் அறிவுள்ளவராக திகழ்ந்தார்.

இவரின் சிறப்பு :-

1) இந்து சமய கலாச்சார அமைச்சராக இருந்த செல்லையா ராசதுரை அவர்களும் இவரின் தமிழின் பால் ஈர்க்கப்பட்டு இவரின் அன்பராக இருந்ததுடன் இவருக்கு அமைச்சினால் “இலக்கிய மணி“ எனும் சிறப்புப் பட்டமும் சமாதான நீதவான் பட்டமும் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

2) சிகண்டி முருகனினால் மேல் பதிக்கப்பட்டு கிழக்கிலங்கையில் ஆறுபடை வீடுகளில் ஒன்றாக திகழும் சித்தாண்டி முருகனுக்கு தலபுராணம் எழுதிய பெருமையும் இவருக்கே உரியது. இந்நூல் வெளியீட்டின் போது அக்கிராமத்தில் இவருக்கு மாபெரும் வரவேற்பு அளிக்கப்பட்டது.

3) இவர் அமரர் வித்துவான் வி.சி.கந்தையா பண்டிதர், சுவாமி ஜீவனானந்தாஜி, வித்துவான் பெரிய தம்பிப்பிள்ளை, பண்டிதர் கணபதிப்பிள்ளை, போன்றோர்களின் பாராட்டை பெற்று படிக்காத மேதை எனப் புகழ் பெற்றவர்.

## குடும்பம் :-

ஞான சவுந்தரியை மணந்து நான்கு ஆண்மக்களையும் இரண்டு பெண் மக்களையும் பெற்று இல்லறத்தில் நல்லறம் நடத்தினார். இதில் ஒரு மகள் ஆசிரியராகவும் ஒரு மகன் அதிபராகவும் இருக்கின்றனர்.

## இறுதிக்காலம் :-

சில காலம் நோயுற்று இருந்து 1998 ம் வருடம் சிவபதமடைந்தார்.

டாக்டர் சிவ.சோமசுந்தரம் (ஈழத்து காளமேகம்)

சிவசிதம்பரம் பிள்ளை, விசாலாட்சி தம்பதிகளுக்கு 20.06.1907 ம் வருடம் மூத்த மகனாக அவதரித்தார். ஆரம்பக் கல்வியை நொத்தாரிஸ் மூத்ததம்பி வித்தியாலயத்திலும் 20.10.1927 அரசடி ஏ.வீ.ஆங்கில கல்லூரியில் சேர்ந்து சித்தியடைந்து 16.09.1927 ல் மருத்துவக் கல்லூரியில் இணைந்து ஒரு வைத்தியராக வெளியேறினார். பாடசாலையில் படிக்கின்ற காலத்தில் ஆங்கிலத்திலும் தமிழிலும் சிறந்து விளங்கி கவிதைப் போட்டிகளிலும் நாடகங்களிலும் பரிசில்களைப் பெற்றுள்ளார்.

ஆக்கம் :-

1) பணிவிடு தூது, ஆரையூர் முருகன் திருப்பதிகம், மாரியம்மன் பதிகம், சமய இலக்கிய கவிதை, கட்டுரைகளை இயற்றுவதை மட்டுமல்லாமல் கவி பாடுவதிலும் சிறந்து விளங்கினார். ஈழத்துக் காள மேகம் என சிறப்புப் பட்டம் பெற்றவர்.

சைவப்பணி :-

திருநீலகண்ட விநாயகர் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தில் முகாமையாளராகவும் வண்ணக்கராகவும் இருந்து அதனது தந்தையார், பாட்டனார்களை போன்று திருப்பணி வேலைகளை செய்ததுடன் தனது சொந்தப்பணத்தை ஆலய குருக்களுக்கு வழங்கி பூசை நடைபெற உதவியுள்ளார்.

கடமை :-

வைத்தியராக வெளியேறி மன்னார் வைத்தியசாலையில் முதன்முதலாக கடமை ஏற்று ஹோமாகம, திரியாய், சம்மாந்துறை, களுவாஞ்சிக்குடி, எஹலிய கொடைபொன்ற இடங்களில் கடமையாற்றி மட்டக்களப்பு வைத்தியசாலையில் கடமையாற்றி இறுதியாக ஓய்வு பெற்றார்.

இறுதிக்காலம் :-

இவரின் இளைய சகோதரி திருமண பந்தத்தில் இணையாத காரணத்தினால் இவரும் அவர் கூடவே இருந்து 08.07.1979 அன்று இறை பதம் அடைந்தார்.

தமிழ்மணி சிவ.விவேகானந்த முதலியார் :

சிவசிதம்பரப்பிள்ளை விசாலாட்சி தம்பதிகளுக்கு 12.11.1920 ம் வருடம் இரண்டாவது ஆண்மகனாக அவதரித்தார். ஆரம்ப கல்வியை நொத்தாரிஸ் மூத்ததம்பி வித்தியாலயத்திலும் கல்லடி உப்போடை விவேகானந்த வித்தியாலயத்திலும் சிவானந்த வித்தியாலயத்திலும் தமிழும் ஆங்கிலமும் கற்று அர்ச் அகஸ்தினர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் பயிற்றப்பட்ட ஆசிரியரானார்.

கற்பித்த ஆசிரியர்கள் :-

ஈழத்தின் புகழ் பெற்ற அறிஞர்களான ஸ்ரீமத் சுவாமி விபுலானந்தர், திரு.ச. அம்பலவாணர் (Bsc), திரு.ச.அம்பிகை பாகன் (B.A),திரு.க. கணபதிப்பிள்ளை (F.R.G.S), மகா வித்துவான் கலாசூரி F.X.C. நடராசா, ஞானச் சகோதரர், திரு.எஸ்.பிலிப் S.S.J.போன்றவர்களின் கற்பித்தலில் வளர்ந்தவர்.

கடமையேற்றது :-

1947ல் கல்முனை சென்மேரிஸ் ஆங்கில பாடசாலையில் ஆரம்பித்த கல்விப்பணி தான் பயின்ற ஆரையம்பதி மூத்ததம்பி நொ.வித்தியாலயம், மகா விதியாலயம், மகிழடித்தீவு மெ.மி வித்தியாலயம், வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலயம் என வளர்ந்து இறுதியில் ஆரையம்பதி மகா வித்தியாலயத்தில் 1978 ல் ஓய்வு பெற்றார்.

சேவைகள் :-

கல்விப் பணியில் ஓய்வு பெற்றாலும் இலக்கியப்பணியிலும், சமய பணியிலும் தன்னை ஈடுபடுத்தி கொண்டு கல்லடி உப்போடை இராமக்கிருஷ்ணமிஷன், ஞாயிறு பாடசாலை உள்ளிட்டு ஆரையம்பதி, மட்டக்களப்பு போன்ற இடங்களிலும் சேவை ஆற்றும் பண்பாளர். எமது சமுகத்தின் முன்னேற்றம் கருதி "செங்குந்த சேவா சங்கம்" என்று ஒரு சங்கத்தை ஏற்படுத்தி பண்ணிசை பயிற்சி, தேவார பாராயணம், பிள்ளையார் கதை படித்தல் போன்றவற்றை மேற்கொண்டார். நாடகங்களை எழுதி பழக்கி அரங்கேற்றியமை.

## பதிப்பித்த நூல்கள்

| | நூல்கள் | ஆண்டு |
|---|---|---|
| 1) | வைரவ சுவாமி காவியம் | 1949 |
| 2) | மாரியம்மன் உற்பத்தி | 1950 |
| 3) | மரணசடங்கு பாடல்கள் | 1991 |
| 4) | கந்தசஷ்டி விரத வணக்கப்பாடல்கள் வாரப் பதிகங்கள் | 1992 |
| 5) | மாரியம்மன் (சின்னக்) காவியம் | 1992 |
| 6) | சிவன்ராத்திரி விரத பாடல்கள் | 1993 |
| 7) | கழுகுமலை பத்து + அவினாசி பத்து | 1994 |
| 8) | தம்பிலுவில் திருநாவுக்கரசு நாயனார் குருகுல ஆதின சித்திர சதயச் சிறப்பு மலர் | |
| 9) | மாரியம்மன் கும்மி | 1983 |
| 10) | மட்டக்களப்பு தமிழக எண்ணெய்ச் சிந்துப் பாடல்கள் | 1995 |

## இயற்றிய நூல்கள் :-

| | நூல்கள் | ஆண்டு |
|---|---|---|
| 1) | இந்து சமயசாரம் | 1984 |
| 2) | அவலந்தீர்க்கும் ஆரையூர் மாரியம்மன் காவடிச்சிந்து | 1984 |
| 3) | விஞ்ஞான தத்துவங்களும் இந்துசமய கோட்பாடுகளும் | 1984 |
| 4) | கிருஷ்ண ஜெயந்தி தாலாட்டுப்பாடல் | 1986 |
| 5) | சுவாமி விபுலாநந்த வரலாற்றுக்கும்மி | 1992 |
| 6) | ஏர் முனைக்கு நேர் இங்கே எதுவுமேயில்லை (நகைச்சுவை நாடகம்) | |
| 7) | நாங்களும் கோயிலுக்கு வருகின்றோம் (சைவ சமய நாடகம்) | |
| 8) | குமண மன்னன் (வானொலி நாடகம்) | 1994 |
| 9) | கிருஷ்ணன் தூது (வானொலி நாடகம்) | 1994 |
| 10) | தமயந்தி சுயம்வரம் (வானொலி நாடகம்) | 1994 |

11) எமகண்டம் பாடிய காளமேகம் (வானொலி நாடகம்) 1994

12) மணிமேகலை வானொலி (நாடகம்) 1992

13) தருமரும் பொய் சொன்னாரே (நகைச்சுவை நாடகம்) 1992

14) விருத்தமெனும் ஒண்பாவிற்குயர் கம்பன் (வானொலி நாடகம்) 1992

இன்னும் விபுலானந்தர் நூற்றாண்டு விழா கட்டுரைகள் பல வீரகேசரி, பத்திரிகைகளில் வெளிவந்துள்ளன.

**குடும்பம் :-**

கண்ணப்பர் - பாக்கியம், தம்பதிகளின் ஒரே மகளை மணந்து ஐந்து ஆண்மக்களையும் ஒன்பது பெண்மக்களையும் பெற்று பேரின்ப பெருவாழ்வு வாழ்ந்தவர்.

**இறுதிக்காலம் :-**

இறுதிக்காலம் வரை எழுதிக் கொண்டே இருந்து 21.04.2000 வருடம் சிவபதம் அடைந்தார்.

## ஆசிரிய சிரோன்மணி திரு.த.செல்வநாயகம் :

தம்பிப்பிள்ளை பொன்னம்மா தம்பதிகளுக்கு 03.04.1927 ம் வருடம் இரண்டாவது மகனாக அவதரித்தார். தனது ஆரம்பக் கல்வியை நொத்தரீஸ் முத்ததம்பி வித்தியாலயத்திலும் இடைநிலைக்கல்வியை காத்தான்குடி மத்தியகல்லூரி, காத்தான்குடி 5ம் குறிச்சி ஆண்கள் பாடசாலையிலும், ஆங்கிலக் கல்வியை சிவாநந்தா தேசிய பாடசாலையிலும் கல்வி பெற்று அரசினர் ஆசிரிய பயிற்சிகலாசாலையிலும் கல்வி பெற்று அரசினர் ஆசிரிய பயிற்சிகலாசாலையில் சேர்ந்து ஆசிரியராக வெளிவந்தார்.

ஆக்கம் :- இலக்கிய கலாநிதி, இலக்கிய செம்மல், கலாசூரி, மகாவித்துவான் F.X.C நடராசா வாழ்க்கை வரலாறு (06.1.1993).

நூல் :- ஸ்ரீமத் சுவாமி விபுலானந்த ஜீ

நூலாசிரியர்கள் - மகாவித்துவான் F.X.C. நடராசா, செல்வி. சாம்பசிவம் தவமணி த.செல்வநாயகம். (16.04.1992)

**வெளியிட்ட நூல்கள் :-**

புலவர் மணி கவிதைகள் - 1980

உள்ளதும் நல்லதும் - 20.06.1982

புலவர் மணியின் விபுலானந்தர் மீட்சிப்பத்து - 20.05.1990

பாலைக்கவி - 02.11.1991

விபுலானந்தர் தரிசனம்

விபுலானந்தரின் ஆக்கங்கள்

மகாவித்துவான் F.X.C நடராசாவின் மட்டக்களப்பு மாண்மியம் - இரண்டாம் பதிப்பு

## பொது அமைப்புக்களில் பணி புரிந்த விபரம் :

கிழக்கிலங்கை சுவ பாஷா ஆசிரியர் சங்கத்தின் மட்டக்களப்பு கிளைச் செயலாளர், மட்டக்களப்பு இந்து இளைஞர் மன்றம் ஆரம்பகால உறுப்பினர், கலாசார செயலாளர், உபதலைவர், சுவாமி விபுலாநந்தர் முதலியோர் இல்ல பரிபாலன குழுத் தலைவர் இகில இலங்கை இந்து மாமன்ற முகாமைப் பேராவை உறுப்பினர் கிழக்கிலங்கை புனர்வாழ்வுக்கழக (E.R.O) நிர்வாகக்குழு உறுப்பினர், அரச சார்பற்ற நிறுவனங்ளின் ஒன்றிய உறுப்பினர் , சுவாமி விபுலாநந்தா நூற்றாண்டு விழாக்குழு இலக்கிய பணிக்குழு செயலாளர், மட்டக்களப்பு மாவட்ட கலாசாரப் பேரவை இலக்கிய கணிக்குழு தலைவர், மட்டக்களப்பு இளைப்பாற்று சம்பளம் பெறுவோரின் மட்டுப்படுத்தப்பட்ட சேமநலச் சங்க செயலாளர், கனடா விபுலாநந்தர் கல்வி அபிவிருத்திச் சங்கம் (VEDS) இலங்கைக் கிளை செயலாளர், மட்டக்களப்பு மாநகர தொலைபேசி பாவனையாளர் சங்கத் தலைவர், மட்டக்களப்பு நிருவாக மாவட்ட மட்டக்களப்பு மதியட்சகர்கள் குழு உறுப்பிளர், மட்டக்களப்பு தமிழ்ச் சங்கம் - போஷகர்.

## சமய வாழ்க்கையில் புரிந்த சாதனைகள் :-

ஆரையம்பதி ஸ்ரீ திருநீலகண்ட விநாயகர் ஆலய நிர்வாக குழு உறுப்பினராக இருந்து கோயிலை புனருத்தாரணம் செய்து கும்பாபிஷேகம் நடக்க உதவி புரிந்தவர் , மட்டக்களப்பு கோட்டைமுனை ஸ்ரீவிரகத்தி விநாயகர் ஆலய நிர்வாக குழு உறுப்பினராக இருந்து கோயிலை புனருத்தாரணம் செய்து கும்பாபிஷேகம் நடக்க உதவிபுரிந்தவர், மட்டக்களப்பு எல்லைவீதி ஸ்ரீசிந்தாமணி ஆலய போஷகர்களுள் ஒருவராக பணிபுரிந்து கோயில் புனரமைப்புக்குதவி கும்பாபிஷேகம் நடக்க உதவி புரிந்தவர் ,கல்லடி உப்போடை இராமக்கிருஷ்ணபுரத்தில் அமைந்துள்ள இராமக்கிருஷ்ண மிஷன் வீடமைப்பு மணிக்கு மிஷன் சுவாமிகளுடன் இணைந்து உதவி புரிந்தவர். இராமக்கிருஷ்ண மிஷன் நடாத்தும் சமயப் பணிகளில் பங்கேற்பவர்.

## பெற்ற விருதுகள்:

39 வருடம் ஆசிரியர் சேவைக்காக சேவையில் இருந்து ஓய்வு பெற்ற போது கோட்டமுனை கனிஷ்ட வித்தியாலய அபிவிருத்திச்சங்கம் 04.04.1987 ல் "ஆசிரிய சிரோன்மணி" விருது வழங்கி கௌரவிக்கப்பட்டவர். பதக்கம் சூட்டியவர் இலக்கிய கலாநிதி. கலாசூரி மகா வித்துவான் F.X.C. நடராசா அவர்கள்,

மட்/ஆசிரிய கலாசாலை பொன்விழா கொண்டாட்டத்தின் போது 20.11.1996 ல் "செம்மனச் செல்வர்" பட்டம் அளித்து பாராட்டைப் பெற்றார்.

தனது கனடா சுற்றுலாவின் போது 04.09.2000 ல் மட்டக்களப்பு கனடிய சமுகம் "சமுக சாகரன்" பட்டமளித்து பாராட்டைப் பெற்றவர்.

## குடும்பம் :

வேல்முருகு ருத்திராம்பாளை திருமணம் செய்து மூன்று ஆண்மக்களையும் ஒரு பெண்மகளையும் பெற்று பேரின்ப பெருவாழ்வு வாழ்ந்து கொண்டிருக்கின்றார்.

## செல்வி . சிவசிதம்பரப்பிள்ளை திருமலர் பாக்கியம் :

சிவசிதம்பரம்பிள்ளை விசாலாட்சி தம்பதியினருக்கு கனிஷ்ட புத்திரியாக 04.05.1923ல் அவதரித்தார். ஆரம்பக் கல்வியை பாட்டனாரின் நொத்தாரிஸ் மூத்ததம்பி வித்தியாலயத்தில் ஆரம்ப கல்வியை முடித்து கல்முனை G.V.S. பாடசாலை மாணவர் விடுதியில் தங்கி இடைநிலை கல்வியைக் கற்றார், பூமிசாஸ்திரம், விளையாட்டு , சித்திரம், தமிழ், சமயம், போன்ற துறைகளில் சிறந்து விளங்கி பாராட்டுக்களையும் பரிசில்களையும் பெற்றார்.

## ஆக்கம் :-

இவர் பல நூல்களையும் எழுதி இலக்கியபணி செய்துள்ளார். அவையாவன, மட்/ அரசினர் வைத்தியசாலை பழனி ஆண்டவர் திருப்பதிகம், நுவரெலியா ஆவலியூர் ஸ்ரீ முத்துமாரியம்மன் திருப்பதிகம், கல்லடி ஸ்ரீ சித்திவிநாயகர் திருப்பதிகம், கல்லடி வேலாயுதர் திருப்பதிகம், திருச்செந்தூர் முருகன் திருப்பதிகம் , திருப்பெருந்துரை முருகன் திருப்பதிகம், மாந்தீவு முருகன் திருப்பதிகம், கல்லடித்தெரு முருகன் திருப்பதிகம், கோட்டமுனை ஸ்ரீ சித்தி விநாயகர் திருப்பதிகம் - இவை தவிர ஏராளமான கவிதைகளையும் வில்லுப பாட்டுக்களையும் கும்மிப்பாட்டுக்களையும் இயற்றி இருக்கின்றார். அவையாவன.....

மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் - கும்மி (27- 08- 1975)
விபுலானந்தர் கும்மி - 23.07.1975
ஸ்ரீமுத்துமாரியம்மன் கும்மி - 01.09.1996
சர்வோதயம், சயரோகம், நவீன தமயந்தி, கடுகண்டாப் போடியார், திலகவதியார் முதலிய வில்லுப்பாட்டுக்களை பாடியதுமட்டுமல்லாமல் அரங்கேற்றியும் உள்ளார்.

## தொழில் :-

ஆசிரியராகி பெண்கள் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி பெற்றார். இங்கும் சிறந்த பயிற்சி ஆசிரியராக விளங்கி பரிசில்களையும் பாராட்டுக்களையும் பெற்றார். ஆசிரியராக கடமையாற்றிய காலத்தில் தமிழ், சமயம், சித்திரம், மனையியல் தும்பு வேலை, கைவேலை முதலிய பாடங்களை சிறப்பாக கற்பித்து அதிபர், ஆசிரியர் பெற்றோர்களின் மதிப்பைப் பெற்றார். க.பொ.த. (சா/த) பரீட்சையில் மாணவர்கள் சித்தியடைய வேண்டும் என்ற நோக்கோடு மாலை நேர வகுப்புக்கள் வைத்து சிறந்த முறையில் வீட்டிலும் பயிற்சி அளித்து அதிகமான மாணவர்கள் சித்தியடைய வழிவகுத்துள்ளார்.

## சேவை செய்த பாடசாலைகள் :

1) மட்/ ஆரையம்பதி அரசினர் தமிழ் கலவன் பாடசாலை - 01.05.1951 - 31.12.1952

2) மட்/காங்கேயனோடை அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலை - 01.01.1953 - 30.09.1967

3) மட்/ உன்னிச்சை 6ம் கட்டை தமிழ் கலவன் பாடசாலை - 01.07.1968 - 16.10.1970

4) மட்/ புதுக்குடியிருப்பு மெதடிஸ்த மிஷன் தமிழ் கலவன் பாடசாலை - 01.07.1968 - 16.10.1970

5) மட்/ ஆரையம்பதி மகாவித்தியாலயம் - 17.10.1970 - 04.05.1983 (ஓய்வெடுத்தார்)

## இறுதிக்காலம் :-

இறுதிக்காலம் வரை எழுதிக் கொண்டே இருந்து 05.11.2004ம் வருடம் சிவபதம் அடைந்தார்.

## கலாநிதி இரா. பத்மரஞ்சன்:

இராசரெத்தினம் மகேஸ்வரி தம்பதிகளுக்கு 26.07.1969ல் மூன்றாவது புத்திரனாக அவதரித்தார். தனது ஆரம்பக்கல்வியை நொத்தாரிஸ் மூத்ததம்பி வித்தியாலயத்திலும் உயர்கல்வியை மட்/மெதடிஸ்த மத்திய கல்லூரியிலும் கற்றார்.

## பட்டப்படிப்பு :-

1987 ம் வருடம் க.பொ.த.உயர்தரப் பரீட்சையில் அதிகூடிய பெறுபேறுகளுடன் சித்தியடைந்து 1989 ம் வருடம் கிழக்குப்பல்கலைக்கழகத்தில் வர்த்தகமுகாமைத்துவ பீடத்திற்குத் தெரிவானார்.

**மொழி :-**

ஆங்கில மொழி மூலம் கற்கை நெறியைக் கற்று முதல் தடவையாக முதலாம் தரத்தில் சித்தி எய்தி 1995 ல் வியாபார நிருவாக மாணியாக வெளியேறினார். அதே ஆண்டில் கிழக்குப்பல்கலைக்கழகத்தில் தற்காலிக விரிவுரையாளராக சேவை ஆற்றிய பின் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் 1996ல் ஆரம்ப விரிவுரையாளராக தன்னை இணைத்துக் கொண்டு தனது சேவையைத் தொடர்ந்தார். பின்பு 2000ம் ஆண்டு கொழும்பு பல்கலைக்கழகத்தில் M.B.A பட்டத்தைப் பெற்றார். 2001 ம் வருடம் ஜப்பான் நாட்டு அரசின் புலமை பரிசில் திட்டத்தின் கீழ் KOBE பல்கலைக்கழகத்தில் கலாநிதிப் பட்டத்திற்கு தெரிவாகி 2005 ம் வருடம் வெளியேறினார். தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் வர்த்தக முகாமைத்துவப் பீடத்தின் முகாமைத்துவத் துறை தலைவராக கடமையாற்றியதுடன் கிழக்குப்பல்கலைக்கழகத்தில் பட்டப்பின் படிப்பு கற்கை நெறிக்கான M.B.A, M.B.E போன்வற்றிற்கு வருகை தரு விரிவுரையாளராக கடமையாற்றியதுடன் மட்டக்களப்பு லயன்ஸ் கழகத்தின் கல்வி செயல்திட்டத்தின் கல்விப் பணிப்பாளர் ஆகவும் சேவை செய்தார்.

**ஆக்கம் :-**

இவரின் கல்விசேவைக்கு சான்றாக இவர் எழுதிய நூல்களை குறிப்பிட முடியும். இந்த வகையில் கணக்கியல், சந்தைப்படுத்தலலும் முகாமைத்துவம், மனித வள முகாமைத்துவம் போன்ற சிறந்த புத்தகங்களை தனது ஆசான்களுடன் இணைந்தும், நவீன முகாமைத்துவ சிந்தனைகள், முகாமைத்துவ ஆய்வு முறை போன்றவற்றை தனித்து நூல் வடிவில் வெளியிட்டு வெற்றியும் கண்டார்.

மேலும் உள்நாட்டு, வெளிநாட்டு சஞ்சிகைக்கு ஆய்வுக் கட்டுரை எழுதுவதில் ஆர்வம் காட்டினார். தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் தன்னிடம் கல்விகற்ற மாணவர்களுக்கு சிறந்த ஒழுக்கக் கல்வியை கற்றுக் கொடுப்பதில் கலாநிதி. இரா. பத்மரஞ்சன் ஒரு முன்மாதிரியாக திகழ்ந்தார்.

**சிறப்பு :-**

கிழக்கு மாகாணத்தில் தமிழ் முஸ்லிம் ஒற்றுமைக்காக அரும்பாடுபட்டார். சாதி, மத, பேத, பிரதேச, ஏழை , பணக்காரன் என்ற வேறுபாடின்றி நற்குணமும் மனிதநேயமும் கொண்ட அரிதான மனிதராக திகழ்ந்தார்.

இவ்வாலயத்தில் தலைவராகவும் செயலாளராகவும் இருந்து ஆலய ஆக்கபூர்வமான வேலைகளுக்கு முன்னின்று உழைத்தார். இவர் கும்பாபிஷேகம் நடக்க வேண்டுமென அரும்பாடுபட்டவர்.

மேலும் பல்கலைக்கழக மாணவராக இருந்த வேளையில் கவியரங்கம், "புதியதொரு வீடு" எனும் நாடகத்தில் "மறைக்காடர்" எனும் பாத்திரமேற்று நடித்தார். அந்த நாடகம் நாடெங்கும் அரங்கேற்றப்பட்டது. இவரின் நாடக திறமையை இந்தியாவை சேர்ந்த பிரபல நாடக விற்பன்னர் சுவாமிநாதனால் பாராட்டப்பட்டார். நாடகத்தை சமூக மாற்ற பிரசாரத் திற்காக பயன்படுத்தியது, சிறந்த கவிஞனாக, நடிகனாக, எழுத்தாளனாக, பேச்சாளனாக, ஆராட்சியாளனாக, சிறந்த நிர்வாகியாக, சிறந்த விரிவுரையாளனாக சிறந்து விளங்கினார்.

**குடும்பம் :-**

இவர் 2005 ல் இ. சிவாணியை தனது வாழ்க்கைத் துணையாக இணைத்து கொண்டு 2006 ல் திவாத்மிகா வின் தந்தையானார்.

**இறுதிக்காலம் :-**

எதிர்பாராத விதமாக 19.05.2007ல் சிவபதமடைந்தார்.

## ஆலயத்தில் தொண்டாற்றிய வண்ணக்குமாரும் நிர்வாக சபையினரும் அவர்கள் தொண்டாற்றிய காலமும்

| பெயர் | பதவி | காலம் |
|---|---|---|
| நாகப்பரும் அவரது சந்ததியினரும் (அவர்களின் பெயர்கள் பெற முடியவில்லை) | வண்ணக்கர் | 16ம் -18ம் நூற்றாண்டு |
| உலகநாதப் பட்டங்கட்டியார், சேபமநாதப் பட்டங்கட்டியார், அவர் சந்ததியினர் | வண்ணக்குமார் | 18ம் நூற்றாண்டு |
| நொத்தாரிஸ் மூத்ததம்பி முதலியார்<br>சி.ஞானமுத்து விதானையார்<br>பரிகாரி குஞ்சுத்தம்பி | வண்ணக்குமார் | 19ம் நூற்றாண்டு |
| மூத்ததம்பி முதலியார், சிவசிதம்பர பிள்ளை விதானையார் | வண்ணக்குமார் (முகாமையாளர்) | 1917 - 1935 |
| சிவசிதம்பரப்பிள்ளை, சோமசுந்தரம் டாக்டர் | வண்ணக்குமார் (முகாமையாளர்) | 1935 - 1936 |
| க.சபாபதிப்பிள்ளை விதானையார்<br>வல்லிபுரம் சின்னையா முதலி<br>கா.சோமநாதமுதலி, நல்லதம்பி - அழகேச முதலியார் | வண்ணக்குமார் | 1936 - 1942 |
| முருகேசு செல்லத்துரை<br>பூபாலபிள்ளை சுப்ரமணியம்<br>நல்லதம்பி அழகேச முதலியார் | வண்ணக்குமார் | 1942 - 1949 |
| ஞானமுத்து செல்வநாயகம் (ஆசிரியர்), சீனித்தம்பி மாரிமுத்து,<br>நல்லதம்பி அழகேச முதலியார் (J.P)<br>சிவசதம்பரப்பிள்ளை விவேகாநந்த முதலியா (ஆசிரியர்)<br><br>முருகப்பர் தர்மலிங்கம் (ஆசிரியர்)<br>காசிநாதர் சோமநாத முதலி<br>வல்லிபுரம் சின்னையா முதலி<br>ஐயம்பிள்ளை தம்பிப்பிள்ளை<br>சீனித்தம்பி கனபதிப்பிள்ளை (ஆசிரியர்)<br>முருகேசு செல்வரெத்தினம்<br>கந்தவனம் வாரித்தம்பி (ஆசிரியர்)<br>பெரியதம்பி முத்தையாமுதலி (ஆசிரியர்)<br>கனபதிப்பிள்ளை கந்தையா (ஆசிரியர்) | தலைவர்<br>உபதலைவர்<br>இணைக்காரிய தரிசிகள்<br><br>தனாதிகாரி<br>நி.உறுப்பினர்<br>நி.உறுப்பினர்<br>நி.உறுப்பினர்<br>நி.உறுப்பினர்<br>நி.உறுப்பினர்<br>நி.உறுப்பினர்<br>நி.உறுப்பினர்<br>நி.உறுப்பினர் | 08.10.1949 -<br>18.01.1960 |

| | | |
|---|---|---|
| ஞானமுத்து செல்வநாயகம் (ஆசிரியர்) | தலைவர் | 19.01.1960 - 12.03.1965 |
| நல்லதம்பி அழகேசமுதலியார் (J.P) | உபதலைவர் | |
| சுப்ரமணியம் தேவராசமுதலி (ஆசிரியர்) | செயலாளர் | |
| முருகேசு நாகமணி | பொருளாளர் | |
| முருகேசு தம்பிராசா | நி.உறுப்பினர் | |
| சீனித்தம்பி ராசசிங்கம் | நி.உறுப்பினர் | |
| நல்லதம்பி சிவக்கொழுந்து | நி.உறுப்பினர் | |
| ஞானமுத்து செல்லத்தம்பி (பூசகர்) | நி.உறுப்பினர் | |
| செல்லையா கந்தையா ரெட்ணசிங்கம் | நி.உறுப்பினர் | |
| கணபதிப்பிள்ளை கந்தையா (ஆசிரியர்) | தலைவர் | 12.03.1965 - 13.03.1970 |
| செல்வநாயகம் பாக்கியநாதன் | செயலாளர் | |
| ஞானமுத்து செல்லத்தம்பி (பூசகர்) | பொருளாளர் | |
| சீனித்தம்பி சிவஞானமுதலி | உபதலைவர் | |
| சுப்பிரமணியம் தேவராசமுதலி | நி.உறுப்பினர் | |
| நல்லதம்பி சிவக்கொழுந்து | நி.உறுப்பினர் | |
| கணபதிப்பிள்ளை கந்தையா (ஆசிரியர்) | தலைவர் | 13.03.1970 - 16.05.1973 |
| தம்பிப்பிள்ளை இராசரெத்தினம் (ஆசிரியர்) | இணைச்செயலாளர் | |
| சீனித்தம்பி சிவஞானமுதலி (பூசகர்) | நி.உறுப்பினர் | |
| செல்லையா கந்தையா | நி.உறுப்பினர் | |
| நல்லதம்பி அழகேச முதலியார் (J.P) | நி.உறுப்பினர் | |
| சிறில் கந்தையா (ஆசிரியர்) | நி.உறுப்பினர் | |
| சீனித்தம்பி இராசசிங்கம் ரெட்ணசிங்கம் | நி.உறுப்பினர் | |
| இளையதம்பி வடிவேலன் (ஆசிரியர்) | தலைவர் | 16.05.1973 - 19.03.1975 |
| சிவசிதம்பரப்பிள்ளை விவேகானந்த முதலியார் (ஆசிரியர்) | செயலாளர் | |
| முருகேசு தர்மலிங்கம் (ஆசிரியர்) | பொருளாளர் | |
| நல்லதம்பி அழகேச முதலியார் (J.P) | நி.உறுப்பினர் | |
| சீனித்தம்பி சிவஞான முதலி (பூசகர்) | நி.உறுப்பினர் | |
| சுப்ரமணியம் பாலசுந்தரமுதலி (ஆசிரியர்) | நி.உறுப்பினர் | |
| கணபதிப்பிள்ளை கந்தையா (ஆசிரியர்) | தலைவர் | 19.03.1975 - 25.08.1976 |
| தம்பிப்பிள்ளை இராசரெத்தினம் (ஆசிரியர்) | செயலாளர் | |
| வாரித்தம்பி தருமரெத்தின முதலி | பொருளாளர் | |
| நல்லதம்பி அழகேச முதலியார் (J.P) | நி.உறுப்பினர் | |
| சிவசிதம்பரப் பிள்ளை விவேகானந்த முதலியார் (ஆசிரியர்) | நி.உறுப்பினர் | |
| ஞானமுத்து செல்லத்தம்பி (பூசகர்) | நி.உறுப்பினர் | |
| செல்லையா கந்தையா | நி.உறுப்பினர் | |
| சுப்ரமணியம் பாலசுந்தர முதலி (ஆசிரியர்) | நி.உறுப்பினர் | |
| இளையதம்பி வடிவேலன் (ஆசிரியர்) | தலைவர் | 25.08.1976 - 21.02.1982 |
| வாரித்தம்பி தருமரெத்தின முதலி<br>சிவராஜ ஜெயந்திரன் | இணைச் செயலாளர் | |
| முருகப்பர் தருமலிங்கம் (ஆசிரியர்) | பொருளாளர் | |
| கணபதிப்பிள்ளை கந்தையா (ஆசிரியர்) | நி.உறுப்பினர் | |
| சிவசிதம்பரப்பிள்ளை விவேகானந்த முதலியார் (ஆசிரியர்) | நி.உறுப்பினர் | |
| தம்பிப்பிள்ளை இராசரெத்தினம் (ஆசிரியர்) | நி.உறுப்பினர் | |
| சீனித்தம்பி சிவஞானமுதலி (பூசகர்) | நி.உறுப்பினர் | |
| செல்வநாயகம் பாக்கியநாதன் | நி.உறுப்பினர் | |

| | | |
|---|---|---|
| தம்பிப்பிள்ளை இராசரெத்தினம் (ஆசிரியர்) | தலைவர் | 21.02.1982 - |
| செல்வநாயகம் பாக்கியநாதன் | செயலாளர் | 04.04.1983 |
| வாரித்தம்பி தருமரெத்தின முதலி | பொருளாளர் | |
| அழகேச முதலி - திருஞான செல்வம் | நி.உறுப்பினர் | |
| விவேகானந்த முதலியார் - விபுலானந்த முதலியார் | நி.உறுப்பினர் | |
| சீனித்தம்பி சிவஞானமுதலி (பூசகர்) | நி.உறுப்பினர் | |
| வாரித்தம்பி இராசரெத்தினம் | நி.உறுப்பினர் | |
| செல்லத்தம்பி கமலநாதன் (ஆசிரியர்) | நி.உறுப்பினர் | |
| நல்லதம்பி அழகேச முதலியார் J.P | தலைவர் | 04.04.1983 - |
| செல்லதம்பி கமலநாதன் (ஆசிரியர்) | பொருளாளர் | 15.08.1984 |
| தம்பிப்பிள்ளை இராஜேஸ்வரன் (M.L.T) | செயலாளர் | |
| செல்வநாயகம் பாக்கியநாதன் | நி.உறுப்பினர் | |
| இளையதம்பி வடிவேலன் (ஆசிரியர்) | நி.உறுப்பினர் | |
| கணபதிப்பிள்ளை கந்தையா (ஆசிரியர்) | நி.உறுப்பினர் | |
| முருகப்பர் தருமலிங்கம் (ஆசிரியர்) | நி.உறுப்பினர் | |
| சிவசதம்பரம்பிள்ளை விவேகானந்த | நி.உறுப்பினர் | |
| முதலியார் (ஆசிரியர்) | நி.உறுப்பினர் | |
| வாரித்தம்பி இராசரெத்தினம் | நி.உறுப்பினர் | |
| தம்பிப்பிள்ளை இராசரெத்தினம் (ஆசிரியர்) | தலைவர் | 15.08.1984 - |
| செல்வநாயகம் பாக்கியநாதன் | செயலாளர் | 24.11.1985 |
| அழகேச முதலியார் திருஞான செல்வம் | பொருளாளர் | |
| வாரித்தம்பி மகேந்திரன் | நி.உறுப்பினர் | |
| சிவசிதம்பரப்பிள்ளை விவேகானந்த முதலியார் (ஆசிரியர்) | நி.உறுப்பினர் | |
| சுப்ரமணியம் தேவராசமுதலி (ஆசிரியர்) | நி.உறுப்பினர் | |
| முருகப்பர் தருமலிங்கம் (ஆசிரியர்) | நி.உறுப்பினர் | |
| இளையதம்பி வடிவேலன் (ஆசிரியர்) | நி.உறுப்பினர் | |
| கணபதிப்பிள்ளை கந்தையா (ஆசிரியர்) | நி.உறுப்பினர் | |
| சிவனேசமுதலி இரத்தினசபாபதி முதலி | நி.உறுப்பினர் | |
| நல்லதம்பி அழகேச முதலியார் (J.P) | தலைவர் | 24.11.1985 - |
| சுப்ரமணியம் சேதுபதி இராமச்சந்திரன் | செயலாளர் | 16.06.1988 |
| கணபதிப்பிள்ளை கந்தையா (ஆசிரியர்) | பொருளாளர் | |
| வாரித்தம்பி இராசரெத்தினம் | உபசெயலாளர் | |
| தம்பிப்பிள்ளை இராசரெத்தினம் (ஆசிரியர்) | நி.உறுப்பினர் | |
| செல்வநாயகம் பாக்கியநாதன் | நி.உறுப்பினர் | |
| சுப்பிரமணியம் தேவராச முதலி ஆசிரியர்) | நி.உறுப்பினர் | |
| சிவசிதம்பரப்பிள்ளை விவேகானந்த முதலியார் (ஆசிரியர்) | நி.உறுப்பினர் | |
| இளையதம்பி வடிவேலன் (ஆசிரியர்) | நி.உறுப்பினர் | |
| முருகப்பர் தருமலிங்கம் (ஆசிரியர்) | புதிய பொருளாளர் | |
| நல்லதம்பி அழகேச முதலியார் J.P | தலைவர் | 16.06.1988 - |
| இராசசிங்கம் யோகேந்திரன் | செயலாளர் | 09.04.1989 |
| கணபதிப்பிள்ளை வல்லிபுரம் | பொருளாளர் | |
| செல்லத்தம்பி கமலநாதன் (ஆசிரியர்) | நி.உறுப்பினர் | |
| கணபதிப்பிள்ளை யோகராஜா | நி.உறுப்பினர் | |
| இராசரெத்தினம் பத்மரஞ்சன் (கலாநிதி) | நி.உறுப்பினர் | |
| தர்மலிங்கம் நடேசன் | நி.உறுப்பினர் | |
| செல்வநாயகம் பாக்கியநாதன் | நி.உறுப்பினர் | |
| சுப்பிரமணியம் சேதுபதி இராமச்சந்திரன் | நி.உறுப்பினர் | |

| | | |
|---|---|---|
| கணபதிப்பிள்ளை யோகராஜா | தலைவர் | 09.04.1989 - |
| இராசசிங்கம் யோகேந்திரன் | செயலாளர் | 10.07.1991 |
| சீனித்தம்பி சிவஞான மதலி (பூசகர்) | பொருளாளர் | |
| வாரித்தம்பி இராசரெத்தினம் | உபசெயலாளர் | |
| பொன்னம்பலம் சிவபாலன் | உபபொருளாளர் | |
| புவிராஜசிங்கம் வினோதாகரன் | நி.உறுப்பினர் | |
| தர்மலிங்கம் நடேசன் | நி.உறுப்பினர் | |
| செல்லையா பஞ்சலிங்கம் | நி.உறுப்பினர் | |
| பொன்னையா இந்திரலிங்கம் | நி.உறுப்பினர் | |
| சுப்பிரமணியம் சேதுபதி இராமச்சந்திரன் (ஆசிரியர்) | நி.உறுப்பினர் | |
| கந்தையா சயேந்திரராஜா | நி.உறுப்பினர் | |
| செல்லத்தம்பி கமலநாதன் (ஆசிரி) | நி.உறுப்பினர் | |
| கிருபைராஜ முதலி தர்மகீர்த்தி | நி.உறுப்பினர் | |
| இராசரெத்தினம் பத்ம ரஞ்சன் | புதிய செயலாளர் | 13.03.1991 |
| விவேகானந்த முதலியார் பரிபூரனானந்த முதலியார் | தலைவர் | 10.07.1991 - 14.081993 |
| செல்வநாயகம் சோதிநாதன் | செயலாளர் | |
| பொன்னையா இந்திரலிங்கம் | பொருளாளர் | |
| சிவனேசமுதலி பாலசுப்ரமணிய முதலி (ஆசிரியர்) | உபதலைவர் | |
| நாகமணி புஷ்பநாதன் | நி.உறுப்பினர் | |
| தர்மலிங்கம் நடேசன் | நி.உறுப்பினர் | |
| செல்லையா பஞ்சலிங்கம் | நி.உறுப்பினர் | |
| செல்வரெத்தினம் உருத்திரலிங்கம் | நி.உறுப்பினர் | |
| கந்தையா சுரேஸ்பரமுதலி | நி.உறுப்பினர் | |
| விவேகானந்த முதலியார்-பரிபூரணானந்த முதலியார் | தலைவர் | 14.08.1993 - 28.05.1994 |
| பொன்னையா நாகலிங்கம் | செயலாளர் | |
| செல்வநாயகம் பாக்கியநாதன் | பொருளாளர் | |
| சிவநேசமுதலி பாலசுப்பிரமணியமுதலி (ஆசிரியர்) | உபதலைவர் | |
| சிவராஜா ஜெயந்திரன் | உபசெயலாளர் | |
| தருமரெத்தினமுதலி சுரேஷ்காந் | நி.உறுப்பினர் | |
| மாரிமுத்து தயாபர முதலி | நி.உறுப்பினர் | |
| சிவநேச முதலி பரசுராம முதலி | நி.உறுப்பினர் | |
| சீனித்தம்பி சிவஞான முதலி (பூசகர்) | தலைவர் | |
| செல்வநாயகம் - சோதிநாதன் | செயலாளர் | |
| விவேகானந்த முதலியார்-அற்புதானந்த முதலியார் | பொருளாளர் | |
| சிவநேச முதலி பாலசுப்பிரமணிய முதலி (ஆசிரியர்) | உபதலைவர் | 30.10.94 - 11.06.2006 |
| சிவராஜா ஜெயேந்திரன் | உபசெயலாளர் | |
| தருமலிங்கம் நடேசன் | நி.உறுப்பினர் | |
| நாகமணி புஷ்பநாதன் | நி.உறுப்பினர் | |
| பாலசுந்தர முதலி பிரபாந்தன் | புதிய செயலாளர் | |
| புவிராஜசிங்கம் ராஜகருணாகரன் | நி.உறுப்பினர் | |
| மாரிமுத்து தயாபார முதலி | நி.உறுப்பினர் | |

| | | |
|---|---|---|
| இராசரெத்தினம் பத்மரஞ்சன் (கலாநிதி) | தலைவர் | 11.06.2006 - |
| சந்திரசேகரம் மணிசேகரன் (ஆசிரியர்) | செயலாளர் | 03.06.2007 |
| நாகமணி புஷ்பநாதன் | பொருளாளர் | |
| கணபதிப்பிள்ளை யோகராஜா | உபதலைவர் | |
| மாரிமுத்து யசோதரன் | உபசெயலாளர் | |
| இராசரெத்தினம் பிரதீபன் | உபபொருளாளர் | |
| விவேகானந்த முதலியார் அற்புதானந்த முதலியார் | நி.உறுப்பினர் | |
| சிவபாதசுந்தரம் ஜினோரஞ்சன் | நி.உறுப்பினர் | |
| பஞ்சலிங்கம் லக்ஸ்மன் | நி.உறுப்பினர் | |
| தருமரெத்தின முதலி ரஜனிகாந் | நி.உறுப்பினர் | |
| செல்வரெத்தினம் சாந்தலிங்கம் | நி.உறுப்பினர் | |
| பொன்னையா இந்திரலிங்கம் | நி.உறுப்பினர் | |
| பாலசுந்தர முதலி பிரபாந்தன் | நி.உறுப்பினர் | |
| கணபதிப்பிள்ளை யோகராஜா | தலைவர் | 03.06.2007 - |
| சந்திரசேகரம் மணிசேகரம் (ஆசிரியர்) | செயலாளர் | 02.09.2007 |
| நாகமணி புஷ்பநாதன் | பொருளாளர் | |
| விவேகானந்த முதலியார் பரிபூரணானந்த முதலியார் | உபதலைவர் | |
| மாரிமுத்து யசோதரன் | உபசெயலாளர் | |
| இராசரெத்தினம் பிரதீபன் | உபபொருளாளர் | |
| சிவபாத சுந்தரம் ஜினோரஞ்சன் | நி.உறுப்பினர் | |
| பொன்னையா இந்திரலிங்கம் | நி.உறுப்பினர் | |
| பாலசுந்தர முதலி பிரபாந்தன் | நி.உறுப்பினர் | |
| விவேகானந்த முதலியார் அற்புதானந்த முதலியார் | நி.உறுப்பினர் | |
| பஞ்சலிங்கம் லக்ஸ்மன் | நி.உறுப்பினர் | |
| செல்வரெத்தினம் சாந்தலிங்கம் | நி.உறுப்பினர் | |
| தருமரெத்தின முதலி ரஜனிகாந் | நி.உறுப்பினர் | |
| சபாரெட்ணம் ரெட்ணராஜ் | கணக்குப்பரிசோதகர் | |
| கணபதிப்பிள்ளை யோகராஜா | தலைவர் | 02.09.2007 - |
| சந்திரசேகரம் மணிசேகரம் (ஆசிரியர்) | செயலாளர் | இன்று வரை |
| விவேகானந்த முதலியார் பரிபூரணானந்த முதலியார் | பொருளாளர் | |
| தருமலிங்கம் பாலச்சந்திரன் | உபதலைவர் | |
| மாரிமுத்து யசோதரன் | உபசெயலாளர் | |
| சிவபாதசுந்தரம் ஜினோரஞ்சன் | உபபொருளாளர் | |
| பொன்னையா இந்திரலிங்கம் | நி.உறுப்பினர் | |
| பாலசுந்தர முதலி பிரபாந்தன் | நி.உறுப்பினர் | |
| விவேகானந்த முதலி அற்புதானந்த முதலியார் | நி.உறுப்பினர் | |
| பஞ்சலிங்கம் லக்ஸ்மன் | நி.உறுப்பினர் | |
| கீதபொன்கலன் சூரியகாந் | நி.உறுப்பினர் | |
| சிவானந்தம் பாலகுமார் | நி.உறுப்பினர் | |
| செல்வநாயகம் சோதிநாதன் | நி.உறுப்பினர் | |
| சபாரெட்ணம் ரெட்ணராஜ் | கணக்குப் பரிசோதகர் | |

உ



மட்டுநகர் ஆரையம்பதி

# ஸ்ரீ திருநீலகண்டப் பிள்ளையார் கோவில்

## சம்புரோக்ஷண மகா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

"பணைங் கமழும் பேரலைக் நாகத் சீலத் தெள்ளனிச்
பலத்துன்பத் துன்பமிடந் தேசோகத முத்தி
மணங் கமழும் பாதமலர் கதியருளு மிறைசீ
வாழிநீதம் வாழிநீதம் வாழிநீதம் வாழி
கணங் கமழுந் தொண்டரகச் சுத்தமொடுந் சிரமேற்
காப்பளித்து வலம்புரியாய் காட்சி விழா சாலின்
தணங் கமழும் பேரவை பயந்தியல் கோவில்
கொண்டருளுர் திருநீல கண்ட விநாயகனே"

— திருநீலகண்ட விநாயகர்மாலை —

மட்டுநகர் ஆரையம்பதிச் செங்குந்தர் வீதியில் கோவில் கொண்டு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ திருநீலகண்ட விநாயகப் பெருமானுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் நிகழும் ஆனந்த வருஷம் கார்த்திகைத் திங்கள் ஆறும் நாள் (21.11.74) வியாழக்கிழமை முற்பகல் 10 மணி 10 நிமிஷம் முதல் 11 மணி 22 நிமிஷம் வரையுமுள்ள மகரலக்கின சுப முகூர்த்தத்தில் மகா கும்பாபிஷேகஞ் செய்யத் திருவருள் பாலித்திருப்பதால் அத்தருணம் அவ்வைபவங்களிற் கலந்து பெருமானின் பேரருள் பெற்றுய்யுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்,
ஸ்ரீ திருநீலகண்ட விநாயகர் ஆலய பரிபாலன சபையாரும்,
திருப்பணிச் சபையாரும்.
ஆரையம்பதி, காத்தான்குடி - 8-11-1974.

### பிரதிஷ்டாசாரியர்கள்

தேசிகமணி ஸ்ரீமத் மா. இ. கந்தசாமிக்குருக்கள் அவர்கள்,
(பரமநயினார் கோவில், ஆரையம்பதி.)

சிவஸ்ரீ லிங்கசாமிக்குருக்கள் சிவஞான செல்வக்குருக்கள் அவர்கள்,
(ஆசிரியர், மாணிக்கப் பிள்ளையார் கோவில், அக்கரைப்பற்று.)

சிவஸ்ரீ ச. காசிபதி ஐயர் அவர்கள்,
(திருநீலகண்டப் பிள்ளையார் கோவில், ஆரையம்பதி.)

இப்புண்ணிய கைங்கரியம் இனிது நிறைவேற ஆக்கமும் ஊக்கமும் அளித்து, ஆதரவு நல்கிய அன்பர்கள் அனைவருக்கும் எங்கள் நன்றியைக் கூறுகின்றோம்.

## நிகழ்ச்சி நிரல்

**ஆனந்த ஸ்ரீ கார்த்திகை மீ 2ம் நாள் [17-11-74] ஞாயிற்றுக்கிழமை.**

மாலை 6-30 மணி — விக்கிநேஸ்வர பூஜை; அனுக்ஞை.
கர்மாரம்பம்; திரவிய பூஜை.

இரவு — கிராம சாந்தி,
பிரவேசபலி; வாஸ்து சாந்தி.
நவக்கிரக ஹோமம்; ரக்ஷோக்ந ஹோமம்.
மிருத்சங்கிரகணம்; அங்குரார்ப்பணம்.

**3ம் நாள் [18-11-74] திங்கட்கிழமை.**

பகல் — ரக்ஷாபந்தனம்; கலாகர்ஷணம்; கடஸ்தாபனம்.
இரவு — யாக பூஜை; அக்கினி விபஜனம்; ஹோமம்; சயனரோபணம்;
ஸ்தூபிப் பிரதிஷ்டை; யந்திரஸ்தாபனம்; பிம்பஸ்தாபனம்;
அஷ்டபந்தனம்.

**4ம் நாள் [19-11-74] செவ்வாய்க்கிழமை.**

யாக பூஜை.

**5ம் நாள் [20-11-74] புதன்கிழமை.**

பகல் — தைலாபிஷேகம் (எண்ணெய்க்காப்பு), பிம்பசுத்தி.
இரவு — பூர்வசந்தானம்; விஷேசத் திரவிய ஹோமம்; ஸ்பர்ஸாகுதி.

**6ம் நாள் [21-11-74] வியாழக்கிழமை.**

ஸப்தமித் திதியும் அவிட்ட நக்ஷத்திரமும் கூடிய மகரலக்கின சுப
முகூர்த்தத்தில், ''மகாகும்பாபிஷேகம்'' தச தர்ஸனம்.
(மு. ப. 10மணி 10நிமிஷம் — 11மணி 22நிமிஷம்)
எஜமான் அபிஷேகம்; மகாபிஷேகம்.

அலங்கார உற்சவம். — அதுமுதல் 10 தினங்கள் பகலில் அபிஷேகமும், இரவில் திருவிழாவுமாகத் தொடர்ந்து நடைபெறும்.

குறிப்பு: அன்பர்கள், அடியார்கள், ஆதியோர் அளிக்கும் அபிஷேகத் திரவியங்கள், காணிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

மொடேண் அச்சகம் - கல்முனை.

ஓம்
ஸ்ரீ திருநீலகண்ட விநாயகர் துணை



# பாலஸ்தாபனம்

பக்த சீலர்களே,

நிகழாண்டு யுவ வருடம் பங்குனித் திங்கள் [illegible]ஆம் நாள்

**(03—04—96) புதன்கிழமை அன்று**

அதிகாலை **5-00** மணிக்கு பிரம்ம முகூர்த்தத்தில் எம்பெருமான்

ஸ்ரீ திருநீலகண்ட விநாயகர்

**மற்றும் பரிபாலன தெய்வங்களுக்குமான**

பாலஸ்தாபன கிரியைகள் நடைபெறும்.

**02—04—96 செவ்வாய்க்கிழமை இரவு கிரியைகள் ஆரம்பமாகும்.**

மேற்குறித்த கிரியைகள் யாவும்

சித்தாந்த வித்தகர், செஞ்சொல் கொண்டல், ஆச்சாரியதிபம் அருட்கவியரசு

**விஸ்வப் பிரம்ம ஸ்ரீ வை. இ. எஸ். காந்தன் குருக்கள்**

தலைமையில் நடைபெறும்.

உதவிக் குருமார் :

**சிவஸ்ரீ வே. கருணாகரன் ஐயா** (ஆலயக் குருக்கள்)

மற்றும் பிரம்மாதின குருகுல மாணவர்கள்.

அனைவரும் கலந்து இறைபணியில் இன்புறுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.


இங்ஙனம்,

ஸ்ரீ திருநீலகண்ட விநாயகர் ஆலய
பரிபாலன சபையினர்.


ஆரையம்பதி.

குறிப்பு: அன்பு அடியார்களே, எம்பெருமான் ஸ்ரீ திருநீலகண்ட விநாயகர் ஆலயத் திருப்பணிக்கு உதவிபுரிய விரும்புவோர் ஆலய பரிபாலன சபையினரிடம் தொடர்பு கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.


ஆதவன் அச்சகம், அரசடி, மட்டக்களப்பு.



மூல விநாயகர்



சங்கற்பம்




யாக சாலை



ஆலய மண்டப உட்தோற்றம்



புதிய மூர்த்திகள் கிராமிய வலம் வருதல்




ஸ்தூபி அபிஷேகம்



குருமார் ஆசியுரை



1995ம் ஆண்டு இடம் பெற்ற
பாலஸ்தாபனம்



**1954ம் ஆண்டு இடம் பெற்ற கும்பாபிஷேக நிகழ்வின் போது**



**மாரி அம்மன் ஆலய முகப்புத் தோற்றம்**

## மண்டலாபிஷேக பூசை உபயகாரர்கள்

**2008.02.11 அன்று நிறைவுபெற்ற மகா கும்பாபிஷேகத்தினைத் தொடர்ந்து 32 நாட்கள் நடைபெற்ற மண்டலாபிஷேக விசேட பூசைகளை மனமுவந்து நிறைவேற்றிய உபயகாரர்களின் விபரம் வருமாறு:**

- 1ம் நாள் திரு.த.செல்வநாயகம் குடும்பம், மட்டக்களப்பு.
- 2ம் நாள் திரு.நாராயணதேவா குடும்பம், ஆரையம்பதி.
- 3ம் நாள் திரு.பாலசிங்கம் குடும்பம், ஆரையம்பதி.
- 4ம் நாள் திரு.க.சிவபாதசுந்தரம், திரு.சு.சே.இராமச்சந்திரன் குடும்பம், ஆரையம்பதி.
- 5ம் நாள் திரு.ச.கந்தையா குடும்பம், ஆரையம்பதி.
- 6ம் நாள் திரு.சிவ.விவேகானந்த முதலியார் குடும்பம், ஆரையம்பதி.
- 7ம் நாள் திரு.சிவலிங்கம் குடும்பம், தாமரைக்கேணி.
- 8ம் நாள் திருமதி.அருளம்மா குடும்பம், ஆரையம்பதி.
- 9ம் நாள் திரு.யோகானந்தம் குடும்பம், மட்டக்களப்பு.
- 10ம் நாள் திரு.சபாரெட்ணம் குடும்பம், ஆரையம்பதி.
- 11ம் நாள் திரு.ச.மணிசேகரன் குடும்பம், ஆரையம்பதி.
- 12ம் நாள் திரு.செ.கமலநாதன் குடும்பம், ஆரையம்பதி.
- 13ம் நாள் திரு.காசிப்பிள்ளை குடும்பம், ஆரையம்பதி.
- 14ம் நாள் திரு.சின்னப்பிள்ளை குடும்பம், ஆரையம்பதி
- 15ம் நாள் திரு.தேவதீபன் குடும்பம், ஆரையம்பதி.
- 16ம் நாள் திரு.பா.பிரபாநந்தன் குடும்பம், ஆரையம்பதி.
- 17ம் நாள் மட்/நொத்தாரிஸ் மூத்ததம்பி வித்தியாலயம், ஆரையம்பதி.
- 18ம் நாள் திரு.செல்வரெட்ணம் குடும்பம், ஆரையம்பதி.
- 19ம் நாள் திரு.த.இராசரெத்தினம் குடும்பம், மட்டக்களப்பு.
- 20ம் நாள் திரு.சீனித்தம்பி குடும்பம், ஆரையம்பதி.
- 21ம் நாள் திரு.நல்.அழகேசமுதலியார் குடும்பம், ஆரையம்பதி.
- 22ம் நாள் திரு.சுபராஜ் குடும்பம், ஆரையம்பதி.
- 23ம் நாள் திரு.துஷாகரன் குடும்பம், ஆரையம்பதி.
- 24ம் நாள் திரு.சாம்பசிவம் குடும்பம், ஆரையம்பதி.
- 25ம் நாள் திரு.ரெட்ணசிங்கம், திரு.சிவபாலன் குடும்பம், ஆரையம்பதி.
- 26ம் நாள் கோட்டைக்கல்லாறு மக்கள்
- 27ம் நாள் திருமதி.சந்திரா குடும்பம், ஆரையம்பதி.
- 28ம் நாள் திரு.சிவானந்தம் குடும்பம், ஆரையம்பதி.
- 29ம் நாள் திருமதி.ஞானசவுந்தரி குடும்பம், ஆரையம்பதி.
- 30ம் நாள் திரு.அ.மாரிமுத்து, திரு.பொ.இந்திரலிங்கம், திரு.ஆ.பரமேஸ்வரன் குடும்பம், ஆரையம்பதி.
- 31ம் நாள் திரு.நா.பாக்கியராசா குடும்பம், ஆரையம்பதி.
- 32ம் நாள் சங்காபிசேகம் ஆலய பிரதம குரு, பொதுமக்கள்.

**மேற்குறிப்பிட்ட அடியார்களுக்கு எம்பெருமானின் அருட்கடாட்சம் எப்போதும் துணைபுரிய வேண்டுமென இறைவனைப் பிரார்த்திப்பதுடன், கும்பாபிசேக ஏற்பாட்டுக் குழுவினரின் சார்பில் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.**

# ஆலயத் திருப்பணிகளில் உதவியோர்

**கும்பாபிஷேகத்தை நிறைவேற்றிய குருமார்கள்:**

- பிரதிஸ்டா பிரதம குரு - சாகித்திய சிரோண்மனி வேதாகம வித்தியாபதி சிவாகம குருமணி சிவஸ்ரீ குமார விக்கினேஸ்வர சிவாச்சாரியார்
- சர்வசாதகம் - வேதாகம உதயசூரியன் பிரம்மஸ்ரீ சௌந்தரராஜன் குருக்கள்
- ஆலயப் பிரதமகுரு - சைவ நன்மணி சிவஸ்ரீ வே.கருணாகரன் குருக்கள்
- சர்வபோதகம் - கிரியாமணி பிரம்மஸ்ரீ இரத்தினக்குருக்கள்
  வித்தியாசாகரம் சுந்தர திவாகரக் குருக்கள்
- உபசாதகர்கள் - பிரம்மஸ்ரீ சிவசங்கர சர்மா
- உப சிவாச்சாரியர்கள் - பிரம்மஸ்ரீ சண்முகநாதக் குருக்கள்
  சிவாகம சிரோண்மனி பிரம்மஸ்ரீ நடேஸ்பரக் குருக்கள்
  பிரம்மஸ்ரீ சிறிதரக் குருக்கள்
  வித்தியா பூசணம் பிரம்மஸ்ரீ லக்ஸ்மிகாந்த ஜெகதீஸ்வரக் குருக்கள்
- யாக சம்ரக்ஷகர்கள் - பிரம்மஸ்ரீ பத்மநாப சர்மா, பிரம்மஸ்ரீ சுதாகர சர்மா
  பிரம்மஸ்ரீ மகேந்திர சர்மா, சிவஸ்ரீ சண்முகதாஸ் குருக்கள்
  சிவஸ்ரீ கேதீஸ் குருக்கள்

| **கட்டிட நிர்மாணம் :** | **விக்கிர அமைப்பு:** |
|---|---|
| திரு.த.சிறிகரன் குழுவினர் (ஆரையம்பதி) | திரு.காண்டீபன் (யாழ்ப்பாணம்) |
| திரு.ரமேஸ் குழுவினர் (வந்தாறுமூலை.) | திரு.ராஜாராம் (காரைக்கால், இந்தியா) |

**மங்கள வாத்தியம் :**

திரு.பிரேம்குமார் குழுவினர் (கல்லடி)

**வர்ணம் :**

வர்ணக்கலைஞர் தெய்வீகக் கலைவாணன் துரைசிங்கம் ஜெகதீஸ்வரன் குழுவினர் (ஆரையம்பதி)

நீல கண்டரே திரு நீல கண்டரே!
நித்தம் உன் நித்திய பூசையிலே நின்று வணங்கும் போது
நிம்மதி எம் வாழ்வில் பெருகுதய்யா!
நீண்ட தொரு பயணம் சென்றோம் உன்
நிறை குடமுழுக்கை காண்பதற்கு
நீயே கதியய்யா எம் ஆரையூர் மக்களுக்கு.
நிர்பலனை நிர்மூலமாக்கி நீண்ட தொரு பெருவாழ்வு
நீ எமக்கு அருளவேண்டும் நீல கண்ட விநாயகரே!

பரசுராமமுதலி காண்டீபன்.

# நன்றியுரை


"காலத்தினால் செய்த நன்றி சிறி(து) எனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது"

எனும் வள்ளுவரின் வாக்கிற்கிணங்க எம் பெருமானின் ஆலய திருப்பணி வேலைகளில் 12 வருடகாலமாக நிதியுதவி, பொருளுதவி, சரீர உதவிகளை வாரி வழங்கி கும்பாபிஷேக நிகழ்வினை சிறப்புற நிகழ்த்துவதற்கு பல வகையிலும் ஒத்துழைப்பு நல்கிய அனைத்து மக்களுக்கும் நன்றியினைத் தெரிவிப்பதோடு, ஆகம சிற்பசாத்திரங்களுக்கு அமைவாக ஆலய நிர்மாண மற்றும் விக்கிரக அமைப்பினை கலை நயத்தோடு அமைத்து வழங்கிய ஸ்தபதிகள் மற்றும், ஆலயக் கட்டடத்திற்கு உயிரோட்டத்தினை ஏற்படுத்திய வர்ணக் கலைஞர்கள், மின் இணைப்பாளர்கள் குடமுழுக்கு வைபவத்தினை மிகவும் பக்தி பூர்வமாகவும் ஆகம விதிகளுக்கு அமைய சிறப்பாக நிகழ்த்திய குருமார்களுக்கும் மங்கள வாத்தியக் கலைஞர்களுக்கும், மண்டலாபிஷேக பூசையினை நிறைவேற்றிய உபயகாரர்களுக்கும் உளப் பூர்வமான நன்றிகள் உரித்தாகட்டும்.

மற்றும் இம்மலருக்கு ஆசியுரை, வாழ்த்துரை, வாழ்த்துப்பா, கவிதைகள், வரலாறுகள், ஆக்கங்கள் வழங்கிய சகலருக்கும் நன்றிகள் தெரிவிப்பதோடு இம்மலரினை மிகவும் அழகுற அச்சிட்டு விரைவாக வழங்கிய சண் அச்சகத்தாருக்கும் மிகவும் மனதார நன்றி தெரிவிப்பதோடு இப்புனிதமான கைங்கரியத்தில் ஈடுபட்ட அனைவருக்கும் எம் பெருமானின் அருட்கடாட்சம் கிடைக்கப் பிரார்த்திப்போமாக.

நன்றி.

கும்பாபிஷேக ஏட்பாட்டுக் குழுவினர்
ஸ்ரீ திருநீலகண்ட விநாயகர் ஆலயம்,
செங்குந்தர் வீதி,
ஆரையம்பதி.





சண் அச்சகம் – 05, இருதயபுரம் மேற்கு, மட்டக்களப்பு. 065-2222597